ஓம் பரப்பிரம்மணே நம :

# அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கி, ஆநந்தத்தைத் தரவல்லதான அநுபவ விநோத ஞான கலா விலாஸங்கள் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் - எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

" எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
COPY RIGHT] திண்ணிய ராகப் பெறின். " (திருக்குறள்.) [REGISTERED

கமலம்-4. Vol. 4. | சென்னை : சுக்கில௵ மாசி௴ 1௳ 1930-ம்௵ பிப்ரவரி௴ 12௳ | இதழ்-47. No. 47.

5821

## ஆநந்த தரிசனம்

" அதுவானால், அதுவாவர், அதுவே சொல்லும் " என்பது ஓர் அமுத வசனம். இதன் பொருளை இங்கு விளக்குவாம். உள்ளன்புள்ள ஓர் உத்தம ஸ்திரீமணியை அவளது இன்னுயிர்ச் சகி நோக்கிப் பரபுருடர் பல்லோரைக் குறிப்பிட்டு, அந்தப் பூமான்களில் ஒவ்வொரு புருஷோத்தமனையும் தனித் தனிச் சுட்டிக்காட்டி, "இவரோ உன் பிராணபந்து, அவரோ உன் இன்னுயிர்த்துணைவர்" என்று வினவாநிற்ப, அதற்கு அந்த வநிதாமணி தன் புருடரல்லாரை—இவரல்லர், அவரல்லர்—எனக் கூறி யொழித்து, ஆங்குப் பின்னர் வந்துற்ற தன்னினு மினிய தன் காதலனைக் கண்டதும், "தோழி! பொற்பாவாய், சித்திரத்தும் எழுதொணு வனப்பினன், தன்னைக் காண்பாரைத் தம்மை மீண்டும் காணுராக்கும் மன்மதனை வென்ற இப் பாலபாஸ்கரனை நீ யறிவையோ" எனக்கேட்ட சமயம், தான் புன்முறுவல் பூத்தாளாய் மௌன மூற்று மனம் ஒரு நிலையிலடங்கித் தலைவணங்கி நின்றனளாம். அந்த நாரீமணி நின்ற மௌனக்காட்சியேபோல், பொருளல்லாதவற்றைப் பொருளல்லவெனப் போதித்த வேதமானது பரம்பொருளாம் பரம மூர்த்தியைச் சொல்ல வந்த இடத்தில் அதைப் பிரஸ்தாபியாது மௌனக் காட்சியின் வழியில் நின்று விளக்கிடுமென்று கூறுவர் விஞ்ஞான சீலர். தனது உண்மைக் காதலனைக் கண்ட இடத்தில் பெண் கொடியானவள் அந்தப் பூரிப்பில் தானே பூரித்துத் தலைநாணி மௌனங்காட்டி நின்றமையேபோல், உண்மைப் பொருளாகிய ஆதி நாதனைக் கண்டாரும் அதுகாலை சொல்லடங்கி, செயல் அடங்கி, மனம் அடங்கி யாவும் அவ்வொரு தனிப்பெரும் பொருளினையே பற்றியடங்கா நிற்

பப் பரமானந்தராய் மௌனநிலை காண்பர் என்பதும் இதன் கருத்தாகும். "அதுவானல், அதுவாவாவர், அதுவே சொல்லும்" என்றதும் இந்தப் பொருளை யடக்கியே தான். "அதுவாவர்"—என்பது மனம் முதலிய அந்தக்கரணப் பிரதிபந்தகங்கள் தலை தூக்கியாடும்வரை கைகூடாததாகும். வீட்டை, வீட்டின் அருகில் வந்தபிறகே தான் சேரக்கூடும். அவ்விதமே முத்தி வீட்டின் அருகில்வந்து வீட்டையடைந்து சேர்ந்தவரே மெய்ஞானிகளும் மெய்யடியார்களுமாவர். இவ்வாறின்றி வீடு தூரமாயிருக்கையில், இன்னும் அந்த வீடு தன் கண்ணுக்கு எதிர்ப்படாதிருக்கையில், தான் இன்னும் அவ்வீட்டின் அருகே வந்து சேராதிருக்கையில், அவ்வீட்டை யடைதல் கூடுமோ? வீட்டை யடைந்துவிட்டதாயும் கண்டுவிட்டதாயும் நெருங்கிவிட்டதாயும் புன்மொழி பேசுதல் பொருந்துமோ?—அது உண்மை மொழியாமோ? வீடு இன்னதிக்கில் இருக்கிறதென்று முதன் முதல் உணர்தற்கும் ஞானப்பக்குவம் வேண்டாமா? இந்தப் பெரிய மகத்துவ பக்குவம் இல்லாத மக்கள் இறந்தபின்னர்—கைலை சென்றனரென்றும், வைகுண்டம் சேர்ந்தனரென்றும், பரலோகங் கண்டனரென்றும் பல பல கடிதங்கள் பலர்க்கு வரைவதிலே அதில் உண்மையின் ஒளி உண்டோ? அது உண்மைப்படுமோ? அது வீண் மொழியேயாம்; வெறும் உபசார வாசகமாகவே முடியும். மக்களிற் பெரியரான தெளிந்த ஞானியர் தமது ஜீவகாலத்தில் தாமே முக்தி வீடு இருக்கும் திசையும் இடமும் தெரிந்துகொண்டவராய், தாம் இருந்த இடத்திற் கருகிலேயே அந்த முக்தி வீடு இருக்கிறதென்பதையும் உணர்ந்தோராய், தாம் இருந்த விடத்திருந்தே வீட்டை நெருங்கி, அதை யடைந்து சுகித்ததுவும், சுகிக்கின்றதுவும், இனியும் சுகிப்பரென்பதுவும் பிரத்தியக்ஷமன்றோ?

ஃ

"கண்ட என்னையும் கண்டிலன் என்னேடி தோழி?" என்று தமது சிவபோத ஸ்வாநுபவத்தை பொன்மொழிச் செல்வரான பெரியார் சொல்லாமற் சொல்லிக் காட்டியுள்ளார். பெண்மணி யொருத்தி தன்னின்னுயிர்க் காதலனைத் தழுவித் தழுவி தன் உருவையே காணாது மறந்தவளாய், எப்புறம் நோக்கினும் தனது காதலனின் தோற்றமே காண்பவளாய், அத்தனை ஆநந்தத்துடனும் சிற்றின்ப சுகாநுபவச் சுவையை யுணர்வதாக வைத்துக்கொள்வோம். அதன்பின் அவள் செய்வதென்ன? தான் கண்ட இன்பரசத்தை யுன்னி யுன்னிக் களிப்பில் ஆழ்ந்திடுவாள்; தன் உயிர்த்தோழிகளிடம் நிகரற்ற அவ்வின்ப நுகர்ச்சியை நகை முகமாய் உரையாடித் தெரிவித்து, அத்தோழியரையும் மகிழ்வித்துத் தானும் ஆநந்தம் பூத்துத் தோன்றிடுவாள். அத்தன்மைபோலவே, தொண்டராம் ஞானியர் தாங்கள் கருணை மூர்த்தியான எம்பிரானை அடைந்து கண்ட பிரம்மாநந்த சுகாநுபவத்தை மற்றவர்க்குஞ் சொல்லி அப்பெண்மணியைப்போல் தமக்குத் தாமே மகிழ்வதற்காகவும், தம்மைப்போலவே மற்றவரும் அந்தப் பேரானந்தப் பெருவாழ்வை அடைந்து சுகிக்கும்படிக்குமாகத் தாம் கண்ட ஞானநுபவங்களை உலகமாந்தர்க்கு விளக்கி ஒருவாறு சூக்ஷ்மமாய் சூசிப்பிக்கலாயினர். "விளையுஞ் சிவாந்த பூமி, அந்த வெட்டவெளி நண்ணித் துட்டவிருளாங்களையைக் (களை-குற்றம்,

---

வீட்டைச் சுத்தப்படுத்தி மெழுகுவதில், அத்துடன் தங்கள் மனத்தையும் சுத்தப்படுத்தி மெழுகுதலான சாயலும் கூடவே தொடர்கின்றது கண்டீர்.

மா கி.) களாந்து பின் பார்த்தேன், ஐயன் களையன்றி (களை-அழகு, ஒளி.) மற்றொன்றுங் கண்டிலன் றோழி'' என்று உரைத்ததும் ஞானியர் உலகுக்குத் தமது அநுபவத்தை வெளியிடும் நோக்கமாகவே தான். சிற்றின்பமே பேரின்பத்தை யநுமானித்தற்குப் பெருங்கருவி யாதலால், சிற்றின்பச் சொல்லைக் கொண்டே பேரின்பத்தைக் குறிப்பிடுவாராயினர். "ஐயரைக் கண்டேனடி—அம்மா, ஐயரைக் கண்டேனடி'' என்றார் திருவருட் பிரகாசவள்ளலார். அன்னோர் சொன்ன திறத்தை நினைத்து நினைத்துச் சுகிப்போமாக.

ஃ

"இகத்துள சுகத்திற்கு அளவு செய்கோலாய், பரத்துள சுகத்தை வரித்த சித்திரமாய்'' விளங்குவது மகளீர் இன்பமாம். ஐந்து புலன்களின் பேறிவும் ஆநந்தமெய்திநின்ற அவசரமே சிற்றின்ப மென்பர். பர்த்தாவும் பத்தினியும் தனித்தனி இரு உருவங்களென்ற பேத நோக்கு முற்றுமே ஒழிந்து சில நிமிஷங்கள் வரையில் இருவரும் ஓர் உருவே—இருவரும் ஒன்றே யென்ற தன்மை பெற்றபோது சிற்றின்பமும் உதயம் கொள்கின்றது. அவ்வின்பத்தையும் ஸ்திரீ புமான்களாவார் தத்தம் இடமே பெற்றதன்றி ஒருவரிடத்திலிருந்து மற்றவர் கைப்பற்றி எடுத்துக்கொண்டதில்லை; அடைந்ததுமில்லை. இருவருள்ளும் ஒருவர் கண்ட இன்பம் எத்தகைய சுவையினதென்பதையும் மற்றவர் அவர் காலமுழுதும் அறிதற்குமில்லை. அவரவர் தமக்குத் தாமே கண்ட சுகத்தினது அநுபவம் அவரவர்தமக்கே யாகி, பிறரொருவர் அறிந்திட இயலாத தனித்தனி இன்பமாய் தம் தம்மோடேயே நின்றுவிடுகின்றது. இவ்வின்பம் காண்பதன் பொருட்டுமட்டுமே ஒருவரை மற்றவர் உதவுக்கு அழைத்து ஒருவர்க்கொருவர் துணையாகின்றார். அவ்வளவேயன்றி அவரவரது அநுபவம் வெவ்வேறு கொண்டதே. பரஸ்பரம் பிரேம திருஷ்டியால் உள்ளமும் உடலும் ஒன்றுபடக் கலந்து பூரண ஐக்கிய சந்தோஷம் பூத்து இயல்பாயுண்டான மெய்க்கவர்ச்சியால் பரவசப்பட்டுக் கூடிச் சுகித்த ஸ்திரீ—புமான்களிலெவரேனும் ஒருவரது அநுபவங்களை இன்னொருவர் இன்னோரன்ன தன்மைத்தென முடித்துச் சொற்றொடர்கொண்டு விரித்ததுண்டேயோ? அங்ஙனம் சொல்லும் ஆற்றல் அமைந்தார் யாவரோ கூறுவீர்! இவ்வின்பம் அறுசுவையி லொன்றாகவேனும், வேறாகவேனும், பேச வொவ்வாததாகி மயங்குவதொன்றாய் முடிந்ததால், அது அநுதினமும் புதுமைப்படுவதாகிப் புதிய அவாவும் அதனிடத்துப் புகுந்து எழுவதாகின்றது. இந்த சுகாநுபவக் கடல் இத்துணை மாட்சிபெற்றதேயெனினும், இந்த சுகம் க்ஷணத்திலேயே மாறி யொழிவதால் அஃது சிற்றின்பமென ஓதுக்கப்பெற்றது. வெற்றெலும்பைக் கடித்துக் களித்த சிறு நாயொன்று தன் பற்களிடையே வந்த தன் உதிரத்தையே எலும்பின் உதிரமாயெண்ணி யுறிஞ்சிக் கிடந்ததுபோன்றே, சிற்றின்பத்தில் மூழ்குவாரது நிலைமையு முளதென்பது ஆழ்ந்து யோசிப்பார்க்

---

உத்தம வயதடைந்த வனிதைகளாகிய தாம் மணந்த தர்ம பத்தினிமார்களை அவர்களது மனோரதத்தைப் பூர்த்திசெய்யாது பர்த்தாவின் சோகத்தாற் பிரிவாற்றாது அவலமுற்றுக் கிடப்பவிட்டு, காலகூட விஷத்தைவென்ற உள்ளத்தைப்பெற்ற ஜகன்மோஹன வடிவமைந்த பல வேசைகளின்கண் வலைப்பட்டு அஹோராத்திரம் அன்னோரோடு கூடிக் கிரீடித்துத் சுகிக்கும் பிரபுக்களெத்தனை பேர்! பிரபுவல்லாதாரும் எத்தனை பேர்!

ருப் பிரகாசப்படும். சிற்றின்ப காரியத்திற்குத் துணையாக மானிடர் தம்மை யொத்த மற்றொரு சாமான்ய சிறு உருவினையே உதவிக்கு வேண்டுவோராகின் றனர். பேரின்பத்தின் கண்ணோ பெரியோரான மாந்தர் தமக்கும் உலகுக் கும் பெரியோரான பரம மூர்த்தியின் பெரியதொரு துணையையும் அருளை யுமே நாடுகின்றனர். எனவே, சிற்றின்பம் சீ சீ என்று முடிவில் இகழப்படுவ தாகி பேரின்பமே நாட்டமாகின்றது. சிற்றின்பம் கண்டு, அதன் சிறுத்த இன்பத்தில் அதிர்ப்திகொண்டு பேரின்பத்திற்கு முயலும்படி இல்வாழ்க்கை யின் ரீதியானது போதிக்கின்றது. மேன்மாடியில் ஏறுவதற்கு ஏணி துணை யாவது போன்று, சிற்றின்பமும் பின்னர் பேரின்பங் காண ஒருவழியில் உப யோகப் பொருளாய் ஒரு ஏணியாய் உதவுகின்றதெனக் கொள்க.

ஃ

"ஓம்" கடுகைத் துளைத்துக் கடலை யடைத்ததுபோல ஸர்வோத் கிருஷ்டமான வேதாந்த தத்வங்களையும் ஒருமித்து உருட்டித் திரட்டிச் சாரசங்கிரஹமாகச் செய்யப்பட்டது "ஓம்" என்ற மூலப்பிரணவ மந்திர மாகும். (அ+உ+ம்) அகர, உகர, மகரங்களால் அம்மந்திரம் ஆக்கப்பெற் றதை யுணருங்கால திரிமூர்த்தித் திவ்யஸ்வரூப லக்ஷணம் விளங்குமென்பது திண்ணம். வாய் பிளந்த அவசரம் **அகரம்** பிறந்தது. பிளந்த வாய்மூட யெத்தனித்த அவசரம் **உகரம்** தோன்றியது. மூடிய தருவாயில் **ம்காரம்** சப்தித்தது. வாய் பிளந்து மூடுமிடையிலன்றோ சப்தங்களும் சர்வ பாஷை களும் வெளியாகும். எனவே, பிரணவத்தைச் சப்த மாதாவென வேதாதிகள் வந்தியானின்றன. சப்தமே ஜகத் ஸ்ருஷ்டிக்குக் காரணமாம். "சப்த நிஷ்டம் ஜகத்" என ஓதியது சுருதி. **அகரம்** சிருஷ்டியையும், **உகரம்** திதியையும், **ம்காரம்** ஸம்ஹாரத்தையும் சூசிப்பித்தன. அகரம் பிரமனுக்கிடம், உகரம் விஷ்ணுவினிடம், ம்காரம் சிவனிடம் என்று கூறுப. அகரம் சாக்கிரத் தையும், உகரம் ஸ்வப்பனத்தையும், ம்காரம் சுழுத்தியையும் குறிப்பிக்கும் என்று பெரியோர் கூறலுற்றனர்.

ஃ

"மதம் கெட்டால் பதம் கெடும்." அவரவர்க்கு அவரவர் மதம் உயர்வு. "என் மதம் ஒன்றே சத்யம்; உன் மதம் முழுதும் உன்மத்தம்" எனப் பரக்கக் கூறி வெளிப்படுவாரின் பேதமை படிப்பறியாப் பெண்மணியும் நகைக் கும் பான்மைத்தேயாம். உப்பால் அமைந்த பிரதிமையொன்று ஒருகால் ஸாகரத்தை ஆழங்காண எண்ணங்கொண்டு அதில் இறங்கித் தன் உருக் கரைந்து மறைந்ததென்பர். அக்கதைபோன்றே, மததூஷக உப்புப் பொம் மைகளும் பிறமத ஸாகரத்தை ஆழங்காணச் செல்வதும் முடியும். போலிப் பக்திமான்களுடையவும், மத தூஷகர்களுடையவும் ஹிருதயம் பிரகாசமற் றுப் பேரிருள் மூடிய நடுநிசியையே யொத்திருக்கும். இன்னோருக்கோ இகத்தி லமையும் சமயங்கடந்த ஞானம்? இத்தகைய பெரும்பேதையரோ அறிய

---

ஐரோப்பிய மஹாகலை ஞானியர் 19-ம் நூற்றாண்டிற் கண்ட நவீன சாஸ்திர முடிவுகளையும்—மூவாயிர வருட முன்பே சூசிப்பித்த தவவடிவமா வார் ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள். அவர் அருளிய மெய்வீசும் திருவாக்கால் இந்த உண்மை இனிது விளங்குமென்ப. அஷ்டமா சித்திகளையும் அடிமை கொண்டோராவர் ஆசாரிய ஸ்வாமிகள்.

வல்லார்—நம் மன வாக்குக் காயங்களைக்கடந்து நீற்றலையே குணமாகவுடைய குணரஹிதப் பெருங்கடலை? எந்த விஷயத்தையும் உண்மை விசாரணை செய்வதன் பொருட்டு வெளிப்படும் நல்லோர் அவ்வவ்விஷயத்தை ஸ்தூலக் கண்கொண்டு பாராது மனக்கண்கொண்டு பார்க்கக்கடவர். சூர்யனை ஸ்தூலக் கண்கொண்டு நோக்குவோர் அவனைச் சாணளவுள்ளவனாகவே காண் பாராயினும், சாஸ்திர நோக்கத்தாற் காண்போர் இப்பெரும் பூமியினும் எத்துணை யெத்துணையோ பெரிய பதார்த்தமாமெனவே முடிப்பர். **“எப்பொருள் எத்தன்மைத்தாயினு மப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.”** இம்மண்ணுலகத்தே அவ்வப்போது தோன்றி நிலவிய ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு பக்குவத்தை யுத்தேசித்து ஒவ்வோ ரவசரங்களில் பற்பல நன்மைகளை நாடியே எழுந்ததென்றபடி. அவரவர் சமய உணர்ச்சி அவரவர் அறிவைப் பொறுத்ததேயாகும். கீதையில் பகவான் சமயங்களெல்லாம் முத்துக்களாகவும், தாம் அவற்றின் கோவைக் காதாரமாகிய சரடாகவும் அமைந்துள்ளதாகக் கூறிய உண்மை இங்கு சிந்திக்கற்பாலதாம். எவ்விதத்திலேனும் ஜீவகோடிகள் பாழாகாது பயிராய்த் தழைக்க வேண்டுமென்பதே எல்லா மதங்களின் ஒரு தனிக்கொள்கை. கடவுள் ஒருவரே யென்பதும் சர்வ சமய சம்மதம்.

ஃ

**ஸ்வாமி விவேகாநந்தர் கூறுகிறார்:**—“நான் ஒரு கிறிஸ்தவனை ஹிந்து மதஸ்தனாக மாற்ற விரும்பினால், கடவுள் என்னைத் தடுப்பாராக. நான் ஒரு ஹிந்து மதஸ்தனையாவது, பௌத்தனையாவது கிறிஸ்தவனாக வேண்டுமென்று நினைப்பேனானால், கடவுள் தடுப்பாராக. விதை நிலத்தில் விதைக்கப்பட்டிருக்கிறது. சுற்றிலும் மண் தண்ணீர் காற்று அமைந்திருக்கிறது. அவ்விதை மண்ணாகவேனும், தண்ணீராகவேனும், காற்றாகவேனும் மாறுகிறதா? இல்லை. அது செடியாகி, தன் இயற்கை விதிப்படி காற்று, மண், தண்ணீரைச் சுவீகரித்துத் தன்னினமாக்கிக்கொண்டு மரமாக வளர்கிறது. மத விஷயமும் அதே மாதிரிதான். கிறிஸ்தவன் ஹிந்துவாகவாவது பௌத்தனாகவாவது ஆகவேண்டியதுமன்று. ஆனால், ஒவ்வொரு மதஸ்தரும் மற்ற மதஸ்தர்களுடைய சாராம்சத்தைக் கிரகித்துத் தன்னில் ஐக்கியம் செய்துகொண்டு தன்னின முறைப்படி விருத்தி யடைய வேண்டும்.”

திருடனின்
கத்தரிக்கோல்
தீய காரியங்களுக்கு உதவ, பத்திராசிரியரின் கத்தரிக்கோல் நல்ல குறிப்புகளைக் கத்தரித்துப் பொறுக்கவும், வரும் வியாசங்களிலுள்ள ஆக்ஷேப விஷயங்களைக் கத்தரித்து நீக்கி விடவும், பயன்படுகிறது. “நான் பிரசுரித்துள்ள சில வியாசங்களில் **‘ஆசிரியரின்கத்தரிக்கோலை’**த் தாராளமாக உபயோகித்திருக்கிறேன்” என்றார் ஸ்ரீ தேசாய் என்ற பத்திராசிரியர். கள்வனின் கத்தரிக்கோல் கெடுதிக்கு. ஆசிரியரிடமுள்ளதோ நலம் செய்வதற்காகும்.

அமிர்தகுணபோதினி

சுக்கிலஹு மாசிமீ 1௳

# ஏமாறுவதில் ஏற்படும் சக்தி.

## II

"ஆவது விதியெனில் அனைத்துமாயிடும்,
போவது விதியெனில் எவையும் போகுமால்"

—என்று கூறித் தங்களின் ஏமாறிய நெஞ்சைச் சமாதானப் படுத்திக்கொள்ளும் மாந்தர் எத்தனை பேர்? விதியினால் சோர்கின்ற காலத்தின்வாய்ச் சிக்கினோர்க்கு எவ்வித மனோவுறுதியும் பயன் தராவாம். எத்தனைதான் திடம் கொண்டிருப்பினும், பல காலங்களின் அநுபவமே படைத்திருப்பினும், எச்சரிக்கை எவ்வளவு பெற்றிருப்பினும்—அத்தனையும் அந்த சமயத்திற்கு உதவாததாகி எவ்விதமோ ஏமாறிவிடுகின்றனர். தொட்டதும் பிழைபடுகின்றனர். அதனைத் தொடர்ந்தே சூழ்கின்றது தீவினையும்! காலத்திற்கேற்ற புத்தி யென்பார்கள். விதிவசத்திற்குத் தகுந்தபடி வருகிறது பொல்லாத வேளையும். ஏமாறிய நெஞ்சின் பெருமூச்சும், தவிப்பும், திகைப்பும், கலக்கமும், கண்ணீரும் சொல்லவுங் கூடுமோ? எல்லாம் முன்னரே நன்கு தெரிந்திருந்தும் ஏன் அந்தப் படுபாவியை மீண்டும் நம்பி ஏமாறினோம் என்று ஏங்குவதும் எத்தனையோ சமயங்களிலன்றோ? ஏமாறுவதென்பது தனது புத்திக் குறைவால் நேருவதாகவும் இருக்கலாம்; விதியால் அறிவு மயங்கி அதனால் விளைவதாகவும் ஆகலாம். இவ்விதம் ஏமாறுவதை ஐந்து விதங்களாகப் பிரிக்கலாமென்றோம். ஒவ்வொரு ஏமாற்றத்தின்போதும் ஒவ்வொரு ஜீவ சக்தி புதிதாய் எழுகின்றது.

ஃ

### 1. சோம்பியும் தவறியும் ஏமாறுவதில் ஏற்படும் சக்தி :—

உலகின்கண் ஏமாறாதவர் எவர்? ஏமாறியதின் பின்னரே தெளிவான அறிவு வரப்பெறுகின்றது. ஏமாற்றமடைந்த பிறகு

---

அங்குள்ள ஒரு உயிரும், இங்குள்ள ஒரு உயிரும் எவை யெவை கருதி எண்ணமிடுகின்றதென்று உனக்குத் தெரியுமா? தெரிய முயலினும் கூடுமா?

எவ்விதத்தில் அந்தக் குறைவை நிவர்த்திப்பது என்று எண்ணமிடு கிறுன். இவ்விதமான எண்ணம் தோன்றுதல் எந்த சமயத்தில்—எப் பொழுது நேரும் என்பதை வரையறுத்துக் கூறமுடியாது. ஏமாற்ற மடைந்ததற்குப் பிறகு எவ்வளவோ காலத்திற்கு மேற்பட்டு இந்த எண்ணம் உதிக்கலாம்; அல்லது ஸமீப காலத்திலேயே உண்டாக லாம். இது அந்தந்தக் கால சந்தர்ப்பங்கள் எதிர்பட்டுக் கொள் வதைப் பொறுத்தது. அது என்று எதிர்படுமோ சொல்வதற்கில்லை. தான் சிறுபோதில் சரிவரக் கற்காது சோம்பி ஏமாறிப் போயினதற் குப் பெரிதும் வருந்துதலான ஒரு தெளிவை ஒருவன் ஒரு காலத் திற் பெற நேர்கிறது. அந்த சமயத்தில் சிறு பதவியினின்றும் மேல் பதவிக்கு அவன் உயரும் சந்தர்ப்பமா யிருக்கிறது. அந்தப் புதிய பதவிக்கு வேண்டிய கல்வி அம்ஸங்கள் தன்னிடத்தில் அவ்வளவாக இல்லை யென்பது அவன் நெஞ்சுக்கு மட்டும் தெரியும். வெளியில் எவருக்கும் அந்தக் குறை புலப்படாது. தனக்குப் புதிதாய்க் கிடைத் துள்ள உன்னத பதவியைத் தாங்கித் தரித்தற்கேற்ற கல்விப் பெருக் கைத்தான் பெருமல் தனது சோம்பலும் அறியாமையும் காரணமாக ஏமாறிவிட்டதற்கு ஏங்குகின்றுன். சென்றுவிட்ட தனது இளமைப் பருவத்தில் நன்கு கற்றிருப்பின் இப்போதைய வேலை தனக்கு எவ்வ ளவோ சுலபமாக இருக்குமே—ஏமாறிவிட்டோமே யென்று சிந்திக் கின்றுன். இந்த சிந்தனையின் பயனுக முதலில் தோன்றும் மனமாறு தல் ஏக்கமாகும். இந்த "ஏக்கம்"—தூக்கத்தைப் போக்கி, ஊக் கத்தை * ஊக்கி, † ஆக்கத்தை ஆக்கி, நோக்கத்தைப் பூர்த்திசெய்து விடுதற்கான ஒரு புதிய சக்தியைத் தோற்றுவிக்கின்றது. இந்த சக்தி யின் மூலமாகத் தனது கல்வியறிவுக்கு மேம்பட்ட பதவியையும் வரு ந்தி உழைத்து முயன்று நிர்வகித்துவிட அவன் திறமையுள்ளவனுகி விடுகின்றுன். அவனது குறைபட்ட கல்வியும் அவனது சலியா ஊக்கத்தின் காரணமாகவும்—இடைவிடாத உழைப்பின் காரண மாகவும் விருத்திகொண்டு ஒரு மேதாவியாகும்படிச் செய்துவிடு கின்றது. அவனும் அந்த உயரிய ஸ்தானத்திற்குத் தகுந்தவனே யென்று பாராட்டப்படுகின்றுன். அந்தரங்கத்தில் தன் குறைகளை உணர்ந்து, அதை அந்தரங்கமாகவே திருத்திப் பூர்த்தி செய்துகொண்டு, வெளிமுகத்தில், தான் யாதொரு சிரமமுமின்றியே தனது இயற்கைச் சாமர்த்தியத்தால் அப்பதவியை வகித்து வருவதாகப் புலப்படுத்திக் கொள்ளுகின்றுன். பிறகு தேறி, அதற்கும் மேலான தாயுள்ள பதவி கட்கும் அருகனுகக்கூடிய பக்குவத்தை அவன் கொண்டுவிடுகிறுன். இவ்வித புதிய சக்தியானது அவனுக்கு மேலான பதவி கிடைத்த காலத்தில், அப்பதவியை ஏற்கத் தனக்குக் கல்வித்திறன் அவ்வள

---

* ஊக்கல்—அதிகப்படுத்துதல், எழுப்புதல். † ஆக்கம்—செல்வம், லாபம், பெருக்கம்,

வாகப் போதாதே என்று ஏங்கி ஏமாற்றமடைந்த தன்மையினின்றும் தோன்றியதாகும். அப்புது பதவி எதிர்கொள்ளுங் காலத்தை முன்னதாக அறிந்து சொல்லுதற்கு முடியுமோ? — முடியாது. ஆகவே, இந்த ஏமாறுவதில் ஏற்படும் சக்தி எப்பொழுது தோன்றக் கூடுமென்பதை எவராலும் நிச்சயிப்பதற்கில்லை. அது வெகு நாட் கழிந்தும் வரலாம்; சீக்கிரத்திலும் வரலாம்; ஒருசமயம் நாளை தபாற்காரன் கொண்டுவருகிற கடிதத்திற்குள்ளும் அது புகுந்து கொண்டு இருக்கலாம்; இந்த நிமிஷமே வரினும் வரலாம். இறைவனே அறிவார் அதனை. அது அவரது அருள்.

ஃ

கற்கத் தவறியது போன்றே, தான் செய்ய முயற்சித்த காரியங்களிலோ, தொழில்களிலோ அடிக்கடி பிழைகண்டு தவறி மதிமோசமாகிவிடும் ஒவ்வொரு பொழுதிலும் அதற்குரியவன் ஒவ்வொரு விதமான ஏமாற்றத்தைப் பெறுகிறான். இந்த ஏமாற்றத்தில் ஏற்படும் புதிய சக்தியால் தனது முந்திய அறியாமையை யுணர்ந்து புதிய அறிவு வரப்பெற்று, ஒரு தெளிவைக் கண்டுகொண்டு, தான் இனித் தவறிப் போகாதிருக்க ஜாக்கிரதைப்பட்டவனாய் விடுகிறான். முன்பு ஏமாறியதற்குத் தனது சோம்பலும்—முன் அநுபவமின்மையுமே காரணமெனத் தெள்ளத் தெளிந்து, அக்குறைகளை அகற்றிக் கொண்டு, ஊக்கத்துடனே மீண்டும் முன்விட்டதையும் தவறியதையும் தொடர்ந்து புது முறையிற் செய்து சித்திபெறத் தன்னைத் தயாராக்கிக் கொள்கிறான். ஏமாற்றத்தின் பயனாகத் தேருவதில் இது ஒரு வகை. மேற்சொல்லியவை சோம்பியும் தவறியும் ஏமாறுவதில் ஏற்படும் சக்தியாகும்.

ஃ

2. தன்னைத்தான் காத்துக்கொள்ள முயன்று ஏமாறுவதில் தோன்றும் சக்தி :—

ஏமாறுவதும், ஏமாற்றுவதும் இயற்கையில் நிகழும் செய்திகள். புல், பூண்டு, பறவை, மிருகங்கள், மனிதன்—ஆகிய உயிர் வர்க்கங்கள் யாவும் கணந்தோறும் ஏமாற்றிக்கொண்டும் ஏமாறிக் கொண்டும் இருக்கின்றன. நெற்பயிரின் இடையே அதைக் கெடுக்கும் களையும் அதன் சாயலாகவே முளைத்து வளர்ந்து ஏமாற்றப் பார்க்கின்றது. பச்சைப் பாம்பு தன் பகைவர்களை ஏமாற்றித் தன்னைக் காத்துக்கொள்ளவும், தன் இரைகளைப் பிடிக்கவுமாகத் தான் இருக்கும் மரத்தினது இலையின் வர்ணமாகத் தன்னைத் தோற்றுவித்துக் கொள்கின்றது. சில செடி பயிர்களின் நிறத்தை யொத்தே

---

தமிழ்நாடு வெளிமாகாணங்களி லிருந்து தலைவர்களை அக்கிராசனத்திற்கு அழைக்கிறதே தவிர, மற்ற மாகாணங்கள் ஒரு தமிழரையாவது கூப்பிட்டுத் தலைமைவகிக்க அழைக்கவில்லை. தமிழ் நாட்டில் இது ஒரு பெரிய விசேஷம்

சில பூச்சி புழுக்களும் இருந்துகொண்டு பிறரது திருஷ்டிக்குப் புல னுகாவண்ணம் மறைந்து ஒளிந்து ஏமாற்றிவிடுகின்றன. இலைகளும் தமது வர்க்கமான காய்களை மற்றவர் பார்வைக்குத் தென்படாவாறு மறைத்து ஏமாற்றுகின்றன. புலிகள் தமது உடலில் மஞ்சள் வரிக ளூம் கருநிறக் கீற்றுகளும் இருப்பதனுல், அவை ஓங்கி வளர்ந்த கோரைப்புற்களுக்கு இடையிலும், மூங்கிற் புதர்களின் மத்தியிலும் நிற்குமாயின், அங்கு வருபவரின் கண்கட்கு அதன் இருப்பிடம் எளிதிற் புலப்படாது. ஏனெனில், கோரைப்புல், மூங்கிற்புதர் ஆகிய இவற்றின் நிறமும் புலியின் நிறமும் ஏறக்குறையப் பார்வைக்கு ஒன்ருயிருத்தல்பற்றி யென்க. இவ்வாறு இரண்டும் ஒருநிறமாய் ஒத்திருத்தலால் மான்கள் அங்கு புலிகள் மறைந்துள்ளதை யறியாது தம் இரைக்காகத் திரிகையில், புலிகள் அந்த மான்களின்மேற் பாய்ந்து இரை யெடுத்துக் கொண்டும், வேடரினின்று தப்பித்து ஏமாற்றிக்கொண்டும் உயிர்வாழ்கின்றன. இவ்விதமே, தீக்கோழிகள் மணல் வனங்களில் சற்றுத் தூரத்தில் நிற்குமாயின், அங்கு அவை நிற்பதானது நடந்தாலன்றிக் கண்கட்குப் புலப்படாவாம். அவ்வி டத்திய மண்ணின் நிறமும், அவற்றின் உடல் நிறமும் ஒன்றுபோலக் காட்டுதலால் வனவேடர்களது கணைக்கு இலக்காகாது ஏமாற்றிவிட்டு ஜீவிக்கின்றன. இங்ஙனமாக அவை தப்பித்துக் கொள்தற்கும், இரை தேடுதற்கும் முக்கிய ஹேதுவான அவ்வவற்றின் நிறங்கள் இயற்கையிலேயே அமைவுண்டிருக்கின்றன. இவ்விதம் மற்றதை ஏமாற்றித் தம்மைத் தாம் காத்துக்கொள்ளுந் தன்மையை இவ் வுலகின்கண்ணுள்ள ஒவ்வொரு ஜீவராசிகளிடத்தும் காணலாம். இங்ஙனம் ஏமாறப் பெறுகிற ஜீவராசிகள் தமக்கு இன்னின்னவை சத்துருக்களென்று தெரிந்து ஜாக்கிரதைப்படும் சக்தியையும் இயற் கையிலேயே கொண்டுள்ளன. பூனைக்கு அஞ்சி எலி பதுங்குவதும், பல்லிக்கு அகப்படாமல் ஈக்களும் பூச்சிகளும் தப்பிப்பதும், தமது ஜன்மசத்துருக்க ளில்லாத இடங்கண்டு மற்றவைகள் வாழ்வதும் நோக்கில், ஏமாறுவதிலிருந்து ஏற்படும் சக்தியை அவை இயற்கை யிற்ருனே பெற்றுள்ளன வென்பது விளங்கும். இயற்கையில் எவ் விதம் பெற முடிந்தது என்பது வினு? அவை ஏமாறுதற்குமுன் இந்த சக்தியை எவ்வாறு கொண்டன என்பது மற்றொரு வினு? இது தனக்குமுன் இவ்வுலகில் ஜீவித்திருந்து சென்றவைகள் தன் னைத்தானே காத்துக்கொள்ள முயன்று ஏமாறியதில் அவைகள் பெற் றுக்கொண்ட சக்தியினது பரம்பரையான ஞானத் தொடர்பாகும்.

---

**பிழை திருத்தம்:**—"அமிர்த குணபோதினி" 531-ம் பக்கம் 2-வது கலத்தில் 34-வது வரியில் ஒரு மாதத்திற்குள் என்பதை ஒரு வருஷத்திற்குள் என்றும், மாதத்திற்கு மேற்பட்ட என்பதை வருஷத்திற்கு மேற்பட்ட என் றும் திருத்திக்கொள்க.

### 3. மரணத்தால் பிரிந்து ஏமாறுவதில் உண்டாகும் சக்தி :—

வாழ்வும் சாவும் மனிதனுக்குள் அடங்கியதல்ல. மற்ற எந்த வகையிலும் மனிதன் தன் புத்தியால் மிக்க மேம்பட்டவனாயினும், இறந்த ஒன்றுக்கு மீண்டும் உயிர் கொடுக்கும் விஷயத்தில் அவனுக்கு ஒன்றுமே தெரியாது. கோழியின் முட்டையைப்போல் செய்துவிடலாம். அதற்கு உயிர் கொடுப்பது எப்படி? கர்ப்பத்திரை எனும் நவீன கருவியை உபயோகித்துக் கர்ப்பமுண்டாகாதிருக்கச் செய்யலாம். ஆனால் ஒரு குழந்தையைப் பிறப்பிக்க மானிடனால் இயலுமா? குழந்தைப் பேறின்றி எத்துணையோ பேர் அலறுகின்றனர். குழந்தையை யுண்டாக்க ஏதேனும் கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா? அழிக்கும் சக்தி மனிதனுக்கு இருக்கிறதே தவிர, ஆக்கும் சக்தி அவனுக்கு இன்னும் கிடைக்கவில்லை. தூக்குத் தண்டனை விதித்த நியாயாதிபதியும் கடைசியில் அடைவது மரணமே. சற்று முன்னே—பின்னே ; அவ்வளவே பேதம். உயிர் போவதால் ஏற்படும் ஏமாற்றங்கள் கடவுளால் அனுப்பப் பெற்றவை. இயற்கையில் ஸம்பவிப்பவை. அவற்றை விலக்கவல்ல வீரனும் ஒருவனுண்டோ? சாதாரண வாழ்க்கையில் பெண் வர்க்கத்தினிடையும், புருட வர்க்கத்தினிடையும் ஏற்படுகின்ற ஏமாற்றங்களே ஊக்கத்தை எழுப்புகின்றன. யாவற்றினுள்ளும் பெரிதாய்த் திடுக்கிடவைக்கும் மரணத்தின் அதிர்ச்சியும், அதன் ஏமாற்றங்களுமோ வேறொரு வழியில் மனிதனது ஊக்கத்தைத் தட்டி எழுப்பி, அந்த ஊக்கமே ஞானத்திற்கும் அடிப்படையாகின்றது. இங்ஙனம் மரணமென ஒன்று ஏமாற்ற வருவதின் காரணமாக, அதனால் பின்னர் தான் துன்பப்படாதிருக்குமாறு பரலோக பாக்கியத்திற்கான கடவுள் வழிபாடுகள், ஜப—தப—விரத—நியமங்கள், சுசீலம் முதலிய பரஸாதகமானவற்றை எவ்வளவு வரைக்கும் பெறுதற்கியலுமோ அவ்வளவுக்கும் முயல்கின்றனர். அத்துடன் தம்மையே நம்பி நிற்போர் தமக்குப்பின் கண் கலங்காவாறு காத்திடவும் நாடி தனராசிகளை வேண்டியவரை திரட்டிக் குவித்து உயிலும் எழுதிவைத்து—இவ்விதமாய் இகலோக ஸம்பந்தமான காரியங்களிலும் முன்னெச்சரிக்கையாய் விடுகின்றனர். இவ்வித முன்னெச்சரிக்கைகளானது மரணத்தால் பிரிந்து ஏமாறப் போவதை யுணர்வதனால் ஏற்படும் சக்தியாகும். இன்னொரு வகையாலும் குறிப்பிடலாம். ஒருவன் மற்றொருவனையே நம்பி நின்று தன் வேலைகளை அவன் மூலமாக நடத்துவிக்கின்றான். உதவியாக இருந்த அந்த மற்றொருவன் மரணமாகிவிடவும், அந்த ஏமாற்றத்தில் ஏற்படும் சக்தி இரண்டு ஆள் செய்யக்கூடிய வேலையை அவ்

---

அவரவர்கள் தங்களின் தொழில் ஸ்தானத்தில் இருந்து கொண்டு சொல்லும் பதில் வார்த்தைகளில், தங்களின் அநுபவத்தையும், தாங்கள் பழகித் தெரிந்த நிதானத்தையும் தீர்க்க தரிசனத் தன்மையையும் வெளியிடுகிறார்கள்.

வொருவனே செய்யும்படியான திறமையைக் கொடுத்துவிடுகின்றது. இவ்விதம் இருவர் செய்த வேலையை ஒருவனே செய்யக்கூடிய சக்தியை அதற்குமுன் பெற முடியவில்லை. இது மரணத்தால் ஏற்படும் புதிய சக்தி யென்று கொள்ளலாம்.

ஃ

4. தன் தேவையின் நிமித்தம் விட்டுக் கொடுத்து ஏமாறுவதில் எதிர்படும் சக்தி:—

பிழைக்கும் வழியாகவோ, அல்லது பொருள் பறிக்கவோ, குற்றங்கள் கண்டுபிடிக்கவோ, புதிய கற்பிதங்கள் செய்யவோ உபயோகமாவது மனோசக்தியாகும். இதில் நேர்வழியில் போவது கஷ்டமா யிருத்தலின் ஏமாற்றிச் செல்ல நேரிடுகிறது. இங்ஙனம் ஏமாற்றுவதின் மூலமாகவே நாலு காசு லாபம் தேடி அதைக் கொண்டு உயிர்வாழவும் வேண்டி யிருக்கிறது. ஒரு வியாபாரி ஒரு சாமானுக்குள்ள உண்மையான விலையுடன் தனது லாபத்தையும் சேர்த்துக்கூட்டி அந்தத் தொகையின் மொத்தமே அதன் விலை யென்று கூறி, தனது லாபத்தையும் தள்ளிக் கொடுப்பதாகச் சொல்லுகிறான். அவன் விற்கும் சாமான் அல்லது பதார்த்தம் நமக்கு அவசியமாக வேண்டியிருப்பதால், நாம் அதிக விலை தந்து ஏமாறுவது நமக்குத் தெரிந்திருந்தும் அதை வாங்கியே தீரவேண்டி யிருக்கிறது. இவ்விதம் வியாபாரம் செய்வதில் ஒருவனை யோக்கிய மான வியாபாரி யென்று நினைக்கப்போக, அவனோ நாறும் நெய்யை யும், அதுபோன்ற தாழ்ந்த தரத்தினதையும் கொடுத்துவிடுகிறான். இவ்விதமாக ஏமாற்றுவதில், ஏமாறப்பெற்றோர்க்கு ஏற்படும் சக்தி யானது, இனி அவன் கடைக்கே போகாதபடி தடுத்து மற்ற வியா பாரிகளிடமும் எச்சரிக்கையாயிருக்கும்படி தூண்டி விடுகிறது. ஒருவன் ஒன்றுக்கு இரண்டு பங்கு விலையைச் சொல்லி ஏமாற்றி விடும்போது, இனி இத்தகைய ஒண்டிப்பேர்வழிகளிடம் வியாபாரம் கொள்ளலாகாதென்று அதுமுதல் எச்சரிக்கையாய் விடுகிறான். இது தன் தேவையின் நிமித்தம் விட்டுக்கொடுத்து வாங்க முற்பட்டு ஏமாறுவதில் ஏற்படும் சக்தியாகும். இது ஜீவனார்த்த நிமித்தமாக அவரவர் முயலும் வழி. ஒருவரையொருவர் ஏமாற்றிப் பிழைப்பது உலகின் போக்கு. எதிலும் ஏமாறியே தெளிய வேண்டியுளது.

ஃ

5. நம்பி எதிர் நோக்கி ஏமாறுவதில் ஜனிக்கும் சக்தி:—

நம்பி ஏமாறுவதில் ஏற்படும் சக்தியைக்குறித்து சென்ற ஸஞ்சிகையில் விஸ்தாரமாகத் தெரிவித்திருக்கிறோம். ஒருவரை

---

"என்னிடம் எவரும் கடன் கேட்கமாட்டார்கள், காரணம் நான் எவ ருக்கும் கடன் கொடுக்கமாட்டேன். அவ்வளவுக்கு நெருங்கவும் மாட்டேன்."

உத்தமரென்றும், அன்பின் களஞ்சியமென்றும், ஒருவன் நம்பிவிடுகிறான். பிறகு அதற்கு நேர்மாறாக அவர் இருப்பதைக் காண்கையில் பெரிய ஏமாற்றங் கொண்டவனாய் அதுமுதல் வெளிவேஷத்தைக் கண்டு ஏமாறாதிருக்க எச்சரிக்கை பெற்றுவிடுகிறான். நாணயமான தொழிற்சாலை யென்று நம்பி அங்கு ஒரு வேலை தரப்போக, அவர்களோ தங்களின் சொந்த வேலைகளைக் கவனித்துக்கொண்டு இவனைத் தாமதப்படுத்திவிடுகிறார்கள். அதிலிருந்து ஏற்படும் சக்தியில் இனி அந்த இடத்தையே என்றைக்கும் எட்டிப் பாராதிருக்கத் தீர்மானித்துவிடுகிறான். இவ்விதமாக, நம்பிய நம்பிக்கை கெட்டு எண்ணமெல்லாம் பின்னமாகி ஏமாறுவதில், இதுவரையும் காணாததோர் புதிய சக்தியால் அவன் தேற்றுவிக்கப்படுவோனாகி அது முதல் அவன் ஒரு புது மனிதனாகிவிடுகிறான். அதற்குப்பின் அவனை ஏமாற்ற முடிவதில்லை. நம்பிய நம்பிக்கையினின்றும் ஏமாறுதல் வாழ்க்கையில் ஒரு பெரும் படிப்பினை. நம்பி ஏமாறுவதிலிருந்து பெறும் அநுபவம் மிகவும் விலையேறப் பெற்றது. நம்பி ஏமாறினோர் என்றும் விழித்த கண்ணாகவே இருப்பர். ஏமாறுவதிலிருந்து ஜனிக்கும் சக்தியும் மா பெரிதே. ஆதலின், ஏழை நெஞ்சமே! ஏமாறிவிட்டோமென்றெண்ணாதே; எண்ணிக் கவலைவலையிற் படாதே. ஏமாறியது பின்னுக்கு ஆகவேண்டிய எத்தனையோ விஷயங்கட்கு ஜாக்கிரதையாயிருக்க அது வெகு உதவி. ஏமாறிவிட்டதிலிருந்து தெரிந்துகொண்ட ஒரு தெளிவான அறிவு அதற்குமுன்பு கிடைக்கவில்லையல்லவா? அந்த அறிவு உனக்கு வரப்பெறுவதற்குக் காரணமாயிருந்த ஏமாற்றத்தை நீ வாழ்த்தக்கடவாய். எத்தனைக்கு ஏமாற்றமோ அத்தனைக்கும் ஒவ்வொரு தெளிவே. தெளியத் தெளிய ஜீவசக்தியும் மேன்மேலும் பெருகிவிடும். ஏமாற்றம் என்பது ஒரு பெரிய சோதனை. ஏமாற்றம் என்பது ஜீவியத்தில் ஒரு கடினமான பரீக்ஷை. ஏமாற்றம் என்பதிலிருந்தே சக்தியின் உதயம். அந்த மஹா சக்தியை வணங்கக் கடவோம்; அந்த சக்தியை நம் வழியில் உபயோகிக்கக்கடவோம். வெற்றியின் பாதையிலே அந்த சக்தியைச் செலுத்தக் கடவோம். முடிவில் வெற்றிபெறக் கடவோம். நமது லக்ஷியம் உயர்வுள்ளதாகவே இருக்கட்டும். சக்தி வாழ்க.

---

அந்த மூவாயிரம் ரூபாயைப் பாங்கியில் போடும்போது அது தனது மக்களுக்கு என்று தந்தை மனதார நினைத்துத் தீர்மானம் செய்கிறான். மக்களாசை மனிதனை வீண் செலவிடாதபடி எவ்வளவோ கட்டுப்படுத்துகிறது.

---

அங்கே பிரயாணம் இங்கே பிரயாணம் என்று பேசுகிறது. கடைசியில் எங்கும் புறப்படுவதேயில்லை. எதையோ வெட்டிச் சாய்த்துவிடப் போவதாக வீரம் பேசுவது. முடிவில் எதையுமே செய்வதில்லை. இது ஒரு மயக்குத் தந்திரம். இப்படி வெட்டிப் பேச்சு பேசுவது சிலரது இயற்கை.

# மூளைக்கு வேலை.

## I விடுகதை வினா ?

(1) கையில்லை காலில்லை கருப்பான ரூபமுண்டு,
வாயில்லை பேச்சுண்டு உடலில்லை ரவுண்டான வடிவமுண்டு—மயிரில்லை.
மயிர்போன்ற கோடுண்டு பலதடவை கேட்டாலும்
தைரியமாய்ச் சொல்வதையே சொல்லுங் குணமுடையாள்தானே.

(2) பவழத்தாற் செய்த கிண்ணம் போலிருக்கு மொன்றதனில்
நவமான முழு முத்தாற் கோர்த்ததுபோல் முன்னாலமைந்திருக்கும்
உருவமுடனுள்ளிருக்கும் அதனடியில் ஊறிவரும் நீரை [துவழுகின்ற
பருகமுடியுமே யன்றி முகக்க முடியாதே.

(3) இரண்டு நண்பர்கள் ஒரு தோட்டத்திற்குள் உல்லாசமாய்ச் செல்லுகையில் ஒருவன் தன் கையிலுள்ள ஒன்றைக் காண்பித்து இதை அறுத்தால் அறுபடுகிறதை அறுபடாதது யென்று ஏன் பெயரிட்டார்களெனக் கேட்க, அதற்கு மற்றவன் எதிரில் நின்ற ஒன்றைக் காண்பித்து இதை வெட்டினால் சாய்ந்துபோகக்கூடியதை சாயாதது யென யெப்படிப் பெயரிட்டார்களோ இதைப்போலவே அதற்கும் பெயர் வைத்திருக்கவேண்டுமென்றான். அப்படியானால் அவ்விரண்டு பொருள்களின் பெயரென்ன ?

(4) க்ஷணப்பொழுதில் பிறந்து மறுகணப் பொழுதில் இறந்து
சிறு இமைப் பொழுதில் இம்மியும் தோணாது மறைந்து போவது எது ?

வ. சு. நாராயணசாமி செட்டியார்.

## II விடுகதை வினா ?

(1) இருக்க இடங் கொடுக்கும்
சளையாமல் தாங்கிநிற்கும்—ஓடாது
நான்கு காலுடையது, மிருகமல்ல அது என்ன ?

(2) தினம் ஒரு முறை புசிப்பான்
நில்லாமல் ஓடுவான்—வட்டமுகம்
இரண்டு கையுடையான் இவன் யார் ?

ஜி. மகாதேவன்.

[விடுவிப்புடன் வாராத விடுகதை வினாக்கள் பிரசுரம் பெறாது.]

**மார்கழி மாத ஸஞ்சிகையிலுள்ள விடுகதைவினாவுக்கு விடை:—**

I **வீடுகதை வினா :**—(1) புரட்டாசி. (2) சகோதரி.

II **விடுகதை வினா :**—(1) எரு=எரு என்பது தமிழ் கணக்கில் 75.
மை-ஆடு. 75—ஆடு சேரின் ஒரு "எருமை".

(2) தரைவாழ் ஜந்து ஆ=(பசு) மை. (ஆடு.)
நீர்வாழ் ஜந்து ஆமை.

III **விடுகதை வினா :**—(1) விசிறி, தவளை, தாமரை, முயல், சம்பு.
(2) கொடைக்கானல் ரோட், யாழ்ப்பாணம், கழுகுமலை, வேதாரண்யம், செங்கல்பட்டு, நீலகிரி, கோதாவரி.




(முன்பக்கம் 524-லிருந்து.)

493. The intellect is finite; but the affections are: infinite, and cannot be exhausted.

LONGFELLOW.

அறிவு மிதமானது. ஆனால், அன்புக்குக் கரையில்லை. அன்பின் களஞ்சியத்தை வெறுமையாக்கவும் முடியா.

லாங்பெலோ.

494. Out of suffering comes the serious mind; out of salvation, the greatful heart; out of endurance, fortitude; out of deliverance, faith. RUSKIN.

துன்பத்திற்குப் பின் உண்மை ஞானமும், பட்டுத் தேர்ந்த பின் உயரிய நோக்கமும், சகித்துக்கொள்ளும் தன்மைக்குப் பின் பொறுமையும், மீட்சிக்குப் பின் உறுதிப்பாடும் தொடர்கின்றன. ரஸ்கின்.

495. Nothing can bring you peace but yourself. Nothing can bring you peace but the triumph of principles. EMERSON.

உன்னைத் தவிர வேறு எதுவும் சமாதானத்தைக் கொண்டுவராது. மூலதத்துவத்தின் வெற்றியைவிட வேறெதுவும் சமாதானத்தை உனக்குக் கொண்டுவராது. எமர்ஸன்.

496. If nature put not forth her power about the opening of a flower, who is it that could live an hour? TENNYSON.

மொட்டு வெடித்து புஷ்பமாவதற்கு இயற்கை தன்னுடைய சக்தியை உபயோகிக்காவிட்டால், ஒரு மணி நேரமாகிலும் யார் உஜ்ஜீவிக்க முடியும்? டேன்னிஸன்.

497. O, what may man within him hide, Though angel on the outward side!

SHAKESPEARE.

தேவதையைப்போல் மனிதன் வெளிக்கு நடந்துகொண்டாலும், அவன் மனதுக்குள்ளே எவ்வளவு ஒளித்து வைத்திருக்கலாம்!

ஷேக்ஸ்பியர்.

498. It is good to be children sometimes, and never better than at Christmas, when its mighty Founder was a Child himself. DICKENS.

சிற்சில சமயங்களில் குழந்தையைப் போலிருப்பது நல்லது. கிறிஸ்துவ மதத்தை நிறுவிய அந்த ஏசுகிருஸ்துவே குழந்தையாக இருந்த கிரிஸ்து ஜனன திருநாளில் அவ்வாறிருப்பது மிக்க மேலானது. டிக்கன்ஸ்.

---

செய்வோமா, வேண்டாமா என்று சந்தேகமும் உறுதியற்ற தன்மையுமான இருட்டறையில் தடவிக்கொண் டிருப்பதைவிட்டு, நல்ல வெளிச்சத்திற்கு வந்து, உறுதியான லக்ஷ்யங்களைத் தம்முள்ளே கற்பித்துக்கொண்டு வேலை செய்தாலொழிய எந்தக் காரியத்தையும் நாம் சாதித்துவிட முடியாது.

499. When men are rightly occupied, their amusement grows out of their work, as the colour petals out of a fruitful flower.

RUSKIN.

இயற்கைப் புஷ்பங்களின் முன் வர்ணங் கொடுத்த செயற்கைப் புஷ்பங்கள் வேறுபடுவதுபோல, மனிதர்கள் உண்மைத் துறையில் இறங்குங் காலத்து, அவர்களுடைய வீண் கேளிக்கைகள் அவர்கள் செய்யும் வேலையினின்றும் பிரிந்து நீங்கும். ரஸ்கின்.

500. Defend your reputation, or bid farewell to your good life for ever.

SHAKESPEARE.

உன்னுடைய கீர்த்தியை நீ காத்துக்கொள். அல்லையாயின் உற்ற உன் நல்வாழ்க்கையை என்றும் புறக்கணிப்பாய்.

ஷேக்ஸ்பியர்.

P. G. குலசேகரன்.

கல்வியானும், கேள்வியானும், ஞானத்தானும், மிகு சீலத்தானும், குணத்தானும் மேம்பட்டோர் சிலர் — கந்தை சுற்றிக் கையேற்றுண்டு, கழி பெருந் துன்பத்தி லாழ்ந்திருப்பவும், அவர்களுக்குச் சமமாகாத யோக்கியதையற்ற பலர் ஐந்தடுக்கு அழகு மாளிகையில் அறுசுவைப்போஜனம்மகிழ்ந்துபுசித்து அஸ்வாரூடரா யணிபெற வுலாவி இந்திரபோகந் துய்த்து மேன்மையில் விளங்கவும்காரணமென்னே? மெய்கிடந்து புலம்ப, பொய் உயர்வதேன் ?

## பேதை மாக்களின் போக்கு !

விபூதி பூசும் பெற்றியர் பலருள் பதினாயிரத்திலொருவரேனும், விபூதியின் ரஹஸ்யம் உணர்ந்தாரில்லை. அடுத்த வீட்டு நமசிவாயன் தவிர, வேறே நமசிவாயனுண்டெனக் கனவினு முணராதொழிந்தனர் சில பேதை மாக்கள். ஒற்றியூர்த் தியாகன் சேவை காணப் புஷ்பாவதியையும், ரூபாவதியையும், இந்திராணியையும் இராஜாமணியையும் இழுத்துச் செல்வார். மனைவியைக் கதறிக்கிடந்து கூழுக்கழவும் விட்டே திரிவார் நாரிகள் பின்னே ! இன்னோரின் மதி என்னே !

எவ்வளவு கனத்த மழை கொட்டினாலென்ன? அத்தனை மழையிலுங்கூட எதிர் வீடு பக்கத்து வீட்டுச் சண்டைகள் ஓய்வதில்லை ! மழையைவிட அது அதிகமாகிறது. இடியைவிட அந்த சண்டையின் ஓசை மிகுந்து கேட்கிறது !

# சண்டேசுர நாயனர் சரித்திரம்.

அண்டர்பிரானும் தொண்டர்தமக் கதிபனுக்கி யனைத்துநா
முண்டகலமுமுடுப்பனவுஞ் சூடுவனவுமுனக்காகச்
சண்டீசனுமாம் பதந்தந்தோமென்றங் கவர்பொற்றடமுடிக்குத்
துண்டமதிசேர்சடைக் கொன்றைமாலை வாங்கிச் சூட்டினர்.

(பெரிய புராணம்)

சோழ நாட்டிலுள்ள திருச்சேய்ஞலூரில் பிராமணகுலத்தில் எச்சதத்த னென்பவருக்குத் திருக்குமாரராகத் திரு அவதாரஞ் செய்து, விசாரசருமர் என்னும் திருநாமம்பெற்று, வேதாகம முதலிய நூல்களை ஓதாதுணர்ந்து சிவபெருமானை வழிபாடு செய்து வரும் காலத்தில், ஒருநாள் பசுமந்தையில் ஓரிடையன் பசுவைத் தண்டாலடித்ததைப் பார்த்து மிக வருந்தி, அவனுக்குப் பசுவின் மகிமைகளைப் பலவாருகக் கூறியும், அவன் கேளாமையால், இனி தாமே பசுக்களை மேய்ப்பதெனத் தீர்மானித்து, மண்ணியாற்றின் கரையில் மணலினல் சிவலிங்கமும், ஓராலயமும் அமைத்து * பசுக்கள் சிந்தை மகிழ்ந்து மடிபெருகி தாமே சொரிகின்ற பாலைக் குடங்கொண்டு, அபிடேகஞ் செய்துவரும் நாளில், ஓர்நாள் இதை யறிந்த ஓர் பிராமணன் நாயனருடைய உள்ளன்பின் மிகுதி தெரியாமல், இவர் தந்தைபாலுற்று உமது புத்திரன், எங்கள் பசுவின் பாலைக் கறந்து மணலிற் கொட்டுகிருனென்று தெரிவிக்கவும், அதைக்கேட்ட எச்சதத்தனும் வந்து பார்த்து, நாயனரை முதுகில் தண்டத்தாலடித்தும், அவர் வருந்தாமல் சுவாமிக்கு அபிடேகம் செய்வதைக்கண்டு, தந்தை மிகவும் கோபித்து சுவாமிக்கு அபிடேகஞ் செய்ய வைத்திருக்கும் பாற்குடத்தை இடறினன். அதுகண்ட நாயனர் மனம் பொருமல் சிவாபராதம் செய்தவனைத் தனது தந்தையென்றும் பாராமல், கோலால் கால்களைத் துணிக்கவும், இவ்வரிய பக்தியைக்கண்ட சிவபெருமான் பார்வதி தேவி சமேதராய் எழுந்தருளித் தம்மை மெய்யன்போடு பூசித்த அன்பரை எடுத்து நோக்கி, நீ நம்பொருட்டுத் தந்தை வீழ எறிந்தனை, ஆதலால் இனி நாமே யுனக்குத் தந்தையென்று அணைத்து, உச்சி மோந்து மகிழ்ந்து, தொண்டர்களுக்கெல்லாம் தலைவராக யிருக்கும்

---

* பசுக்கள் ஐந்து நிறமுள்ளன. நந்தை—(கபிலநிறம்) பத்திரை—(கருப்புநிறம்) சுரபி (வெண்ணிறம்) சுசீலை (புகை நிறம்) சுமனை (செந்நிறம்) பசுக்கள் தரும் பால், தயிர், நெய் முதலியவைகளைக் கடவுளுக்கு அபிஷேகம் செய்துவரல் வேண்டும். கபிலை நிறப்பசுவின் பாலை கடவுளுக்கே கொடுக்க வேண்டும்.

முறைமையை யளித்து நாமுண்ட பரிகலமும் உடுப்பவைகளும், சூடும் பூமாலைகளும் உனக்கே தக்கதாகக் கடவதென்று, சண்டேச னென்னும் பதமும் தந்தோம் என்று தம்முடைய திருமுடியில் அணிந்திருந்த கொன்றைமாலையினை ஷை மெய் அன்பர் முடியிற் சூட்டிச் சிவலோகத்திற் கெழுந்தருள, சண்டேசநாயனரும் பரம சிவத்தைத் தொழுது உடன் சென்றனர். எச்சதத்தன் சண்டேச நாயனர் மழுவால் தண்டிக்கப்பட்டமையால் சிவாபராதம் நீங்கிச் சுற்றத்தாருடன் முத்தியடைந்தனன்.

சிவாலயங்களில் நாம் பிரதக்ஷிணம் செய்யும்போது சண்டே சுர நாயனரிடத்தில் வந்ததும் சிலர் செவிட்டுப் பிள்ளையார் அல் லது நிஷ்டையிலிருக்கும் மூர்த்தி என்று நினைத்து, உரத்த சப்த மாகக் கைகளைக் கொட்டுவது பிசகு.

இச்சரித்திர ஆராய்ச்சியினல் நாம் சிவபெருமானிடம் பெற்ற விபூதி, புஷ்பம் முதலியவைகளைச் சண்டேசர்வசம் ஒப்புவித்து விடவேண்டியது. ஆதலால் நமக்கு சிவாலயத்தில் சிவ தரிசனசம் பந்தமாகக் கிடைத்தவைகளை அவர்மீது எறியாமல் எப்போதும் மெதுவாய் அவர் முன் வைத்து ஆங்கு சற்று நின்று, ஓர் குரு நிஷ்டையிலிருக்கும்போது சீஷன் மிகுந்த பக்தியுடன், ஏதோ முக் கிய விஷயம் சொல்லவேண்டித் தெரிவிப்பதுபோல், உரத்த சப்த மில்லாமல், மூன்றுதரம் கைநொடி (சிட்டிக்கை) செய்து, உரிய மந் திரத்தைச் சொல்லி அவரை வணங்கி, சிவாலயத்தின் தரிசன பலனை ஆங்கும்பெற்று பிறகு வீட்டிற்கு வரவேண்டும்.

மேலும், சிவபெருமான் உண்பனவும், சூடுவனவும் முதலிய வைகள் சண்டேசருக்கு எப்போதும் சுதந்தரமாதலால், பிரம்மோற் சவபூர்த்தி, துவஜாவரோகண தினமும், அவர்வசம் அனைத்தும் ஒப்புவித்து சண்டேசர் யாகமும் உற்சவமும் நடாத்தி பிரமோற்ச வத்தைப் பூர்த்திசெய்கின்றனர்.

---

விவாகமும், ரயில் வண்டியும் தூரப்பார்வைக்கு எவ்வளவோ சந்தோஷ மும் அபூர்வக் காட்சியுமா யிருக்கிறது. அதில் ஏறிய பிறகோ முன் சந்தோஷம் மறைந்து தலையிற் பளுவு ஏறிக் கவலையும் விசாரமும் தாண்டவமாடுகிறது.

---

ராமனைக் குப்பன் ஏமாற்றப்பார்த்து அதற்காக நேசம் செய்ய வந்தான். இந்தக் குப்பன் எதற்கோ நெருங்கி இப்படிக் குலாவுகிருனென்று ராமன் ஜாக் கிரதையாய் விடவே, குப்பனும் மெதுவாக ஒதுங்கிக்கொள்ள நேர்ந்தது!

---

தெய்வசகாய மிருக்கும் காலத்திலேயே நாம் செய்வன தவிர்வன தெரிந்து- தேர்ந்து செய்யத்தகுவன யாவற்றையும் நன்கு செய்து முடித்துவிடுவோமாக.




# பருவ பக்குவ யுவதிகள்.



பருவமடைந்ததும் சாந்தி செய்விக்கிற கொடுமையை விட, பக்குவமான யுவதிகளைப் பல ஆண்டுகள் வரையிலும் விவாகமின்றியே காக்க வைக்கும் கொடுமை அதனினும் பெரிது. மூன்று நான்கு வருடங்கள் பொறுத்துச் செய்வது குற்றமாகாது. ஆனால், ஏழு எட்டு வருடங்கள் வரையிலும் பருவயுவதிகளை மணமின்றியே மூலையில் போட்டு ஒதுக்குதல் அன்னோரின் தேகாரோக்கியத்திற்குப் பங்கமாகும். சில இடங்களில் பத்துப் பன்னிரண்டு வருடங்கள் வரையிலுங்கூடப் புஷ்பவதியான ரமணிகள் காத்துக் கிடக்கின்றனர். அவர்களின் முகமும் காந்தியைச் சிறிது சிறிதாய் இழக்கின்றது. பெண்கள் பிறரால் கொள்ளப்படும் ஒரு புது மலராகும்; ஒரு விற்பனைச் சரக்குமாகும். எத்துணைத் துரிதத்தில் அந்தப் புஷ்பங்களைப் பிறர் சூட்டிக்கொள்ளுமாறுசெய்ய விடப்படுமோ அத்தனைக்கும் அது மேன்மையாம். பருவகால ரமணிகள் அனுபவிக்கும் தேக நோய்களிற் பல விவாகமானதும் மறைந்துவிடுமென்பது வைத்திய நூல்களின் சித்தாந்தமாகும். சில பருவ யுவதிகள் நெடுங்காலம் காத்திருந்தும் விவாக பாக்கியமின்றியே கண்மூடி விடுகின்றனர். ‘அவர் தன் மகனுக்கு எந்தப் பெண்ணைக் கட்டுகிறாரென்று தெரிந்த பிறகே என் பெண்ணுக்கு விவாகத்தைச் செய்வேன், என்று ஒரு பக்கம் பிடிவாதம் பிடிக்க, மற்றொரு பக்கமோ, ‘அந்தப்பெண்ணுக்கு விவாகம் நடந்த பிறகே என் குமாரனுக்கு விவாகத்தைச் செய்வேன்; ஒருநாளும் அந்தப் பெண்ணை என் புத்திரனுக்குக் கொள்ளமுடியாது, என்று உறுமி நிற்க, இதன் நடுவில் பருவ ரமணிகள் தெய்வமே யென்று மூலை வீட்டில் சிறைக் கைதிகள்போல் காலங் கழிக்க நேருகிறது. ஓர் அம்மை தன் பெண்ணைப் பார்க்க வந்தவர்களுக்கெல்லாம் ஒவ்வொரு குறை கூறி யனுப்பிவிட்டு பதினைந்து வருஷகாலம் தன் பெண்ணைக் காக்கவைத்துக் கடைசியில் தன் சகோதரனுக்கு முடித்து வைத்தாள். பெண்ணின் பேருக்கு எழுதி வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் அன்

---

சில பெண்களின் கை மூளைக்கிற முளையிலேயே எதுவும் கொஞ்சமே வைக்கவும், சிறிய அளவிலேயே எந்தப் பக்ஷணத்தையும் செய்யவும் தொடங்கிக் கொள்கிறது. அதற்கேற்ப அன்னோரின் வாழ்வும் இழிய தாகவேபோகிறது.

ணியருக்குப் போய்விடாமல் தன் சகோதரனுக்கே சேரவேண்டு மென்பது அந்த அம்மையின் கருத்து போலும்! சில இடங்களில் வெகுகாலமாக விவாகமின்றிக் கிடக்கிற பெரிய பெண்ணைக் கேட்காமல், அப்பெண்ணின் தங்கைகளைக் கேட்கும்படியும் ஆகி, மூத்த பெண்ணுக்கு மதிப்பு குறைகிறது. கடைக்காரன் பிறர் வாங்கும்படியான பளபளப்பில் தன் சரக்குகளை வைத்திருப்பது போலக் கடவுளும் விற்பனைப் பொருளான பெண்களுக்குப் பிறர் மனம் வசீகரிக்கக்கூடிய புதிய லாவண்யங்களைப் புகுத்தி யிருக்கிறார். அந்த லாவண்ய மலர் வாடிப் போவதற்கு முன்னரே பிறர் கொள்ளும்படி முயற்சி தேடுதே சிரேயஸ்கரம். அபூர்வமாய் இரண்டோரிடங்களில் இவ்விதம் காத்துக் கிடக்கும் பெண்கள் அந்தரங்கத்தில் கெட்டும் விடுகின்றனர். அன்னோரின் சற்பை விழுங்கக்கூடிய விஷஜெந்துக்கள் வீட்டிற்குள்ளேயே விசுவாசத்துடன் வாழுகின்றன. ஒரு பெண் பக்குவம் அடைந்தா ளென்றால், அன்று முதற்கொண்டு அவள் நமது பெண்ணல்லவென்றும், அயல் வீட்டுக்குப் போகும் பெண் என்றும் கருதுதலும் உண்டு. அதுவும் ஒரு அநுபவமே. எதற்கும் சில காலவரையறைகள் உண்டு. அதற்குள் விவாகத்தைச் செய்து முடிப்பது அவசியமாம். தனது பெண் பக்குவ யுவதியாய்ப் பல வருடங்களாக வீட்டிலிருக்க, அதைக் கவனியாது தன் குமாரனுக்கு விவாகத்தை யோசிப்பது மௌடிகம்; இன்னும் தான் மறுவிவாகம் செய்து கொள்ள நினைப்பது முற்றிலும் தவறான செய்கை. பெண்ணின் பெற்றோர்களுக்குக் கவலை யில்லாமலில்லை. ஆனால், நெடுங்காலம் வீணே காக்க வைப்பது தர்மமாகா தென்கிறோம்.

உடுப்பு சட்டை தலைப் பாகை சரிதான்! ஆனால், தான் போட்ட 20-மாதக் கெடுவான 5-ரூபா சீட்டை 10-வது மாதமே பாதிக் கணக்கில் தொகை பெற்றுவிடும்படி அவரது உள் நிலைமை அவ்வளவுக்கு வறுமையும் நெருக்கடியுமா யுள்ளது. 20-மாதமும் செலுத்தி 106-ரூபா பெறுதற்கு அதுவரை பொறுக்க முடியவில்லை. வெளி டம்பமோசென்ட்வாசனையில் மணக்கிறது. ஒய்யாரப் பிரபு நடை வேறே! உள்ளேயே முழு ஓட்டை!

மறந்த பணப்பையை அதோ எடுத்துக்கொள், இப்படி வைக்கலாமா வென்று புத்தி சொல்லுகிற யோக்கியனே பிறகு, மற்றவர் மறந்து வைத்துச் சென்றுவிட்ட ஒன்றை ஒளித்து வைத்து விட்டு, அதை இழந்தவர் வந்து கேட்கையில்— நான் பார்க்க வில்லையே என்கிறான். மனிதனின் நற்குணம் ஒரு நிச்சயத்தி யில்லை. மறு நிமிஷம் மாறி விடுகிறது. இன்று அவன் வெகு நாணயஸ்தனே. நாளையோ ஆ! படுமோசக்காரப் பாவி.

பகலில் இருந்த உத்தமமான குணத்தை வேறுவிதமாய் இரவானது மாற்றிவிடுகிறது. இரவிலோ மாந்தர் செய்யும் கிருத்தியங்கள் வெளிக்கு வரா.




**சோதிட கணிதசாரப் போக்கிஷமென்னும் ஆனந்தாதி ஆனந்த அட்சயாந்த,**

## 73-வருடப் பஞ்சாங்கம்.

[இது சோதிடப் பேரகராதி, 61-வருஷப் பஞ்சாங்கம் முதலிய சோதிட கணித நூல்கள், மங்கம்மாள் முதலிய சரித்திர நூல்கள் முதலியவற்றின் ஆசிரியரும், மதுரைப் புஸ்தகசாலையினரும், முனிசிபல் கவுன்சிலருமாகிய சோதிடசாஸ்திரி ஸ்ரீமான் **எஸ். கூடலிங்கம்பிள்ளை** அவர்களால் இயற்றப்பெற்றது. பெரிய அளவில் 940-பக்கங்கள் உள்ளது. காலிகோ பைண்டுடன் கூடியது. விலை ரூபா 7.]

இது ஒரு பெரிய நூல். ஏராளமான பணச்செலவில் துணிந்த நெஞ்சுடன் தயாரித்த அரும்பெரும் நூல். சாதாரணமாகப் பஞ்சாங்கங்களை,— ரகசியமான சொந்த விஷயங்கள் எழுதி வைத்த டயிரிகளைக்கூட,— பெரும்பான்மையாய்ப் பத்திரப்படுத்துவதில்லை. ஒரு வருஷ முழுதும் அதனோடு கொஞ்சிவிட்டு, புது வருஷம் வந்ததும் அதை ஒருமூலையில் எறிந்து புதியதைக் கொள்வதே வழக்கம். இந்த நிலையில் பழைய ஜாதகங்களைப் புதுப்பிக்கவோ கணிக்கவோ பழைய பஞ்சாங்கத்தைத் தேடுகையில் அது அகப்படுவதேயில்லை. சோதிடர்களிடத்திலும் சில வருஷ பஞ்சாங்கங்களைத் தவிர, நாம் கோரிய வருஷத்திய பஞ்சாங்கம் கிடைப்பதில்லை. அந்தக்கஷ்டத்தை நிவர்த்திக்க ஸ்ரீமான் கூடலிங்கம் பிள்ளையவர்கள் பல வருஷங்களுக்கு முன்னர் **61-வருஷப் பஞ்சாங்கம்** என்னுமோர் அரியநூலை மிகப் பிரயாசையுடன் தயாரித்துத் தமிழகத்திற்குப் பெரும் பொக்கிஷமாய் உதவினர். அதன் அருமையுணர்ந்த புத்திமான்கள் வெகு ஆவலுடனும் அதனை விரும்பிப் பெற்றமையால் அதன் பிரதிகள் இப்பொழுது கிடைத்தற்கரிதாயின. ஏராளமான திரவியத்தை வாரிக் கொட்டவேண்டியதாகிய இப்பெருங் காரியத்தில் மறுபடியும் துணிந்து 61-வருடப் பஞ்சாங்கத்தினும் சிறந்ததும் பெரியதுமாய் இந்த **73-வருடப் பஞ்சாங்கத்தைத்** தயாரித்து வெளியிட்டிருக்கின்றனர். இதில் இங்கிலீஷ் 1854ம் ௵ தமிழ் ஆனந்த வருஷம் முதற்கொண்டு இங்கிலீஷ் 1927-ம் ௵ தமிழ் அக்ஷய வருஷம் வரையில் உள்ள 73-வருஷங்களின் பஞ்சாங்கங்கள் எல்லா விவரங்களுடன் கூடியதாய்ச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நூலின் முடிவில் இங்கிலீஷ் 1854-ம் வருஷ முதல் 1954-ம் வருஷம் வரையுள்ள 100-வருஷத்திய இங்கிலீஷ், தமிழ் வருடம் மாதம் தேதி, கிழமை இவைகளும் வியப்புறும் வண்ணம் சேர்க்கப்பட்

---

திடீரென்று உயர்ந்து ஐசுவரிய ஸம்பன்னனாகிவிடக்கூடிய வாழ்வு மனித ஆயுளில் அபூர்வமாய் இரண்டொரு சமயமே வருகிறது. சிலருக்கு அது சாஸ்வதப்பட்டுவிடுகிறது. சிலருக்கோ விரைவில் அவ்வாழ்வு தடுமாறிக் காலமுழுதும் அதை நினைத்துத்தினமும் ஏங்கவைக்கிறது. மறுபடியும் அது வருவதில்லை.

டுள்ளது. இத்துடன் சோதிட சாஸ்திர சம்பந்தமாய் பஞ்சாங்கங்களைப் பார்த்து என்னென்ன முக்கிய விஷயங்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறோமோ அவை யாவும் இந்நூலில் கோர்வை செய்யப்பட்டுள்ளன. விவாகம், ருது, எண்ணெய் இடும் நாள், பல்லி விழும் பலன் இதுபோன்ற எத்தனை ஆயிரம் விஷயங்களுண்டோ அவைகளும் இந்நூலில் காணலாம். நமது சந்தேகங்களுக்கும் அவசியத்திற்கும் துணையாய் உதவுவதற்காக தமிழ் அகராதி, இங்கிலீஷ் அகராதிகளை நம்மிடம் ஸதா வைத்துக்கொண்டிருப்பது போல், சோதிடசாஸ்திர விஷயத்திற்கும் இந்த 73-வருடப் பஞ்சாங்கமும் நமது கைவசம் இருக்கத்தக்கதாகும். சாரதா விவாகச் சட்டம் வந்துள்ள இந்நாளில் வயது விவரங்களைக் குறிப்பிட இந்நூல் வெகு பிரயோஜன முள்ளதாய் விளங்கும். இது ஒரு லோகோபகாரமான நூல். புஸ்தகசாலைகளை அலங்கரிக்கத்தக்க நூல். இதன் ஆசிரியரைப் போற்றுகின்றோம்.

[இப்புத்தகமும் வேறு பல புது நூல்களும் நமது "அமிர்த குண போதினி'' ஆபீஸில் கிடைக்கும்.]

மந்திரமோ மாயையோ வஞ்சனையோ சன்மார்க்கர்களை அதட்டிப் பயமுறுத்துமே யொழியக் கொடிய தீங்கு பயக்காது. திடுக்கிடச் செய்யுமே யொழிய அடிமையாக்க இயலாது. சன்மார்க்கர்களுக்குத் தீமை செய்யத் தொடங்குவனவெல்லாம் அவர்களுக்குக் கடைசியில் நன்மையாகவே முடிந்து கீர்த்திக்கிடமாகும். துஷ்டர்கள் தாங்கள் இழைக்க நினைக்கும் துன்பவழி தங்களுக்கே பின்பு துன்ப மிழைக்கத்தக்கனவாகி நாசமுறுவர்.

## குடும்ப க்ஷேமத்தில் அக்கறைப்படுவது இப்படித்தானோ?

எந்தக் காரியத்தைச் செய்தால் தனது குடும்பமாவது, தனது குமாரனாவது செல்வாக்கும் க்ஷேமமும் பெறுவது சாத்தியமாகுமோ, அந்தக் காரியத்தைச் செய்வதை ஆக்ஷேபித்துக்கொண்டும், துவேஷ பேத புத்தியால் பின்வாங்கிக்கொண்டும் இருந்துவிட்டு, அவர்களுடைய க்ஷேமத்தில் தனக்கு மிகுந்த அக்கறையிருக்கிறதென்று வெளிக்குமட்டும் வெறுமனே நீளச் சொல்லிக்கொண்டால் யார்தான் அதை நம்புவார்கள்?

# சேர்த்திட்டது எத்தனை?

செலவிட்டது சரி; நீ சேர்த்தது எத்தனை?
பணம் உள்ளவரை யாவரும் மிக அன்பே.
ஓயாத விருந்தே; பின் இவர் உதவுவரோ?
கை வறண்டால் அனைவரும் அன்னியரே!
கண்டாலும் பேசார்; கதறிடினும் வாரார்!
சீ! தரித்திரக் குப்பையென்றே தூற்றிடுவார்.
செய்தான செலவுகள் பூர்வம் பட்ட கடனே!

எத்தனை செய்யினும் நன்றி ஏது? செலவிட்ட கஷ்டம் அறிவரோ? மிக செய்து பின் வறிஞனுவதிலும், சிறிது உதவி, தூரவே நின்று, நிதி திரட்டிச்சீமானுவதே சிலாக்கிய வழி.

அங்கு தமக்கு அடிக்கடி புசிப்பு—விருந்து.
அவர் தம்மிடம் வரின் வாய் உபசரிப்பே.
பல நாளுமே குந்துவார்; பிரியச் சகியார்!
உரிய துணையுமாவார்; உள்ளமோ கபடம்!
யாவும் நடிப்பே. அது தந்திரமே, சுயநலமே!
கை சுருங்கிடிலோ என்றுமே பகையாவார்!
இல்லாமை கூறிடினே இகழ்ந்து விலகுவார்.
இடுவேது கிரமமே; எதிலும் ஒரு அளவு உண்டு.
முதலில் தனக்கு;—பின் மிஞ்சியதே பிறருக்கு.
எங்கு நாளில் எவர் உதவுவார்? எண்ணிடுக.
இன்றே நீ நிதி சேர்; கிட்டாத நாளு முண்டு.

மீறிய செலவில் அழிந்தார் கடனுல் பலரே.
உன்னையே நம்பியவரை முதலில் நீ கவனி.
பிறர் கை உதவா; உன் கையே உன் உதவி.
ஒரு மிச்சம் பிரதி மாதமும் மிகுத்து வை.
சேர்த்தவர்கட்கே எங்கும் சிறப்பு—மதிப்பு.
பணமுள்ளவர் பக்கமே உலகு துதி பாடும்.




# ஏகநாதன்.

முன் குறிப்பு :—ஏகநாதன் எனும் பிராமணச் சிறுவன் ஜனார்த்தனர் எனும் பேரறிஞர்பால் குருகுல வாசத்திலிருந்து கற்பவை கற்று அறிவன அறிந்து வந்தனன். ஜனார்த்தனர் தனது சீடன் ஏகநாதனிடம் சமூக வேற்றுமை இருந்து வருவதை யுணர்ந்து அதனை அவன்பாலிருந்து அறவே நீக்கக் கருதினர். கடவுளும் இதனையுணர்ந்து ஒரு முஸ்லிம்மாக உருத்தாங்கி ஏகநாதனைச்சோதிக்க, அவன் இஸ்லாமியருடன் உணவருந்த மறுத்தனன். இறைவனும் அதுகால் மறைந்தனன். பின்னரும் தனது சீடனுக்கு நல்லுணர்வு வரவேண்டுமென ஆசித்து ஏகநாதனிடம் சாதிவேற்றுமையும் சமயத்துவேஷமும் இருக்கக்கூடாது என உபதேசித்து, எவரிடத்தும் அன்பும் மரியாதையும் கொண்டு வாழ்தல் வேண்டுமென வற்புறுத்தினர். ஏகநாதனும் குரு கூறியவைகளில் திருப்தியடைந்தவனாய் இருந்து வரும் நாளில், குரு ஜனார்த்தனர் அன்றும் கடவுள் வருவார் ; அவர் எவ்வுருவத்தில் வந்தாலும் அவமதியாது ஏற்று நடந்து வரவேண்டுமென்று அருளினர். சிறிது போழ்தில் ஈசன் ஓர் பக்கிரியின் உருவந் தாங்கி, தனது சக்தியை மனைவியாகக் கொண்டு காமதேனுவை நாய்வடிவந் தாங்கச் செய்து எழுந்தருளினர். குருவும் சீடனும் அவர்களை வணங்கி உபசரித்தனர். வந்த பக்கிரி நாய்வடிவிலிருந்து விளங்கும் காமதேனுவின் இனிய பாலைக் கறந்து அவர்களுக்கு ஈந்து ஆவன கூறி மறைந்தருளினர். குரு நாயின் பாலை அருந்தி எஞ்சியதைப் பருகுமாறு ஏகநாதனைக் கட்டாயப்படுத்தினர். ஏகநாதனும் தட்டாது குருவின் கட்டளையை ஏற்று அதை யுண்டு கடவுளது அநுக்கிரகம் பெற்றான்.

பின்னர் ஏகநாதனைக் கிரகஸ்தனாகவிருந்து அந்நெறியில் வாழ்ந்து வருமாறு அவனது பெற்றோரிடம் அனுப்பி வைத்தார்.

ஏகநாதன் இல்லற தருமம் நடத்திவரும் நாளில், அவனது பெற்றோர்களது சிராத்ததினம்வர, அன்று அநேக பிராமணர்கள்

மூன்றாவது மனிதனுக்கு இடம் தராதே. ஜாக்கிரதை!

போஜனம் கொள்ள வந்திருந்தனர். அதுகாலையில் ஓர் தோட்டியும் அவன் மனைவியும் ஏகநாதன் இல்லத்தில் பிராமணர்கள் உட்கொள்ளுவதற்காகச் சமைத்திருந்த ஆகாராதிகள் நல்ல மணமொடு வீச, தோட்டியின் மனைவிக்கு அவ்வாசனையால் அவ்வுணவை உட்கொள்ளப் பேரவா உண்டாகியது. தோட்டி மறுத்துக்கூறித் தடுத்துக்கொண்டிருந்தார். அச்சமயம் வேலையின் பொருட்டு வெளியில் வந்த ஏகநாதன் அவர்களது சம்பாஷணையை உணர்ந்து தன் மனைவியிடம் கூற, அவள் அதற்கு மனமொப்ப, உடனே தோட்டியையும் அவனது மனைவி சுற்றத்தார் அனைவரையும் அன்போடு அழைத்து வந்து பிராமணர்களுக்கு என்றிருந்த போஜனத்தை இட்டு மனதார உபசரித்து அவர்களைத் திருப்தி செய்வித்தனன்.

இதனைக் கண்ட அந்தணர் பலரும் பெரிதுங் கடிந்து ஏகநாதனைப் பலவிதம் இழித்துக்கூறிச் சபித்துச் சென்று அவனை ஜாதியினின்றும் விலக்கிப் பகிஷ்கரித்தனர்.

ஏகநாதன் அவர்களின் செயலைக் குறித்து ஒன்றும் எண்ணாது பின்னர் ஆகவேண்டியவைகளைச் செவ்வனே செய்துவிட்டு, தான் அன்று நடத்திய தர்ம நியாயமான காரியத்தைக் கூறிப் பிதுர்க்களை மனதில் எண்ணித் துதிக்கவும், அவர்கள் உடனே அவன்முன் தோன்றி அன்றைய உணவை ஏற்று ஆநந்தத்துடன் ஆசீர்வதித்து ஏகினர். இச்சரிதத்தை இங்கு பாக்களாகச் செய்யப்பட்டுள்ளது. அவற்றைச் சுவைத்து இன்புறுக.

## ஏகநாதன்.

ஜனார்த்தனன் :—வாழிய மைந்த! வளமமர் இவ்வையின்
ஆழ் சூழ் உலகம் அனைத்துந் தாமாய்
அன்பே வடிவாய் அமர்ந்துள ஈசன்
இன்றெமைக் காணிய இன்னே வருகுவன் :
எக்கூற் றுடைவனோ அக்கதி யுணரேன்
முன்னொரு காலில் முகம்மது வாக
நண்ணிய போது நகைத்துப் புறத்தே
சென்றனை ; அன்னவன் செவ்விய நீழலில்
நின்றிடு மஃதூஉம் நிறைபா வமென்றே
எண்ணினை ; எண்ணிய எண்ணம் எங்கோ
சென்றது ; வந்தவன் திருவுரு மறைந்ததும்

---

இருளினாலும் தனிமையினாலும் எனக்குக் கவலை கிடையாது ; அவைகளுடன் தொடரும் தீமைகளை யோசிக்கவே எனது உடல் நடுங்குகின்றது.

ஏங்கியே அழுதாய் தாங்கா தவமே.
பாங்கரை நோக்கி பன்முறை பிதற்றினாய்
ஆ! ஆ! அறிவிலி! என்னே உன்மதி!
வேண்ணெய் வைத்தழு வீணரைப் போல நீ
கண்மூன்றுடையக் கடவுளைக் கண்டும்
காணு வோருவனைக் கடுத்தனை அப்பா!
வீணே பலப்படல விளம்பியும் என்ன?
ஆண்டுபல் அருந்தவம் ஆற்றி காண்ப
வேண்டுவ செய்வர் வேதன் மின்னொளி
தன்னிலுங் கடிதினிற் செல்லுங் காட்சியை
(எனினும்) திருவுள மிரங்கா திருத்தலே காண்பர்
—வருங்காற் பயனை அருமையாய் உரைத்தலும்
எங்கும் ஒளிரும் கங்குல் மீனமும்
பொங்குங் கடலில் தங்கும் மணலும்
கணக்கிற குள்ளே இணக்கமாய் எண்ணலும்
ஆழ்கடல் மூழ்கி அணியார் முத்தம்
காமெனப் பரப்பலுங் கனமழைப் போது
வானிற் றோன்றும் வளைவில் லதனையே
ஆனநன் னிறம்பல ஆக்கிட எண்ணலும்
நொடியினில் மறையும் நுண்ணிய மின்னை
நெடிய காலத்து நிலைபெற மலைமேல்
நின்றிடச் செய்தலும் இன்னன பலப்பல
துன்னருங் காரியம் தொகை தொகை முடிக்கலாம்
ஆயினும் அப்ப! அன்புளக் கடவுள்
தாயினும் பெரியன் தாளினைக்
கண்ணிமைப் போதினுங் காண்டலரிதே!

*ஏகநாதன்* :—அடிகாள்! உமதிரு அருள் நிறை வாக்கினை
அடியேன் அறியா திருந்தேன் அவமே!
எனினும் ஏற்குமோ எ(ன்)னிதயம் மகம்மதா
தோன்றுமோர் உருவில் ஈன்றவன் தன்னையே?

*ஜனார்த்தனர்* :—தீற்றலில் அமையும் வீற்றப் பொருளைத்
தோற்ற மாத்திரையா துணிதலோ சிறப்பு?
இன்னுநீ இவ்வா றெண்ணுதல் பிழையே!
புறக்கண் மூடி அகக்கண் திறப்பாய்
புறத்தே காண்பன யாவும் மயக்காம்
மாயமாம் பொய்யாம் மறைவாம்: உன்னுளே

---

*விமலமான விசுவாசமே! மாசற்ற மனோரதமே! களங்கமற்ற கற்பே!*
*என்றும் வாழி. நீ மறைந்து பல ஆண்டுகளாகியும் மறந்தேனில்லை என் தோழி!*

நேயமாய் இருக்குமோர் நேரிய ஒளியே—
அருவிலும் உருவிலும் அருவுரு நிலையிலும்
ஆணிலும் பெண்ணிலும் அலியிலும் ஏனைய
அண்டத் துயிரினும் ஈசனே உளனென
அறிதற்கான மாபேர் ஆற்றலை உடைத்ததாம்.
(மேலும்) கடவுளர் பாதங் காணுவான் ஒருவனக்
கடவுளர்தாந் தங் கருணைப் பெருக்கால்
கண்ட நற் பொருளைக் கருதா தெள்ளுதல்
நன்றே கூறுய் நானில தனிலே.

ஏகநாதன் :—ஆயினும்! அடிகாள்! ஆத்திரம் உளவவர்
கோயிலை இடிப்பர் கொடுந்தடி கொண்டு
சிலைகளைச் சிதைப்பர் சீவர்க்கமுதாம்
பால்தந் துதவும் பசுவினைக் கொல்வர்—
இத் தொழில் ஒன்றே இறைவனை இகழ்வதே.

ஜனார்த்தனர் :—அவரு மவ்வாறே அறைகுவர் நம்மையும்
ஆவினைத் தாய்போல் ஆதரம் மிக்கதா
தீவினை யிலாத தகும்வழி ஒன்ருல்
தெய்வமே ஈதெனத் தெரிசித் திடுமிவர்
தினமும் பால்நனி தாரா திருப்பின்
அடிவயி றெட்டுமா றரைப்பிடி பசும்புலும்
பிடியள வுள்ள பெரு உமித் தவிடுங்
கொடாரிக் கொடுங் குண குலாமர் இரங்கி
எலும்புந் தோலும் எடுப்பாய்த் தோன்ற
சித்திர வதையே செய்திடுந் தொடர்
இத்தரை மெச்ச மெத்தவும் பேசி
நத்தி நாம் போற்றும் நல்லதோர் பசுவை
குத்திக் கொல்பவ ரித்தனை பேரையும்
என்னநாம் செய்வது? என்றே கூஉய்
இன்னும் பசுவிற் கின்னலே செய்ய
முந்தும் இவரோ முழுதுணர் அறிஞர்?
அதான்றி,
மத மெனப் பிதற்றி விதவித தமரகம்
பற்பல இழுத்தே பன்னெடு நேரம்
படபட வென்றே பலவடி யடித்து
கீதம்பாடி கிண்ணரங் கொட்டி

---

வெகு நம்பிக்கையாக நடந்த மனுஷ்யன் பிறகு ஒரு கனத்த மோசத்தைச் செய்து பகையாகி விடுகிறுன். அவனிடம் நம்பிக் கொடுத்த பொருள் திரும்பி வருவதும் அபூர்வமாய் விடுகிறது. இதுவே நாளைக்கும் நடப்பது.

நாதம் பலசெய் நவநவ கருவிகள்
பற்பல ஒலித்து, பளிங்கென இலங்கும்
பள்ளிவாசலெனும் பரமனதிடத்தே
தள்ளவும் அகலார் தறுகணு ளர்பலர்
இதுபோழு முசல்மான் ஆத்திரங் கோள்வர்
இதுவழி அவர்தமை இழிவா நடத்தல்
கடவுளை இழிவாக் கருதுமோர் வகையே!
ஆதலின் மைந்த! ஆண்டவன் அடிநிழல்
அடைதலும் உண்டோ? அன்போடு வணக்கம்
இன்றேனிற் பிறர்பால்—இப்பேர் உலகில்
எண்ணிலா பல்வழி யனைத்தும் எண்ணுகில்,
வேதம் தேடுமவ் வீட்டைக் குறித்தே:
எனவே, ஆன்ம உரிமை அன்பாம்:
எவ்வான் மாவும் ஈசன திருக்கையாம்.

(மற்றவை மற்றதில்.)

மு. துரைப் பிள்ளை.

காமம்—தனக் கனுகுண மான, திருஷ்டி, சேஷ்டை, வாக்கு விகாரங்களினுலும், தடையை மீறிச் செய்யும் ஈனமான கிருத்யங்களினு லும் அழுக்கை உள்ளேசெலு த்தி, அவற்றின் கலப்பினுல் ஆன்மாவை மலினமாக்கி, மிருகத்தன்மையைக் கொடு த்து, அதற்கு ஆதியிலிருந்த திவ்ய ஸ்வரூபத்தை முழு தும் இழக்கச்செய்து, ஆசா பாசங்களை அதிகரிக்கவிட் டுப் பாழ்பட வைக்கிறது.

ஒருவர் ஒன்றைக்கேட்டு அதை நீ தெரிந்து கொள் ளாதபோது உன் முகத்துக் கெதிரில் தன் கையை நீட் டிச் சிடுசிடுக்கிறவரை—"ஏன் அப்படிக் கை நீட்டிச் சிடு சிடுக்கிறீர்? உமது சிடுசிடுப் பும் தேவையில்லை, நீர் கேட் டதை நான் அறியவேண்டி யதும் அவசியமில்லை" என்று வெட்டிப் பேசிவிடு. அவர் உடனே அடங்கி ஒது ங்கிப் போய்விடுவார். ஏனே பிறரிடம் இழிவுபட ?

சில குடும்பங்களில் பெரியமனிதர்கள் நிறைந்திருந்து, அவர்கள் காலமாகி, அந்தப் பழய பெருமையும் அடியோடு போய் விட்டது. இப்பொழுது புதிய குடும்பங்கள் பல தோன்றிக் கொண்டு வருகின்றன. பழய பெருமை இல்லை.

---

நாஸ்திகம் பேசிக் "கடவுளைக் காட்டு" என்பார் நீதி தர்மங்கட்கும் மீறித் துணியலாம். அத்தகையோரிடம் எவ்வளவுக்குத் தூரவிலகி நிற்கி றேமோ அவ்வளவுக்கும் நன்மை. விரோதமோ—நட்போ வேண்டாம்.

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

REGISTERED TRADE MARK

# மாட்டிக் கொண்டது!



என்னடா அப்பா மாட்டிக்கொண்டது? எது?—ஏன்?—எதற்காக?—எப்போது?—எங்கே மாட்டிக்கொண்டது? பெட்டிக்குள் சாவியை வைத்து மறந்துமூடிவிடப் பூட்டு மாட்டிக்கொண்டதா? ஒத்து வாழ்ந்த குடும்பத்தில் ஒண்டிக்காரி ஒருத்தி நுழையப்போய் பிரிவினை மாட்டிக்கொண்டதா? உட்கார்ந்து தின்பவர்களுக்கும் உழைத்துப்போடுபவர்களுக்கும் சண்டை மாட்டிக்கொண்டதா? உப்பு—புளி—மிளகு—கடுகு—சீரகம்—காப்பித் தூள் இரவல் கொடுத்துக் கொடுத்துப் பிறகு ஒரு நாள் இல்லை யென்னும்போது வருகிற விரோதம் மாட்டிக்கொண்டதா? ரகசியமாய் நடத்திக் கொஞ்சிக் குலாவிய சங்கதி வெளியில் வந்து மாட்டிக் கொண்டதா? கொண்டானுக்கும் கொடுத்தானுக்கும் கோரணிகள் மாட்டிக்கொண்டதா? குரல் பெருத்த குண்டோதரனுக்குக் குட்டிச்சுவராய்ப் போக அவதிகாலம் வந்து மாட்டிக் கொண்டதா? விஸ்வாச ஊழியனுக்கும் எஜமானனுக்கும் விகல்பம் மாட்டிக்கொண்டதா? நூறு வரும், ஆயிரம் வரும், லாபம் கூடிவரும், அணங்கின் கழுத்தில் அழகான பொன்னுடைமையும் போடவரும் என்ற நினைத்த கடை வியாபாரத்தில் கனத்த கழிச்சல் மாட்டிக்கொண்டதா? குடிக் கூலிக்கு வைத்த இடத்தில் அங்கு குரோதமும் கைகுத்தும் மாட்டிக் கொண்டதா? ஊரைக் கொள்ளையடித்து உலையில் போட்டுக்கொண்ட உத்தியோகஸ்தர்களின் பிந்திய சந்ததிகள் அந்தப் பாவப் படுகுழியில் மாட்டிக்கொண்டதா? ஆகி ஓர் உருவாய் ஒழுங்குபட்டுக்கொண்டிருந்த குடும்பத்தில் ஆகாத செலவுகள் அநர்த்தங்கள் வந்து மாட்டிக்கொண்டதா? உப்பில்லை—புளியே யில்லை—அது இல்லை—இது இல்லை—என்று ஒய்யாரப் பாட்டு கணவனிடம் பாடிவிட்டு ஓய்ந்து ஒரு கவலையு மில்லாதிருந்து, ஆள்கொண்டுவந்துபோட்ட போது சமைத்துப் போடுவதான அம்மட்டில் நின்றவளுக்கு அந்தக் காலம் போய் அங்கலாய்ப்பு நாள் வந்து மாட்டிக்கொண்டதா? போன

---

சிலர் வீட்டுக்காரனை எதிர்த்து அலக்ஷியம் செய்துவிட்டு, அவன் மனைவியிடம் மட்டும் மிக்க வேண்டியவர்களாய் நடந்துகொண்டு மயக்குகிறார்கள்.

இடத்தில் நீண்டநாள் குந்திக்கொண்டதில் அங்கு முணமுணப்பு மாட்டிக்கொண்டதா? மாற்றாந்தாய்ச் சண்டை, மருமகள் மாமிச் சண்டை, பெரியப்பன் சிற்றப்பன் சண்டை, சகோதரச் சண்டை, சக்களத்திச் சண்டை போன்றவைகள் மாட்டிக் கொண்டதா? ஸ்வீகாரம் எடுத்த இடத்தில் அந்த ஸ்வீகாரப் பையன் தன் தகப்பன் வர்க்கத்தோடு சேர்ந்து கொள்ள அதிலிருந்து வம்பு மாட்டிக் கொண்டதா? தன்னை மறந்த ஆத்திரத்தில் படுகாயப்படுத்திவிட, அது கோர்ட்டுக்கேறித்தான் களிமொத்தை யுண்ணவேண்டிய சிறைச் சாலைச் சங்கதி மாட்டிக்கொண்டதா? கூட்டு வியாபாரத்தில் பிணக்கு வந்து மாட்டிக்கொண்டதா? வடகலை நாமத்துக்கும், தென்கலை நாமத்துக்கும் வழக்கு வந்து மாட்டிக்கொண்டதா?

ஃ

விகடன் சொல்ல வந்தவைகள் இந்த மாட்டுதல்களெல்லாமல்ல. அது வேறு சங்கதி! பெரிய இடத்து விஷயம்! இந்த நாளிலே இந்தியாவிலே நம்ம பந்தியிலே பெரியவாள் யாரு? அந்த எலும்புக்கூண்டு தாத்தா இருக்கிறாரே முழங்கால் வேஷ்டிச் சந்நியாசியான காந்தி மஹாத்மா.—அவர் தான் உச்சியில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். அவருக்கு மேற்பட்டவர்கள் யாருமில்லை. மற்ற பெரியவர்களெல்லாம் அவரது காலடியில் கிடப்பவர்கள். அப்படிக் கிடப்பதையும் ஒரு பெருமையாகவும் ஒரு அரிய வரமாகவும் நினைப்பவர்கள். இந்தக் காந்தி தாத்தா இந்தியா என்கிற நாடகமேடையிலே "பரிபூரண சுயேச்சை" என்கிற நாடகத்தை நடித்துக்காட்டப் போகிறாராம்! அவருடைய பிரதான சிஷ்யர்களான ஜவஹரிலால் நேருவும் அவரையொத்தவர்களும் தாத்தாவோடு கூடச்சேர்ந்து வேடம் போட்டுக் கொண்டு பரிபூரண சுயேச்சா நாடகத்தில் தா—தை—தோம்—ததிங்கண—என்று ஆடுவார்களாம்! ச—ரி—க—ம—ப—த—நி—பாடுவார்களாம்! இப்படி இவர்கள் ஆடியும் பாடியும் சுயேச்சா நாடகத்தை நடித்துக் காட்டுகிற சமயத்தில், இந்தியாவில் ஜனத்தலைவர் என்ற பெயரைச் சூட்டிக் கொண்டுள்ளவர்களும் அந்தப் பெரிய பெயரால் தங்கள் வருமானத்தைப் பெருக்கிக்கொண்டு லாபமடைந்துள்ளவர்களும், வாயளவில் பேசி வீசுகிறவர்களுமான படே படே தலைவர்களெல்லாம் அந்த நாடகமேடையின் மேல் ஏறுமலும் அவர்களுடன் கூட இருந்து துணையாக ஆடாமலும் அஞ்சி நடுங்கித் தூர ஒதுங்கி, அந்த மேடையின்கீழ்வெகு அலங்காரமாகப் போட்டுள்ள சோபாக்களிலும் வில்வெட்டு வைத்த நாற்காலிகளிலும் குசாலாய்க் குந்திக்கொண்டு அந்த நாடகம் எப்படி முடிகிறதென்று வேடிக்கையாய்ப் பார்த்துப் பல்லிளித்து நிற்பார்களாம்! இப்படி ஒதுங்கித் தூர உட்கார்ந்து வேடிக்கையைப் பார்க்க வருவார்களே தவிர, அந்த நாடக மேடையிலேறி ஒரு சிறுவேலைகூடச் செய்யமாட்டார்களாம்! இந்தக் குஷால்தாஸ்களையும் அலங்காரப் பொம்மைகளையுமே நம்பிக்கொண்டுதான் காந்தி தாத்தா அந்தப் பரிபூரண சுயேச்சை நாடகம் நடிக்கப்போகிறாராம்! இவர் நடிப்பதில் ஏதாவது தப்பு—தொந்தரை— ஏற்பட்டால் இந்தத் தாத்தாவையும்,

---

பொறாமை நோய் கொண்டோர் பிறருக்குத் தங்களால் செய்யக்கூடிய அல்ப உதவியைக்கூடச் செய்ய மனமில்லாமல் ஒதுங்கிக் கொள்கிறார்கள். இவர் விலகினும் கடவுள் அந்த மனிதனுடைய பிழைப்பை நடத்திவைத்துவிடுகிறார்.

அவருடன் சேர்ந்துள்ளவர்களையும் பிடித்துக்கொண்டு போய் பெரிய கட்டிடத்தில் பூட்டிவிடுவதற்காகப் போலீஸாரும், அரசாங்க உத்திரவுகளும் அந்த நாடகமேடைக்கருகே தயாராகக் காத்துக்கொண்டு நிற்குமாம்! அப்படித் தப்பு வந்து தாத்தா அகப்பட்டுக்கொண்டால், நாற்காலியிலும் சோபாவிலும் குந்தி நாடக வேடிக்கை பார்த்த தலைவர்கள் உடனே கைகொட்டிச்சிரித்து, "நான் அப்போதே சொன்னேன்—இந்த "மிஸ்டர்" காந்தி கேட்டாரில்லை" என்று பழித்துப்பேச முன்வந்து விடுவார்களாம்! இப்படிக் காந்தித் தாத்தாவைப்பழித்துப்பேசினால்தான் தாங்கள் போலீஸாரின்கைவிலங்குக்கு அகப்படாமல் தப்பிப்பிழைக்க முடியுமென்பது இவர்களின் நெஞ்சுக்குள்ளே யிருக்கிற எண்ணமாம்! ஆனதால், எவ்வளவு கேவலமாகக் காந்தித் தாத்தாவைச் சொல்லவேண்டுமோ அவ்வளவுக்கெல்லாம் இழிவாகப் பேசிவிட்டு இவர்கள் நாற்காலியை விட்டெழுந்து வீட்டில் தங்கள் குழந்தை குட்டிகள் இரும்புப் பெட்டிகள் சுகமாயிருக்கிறதுகளா யென்று பார்க்கப் போய்விடுவார்களாம்! இவர்கள் இப்படிக் குஷாலாகவும், தந்திரமாகவும், எதிலும் பட்டுக்கொள்ளாத பலே பக்கா பச்சடிகளாகவும் எழுந்து சென்றுவிட, இதற்கு நடுவிலே பரிபூரண சுயேச்சை நாடகமும் பாதியிலோ கால்வாசியிலோ நின்றுபோய் தாத்தாவும் மற்றவர்களும் போலீஸாரின் பாதுகாப்பில் பெரிய கட்டிடத்துக்குப் போய்விடுவார்களாம்! இப்படியாக இந்தப் பரிபூரண சுயேச்சை நாடகம் முடியக்கூடுமென்று விகடன் பார்த்த செல்லரித்துப்போன விகட ஆரூடத்திலிருந்தும் தெரியவருகிறது!

ஃ

விகடன் பார்த்த ஆரூட பலன்களையும் இங்கே கொட்டிவிடுகிறேன். ஏழாம் இடத்தில் சனி நிற்கிறது; அதற்கு நேர் திசையில் பதின்மூன்றாம் இடத்தில் போலீஸ் ஸ்டேஷன் நிற்கிறது; பத்தாம் இடத்தில் காபிஹோட்டல் இருக்கிறது; எட்டாம் இடத்தில் பரிபூரண சுயேச்சா நாடகமேடையிருக்கிறது; ஒன்பதாம் இடத்தில் ஒய்யாரத் தலைவர்களான கிரக தேவதைகள்இருக்கின்றன. "ஆறுகாட்டில் சண்டையானால் சந்தமாமா—நான்—அடுப்பங்கரையில் போய் நுழைவேன் சாப்பாட்டு ராமா"——"வேலூரிலே சண்டையானால் சந்தமாமா—நான்—விறகுபடப்பில் போய் நுழைவேன் சாப்பாட்டு ராமா"—"குண்டு சத்தம் கேட்டதேயானால் சந்தமாமா—நான்—கூற்றுவனூருக் கோடிப்போவேன் சாப்பாட்டு ராமா"—"துப்பாக்கிச் சத்தம் கேட்டதானால் சந்தமாமா—நான்—தொப்பை கலங்கி உப்பிச்சாவேன் சாப்பாட்டு ராமா"——என்று அந்தக் கிரகதேவதைகள் ஒப்பாரிப் பாட்டுகள் பாடிக்கொண்டு நிற்கின்றன. பதினாலாம் இடத்திலே லாயிட்ஜியார்ஜ் கிரகம் இருக்கிறது. அது இந்திய நாடகமேடையில் நடிக்கப் போகும் பரிபூரண சுயேச்சா நாடகத்தைக் கொட்டகையோடு பிய்த்துப் பிடுங்கும்படி சொல்லுகிறது. அந்த நாடகத்தை நடக்கவிட்டுப் பார்த்துக் கொண்டிராமல் தாத்தா காந்தியைப் பெரிய கொட்டடிக்கு அனுப்பிவிட வேண்டுமென்று பதினைந்தாமிடத்து எர்ல் விண்டர்டன் கிரகம் கொதித்தெழுகிறது. துரோகிகளையும் கலகக்காரர்களையும் அடக்கவேண்டுமென்று இன்னொரு கிரகம் சொல்லுகிறது. எப்படி எந்தப் பக்கம் நோக்கினாலும் காந்தி தாத்தாவைக் கண்டு சீறி எழுகிற நிலையிலேயே எல்லா கிரகங்களும்

இருக்கின்றன. காந்தி தாதாவை ஆதரிக்கும் கிரகங்களும் சில இல்லாமலில்லை. மற்ற கிரகங்களோ வேடிக்கை பார்த்தபடியே தாத்தாவுக்குப் புது புத்திகள் சொல்லிக்கொண்டு தூர ஒதுங்கி நிற்பவை. இந்த நிலையிலே பரிபூரண சுயேச்சை நாடகத்தையும் தாத்தா விட்டவராக இல்லாமல் நடித்துக் காட்டவே துணிந்து, ஜனவரிமாதம் 26-ம் தேதியை தேசீயத் தினமாகவும் கொண்டாடிவிட்டு அதற்கு மேலும் எட்டிப் பார்க்கிறார்! சாந்தமாய் நடந்துவந்த காங்கிரஸ் சபை இப்பொழுது திண்டாட்டத்தில் மாட்டிக்கொண்டது! காந்தி தாத்தாவும் மாட்டிக்கொண்டு விட்டார். அவரோடு சேர்ந்த முக்கியஸ்தர்களும் மாட்டிக்கொண்டுவிட்டனர்! இந்தியா கவர்ன்மெண்டும் தாத்தாவின் நாடகம் நடவாதபடி பார்க்கவேண்டிய தொல்லையில் மாட்டிக்கொண்டது. இதற்குமேல் இங்கிலாந்தோ அது ஒரு பெருத்த கவலையிலும் ஆத்திரத்திலும் மாட்டிக்கொண்டது. சட்டசபையில் குந்தப்போன ஆசையும் வெகு பேருக்குத் திண்டாட்டத்தில் மாட்டிக்கொண்டது! சுபாஷ் பாபுபோன்ற காங்கிரஸ் தலைவர்களும் சிறைக்குள் மாட்டிக்கொண்டனர்! பத்திரிகைகளின் பாடும் பரிபூரண சுயேச்சையை ஆதரிக்கவும் முடியாமல், அதில் சில கருத்துகளைத் தள்ளவும் முடியாமல் கனத்தசிக்கலில் மாட்டிக்கொண்டுவிட்டது. இவைகளெல்லாம் எந்தப் பக்கத்தில் இழுக்குமோ, எவ்வாறு கிழியுமோ, எத்தனை எத்தனை பேருக்குச் சிறைவாசமோ, எவ்வெவ்வாறெல்லாம்முடியுமோவென்று விகடன் சிந்தித்தபடியே மாட்டிக் கொள்ளாத வழியில் புத்தியைக்காட்டிக்கொள்ளக்கூடாதா வென்று என் யோசனைகளை நீட்டிக்கொண்டு, என் கோணைத் தடியை ஆட்டிக்கொண்டிருக்கிறேன்! எது எது எப்படி எப்படி யாகிறதோ! ராம்! ராம்! சுபம்! சூ! சுவாஹா!!

---

## அவனுக்கு அவ்வளவு பெருமை தராதே.

நமக்குச் சரிசமமாகாத ஒரு அற்பனை ஒரு பொருட்டாய் எண்ணி அவனுக்குப் பதில் சொல்லிக்கொண்டிருப்பது —அவனுக்கு அநுவசியமாக ஒரு பெருமையை உண்டாக்கி விடுவதாகும். அவனை மதித்துக் கோபுரத்தில் ஏற்றி உயர்த்தி விடுவதுமாகும். அவனே நம்மிடம் பேசுதற்கு யோக்கியதை யற்றதான தனது தன்மையை யறிந்து வெட்கித் தூர அகன்று அடங்கும்படி நாம் அலக்ஷியமாகிப் பேசாமல் ஒதுங்கிவிடுவதே சரி. அதுவே நமது கௌரவம் காக்க வழி.

கொல்லா விரதங் கொண்டவரே நல்லோர் மற்
றல்லா தார் யாரோ வறியேன் பராபரமே!

---

வலிய வந்து, தொந்தரை தந்து, பல்விளித்து, உறவாட முந்திக்கொண்டு, பிறகு நமக்குத் தொலையாச் சனியனாய் தொல்லை கொடுப்போர் எத்தனைபேர்?




மூன்று சுளி ணகரத்துக்கு விகடன் இன்னும் இரண்டு சுளியை அதிகமாக்கப் போகிறானாம்!

ஃ

அவனை இவன் கொல்லப்பார்க்க, இவனை அவன் கொல்லப் பார்க்க—இருவரையும் போலீஸார் மெல்லப் பார்க்கிறதாம்!

ஃ

இலையில் அப்படியப்படியே வைத்துவிட்டு எழுந்திருக்கிறவர்களுக்குத்தான் அதிக நெய்யூற்றிக் கனத்த உபசரிப்புகளும்—வட்டிப்புகளும்—செய்வார்களாம்!

ஃ

வீட்டுக்காரனுக்குக் கட்டிக்கொள்ள நல்ல வேஷ்டி யில்லாத ரகசியத்தை வண்ணானுக்கு மட்டும் மறைக்க முடியாதாம்!

ஃ

சண்டை நேரத்தில் பக்கத்து வீட்டில் இருந்துவிட்டு, ஏதும் அறியாததுபோல் பிறகு இருவரிடமும் குலாவ வருகிறவர்களுக்கு விகடன் 'பக்கா பகதூர்' என்ற பட்டம் கொடுக்கப் போகிறானாம்!

ஃ

அவளுடைய மருமகள்மீது இவளுக்கு ஆசை, இவளுடைய மருமகள் மீது அவளுக்கு ஆசை. ஆனால், ஆசைப்பட்டவளைத் தங்கள் குமாரர்களுக்கு மாற்றிக்கொள்ள முடியவில்லையே என்று மாமிகள் ஒப்பாரி பாடினார்களாம்! ஃ

சாமியைக் கும்பிடப் போன ஊரிலே எந்த செலவு மில்லாமல் குந்தித் தின்று அங்கேயே கழிந்தும் விட்டுப் புறப்பட ஒவ்வொரு திவ்ய க்ஷேத்திரத்திலும் ஏமாந்தவர்கள் சிலர் இருந்தால் நலமாயிருக்கு மென்று யாத்திரை சென்றவர்கள் விகடனுக்குச் சொன்னார்களாம்!

ஃ

ஏதேதோ பிரமாதமாய்க் கனைப்பதே தவிர, உள்ளுக்குள் எப்போதும் போல் பழய ஓட்டை தானாம்!

ஃ

பல்லுபோன கிழவர்களும், கிழவிகளும் நூறுபேர்வரை கரும்புத் தோட்டத்துக்குக் காவலுக்கு வேண்டுமாம்!

ஃ

வீட்டுக்கு வந்த விருந்தாளிகள் புறப்பட்டுப்போன மறுநாள் வீட்டில் வைப்பது மிச்சப்பட்ட காய்கறிகளின் குழம்பு தானாம்! ஃ

குடியேற்ற நாட்டு அந்தஸ்து என்பதற்கு (மதுக்) குடி அதிகம் ஏறிய நாட்டு அந்தஸ்து என்று அர்த்தமாம்!

ஃ

பரிபூரண சுயேச்சைச் சுதந்திரம்—வேலை போனவர்களுக்கும், பள்ளிக்கூடத்தை விட்ட பையன்களுக்கும், கணவனை மறு வுலகத்திற்கு அனுப்பிவிட்டவர்களுக்கும்—வெகு சுலபமாய்க் கிடைக்கிறதாம்!

ஃ

முதல்தரமான விகடகவி யாரெனில் பச்சைக் குழந்தைகள்தானாம். அதைப்போல சிரிப்புண்டாக்க மற்றவர்களால் முடியாதாம்!

---

துஷ்டான்ன பானங்களைப் புசித்தோ, குடித்தோ உண்டாகும் ஸந்துஷ்டியைப் பரிசுத்தர்கள் பெரிதாக மதியார்கள். அதை லக்ஷியம் செய்யார்கள்.



# ஹாஸ்ய சஞ்சீவினி



ஒரு ஊரில் இருளி யென்பவளுடைய மகள் முத்தி யென்பவளை ஒருவன் காதலித்து வந்தான். அதனால் அவன் தன் மனைவியையும் மறந்து, அவளிடத்திலேயே என்றும் பொழுதுபோக்குவானானான். இங்ஙனம் சிலநாள் செல்ல, முத்தி யென்பவளுக்குக் குளிர் காய்ச்சல் வர, அதனால் அவள் நாளுக்கு நாள் இளைத்து மெலிந்து துரும்புபோலானாள். அப்பொழுது அவளுக்குப் புலால் மீது அதிக விருப்பம் உண்டாயிற்று. அவளுக்கு மருந்து கொடுக்கும் வைத்தியன் மீன் தவிர வேறொன்றும் கொடுத்தல் கூடாது என்று சொல்லியிருந்தான். ஆகையால் அவள் காதலன் இவளுக்காக சில உயர்ந்த மீன்களை வாங்கிக் கொடுத்தான். என்னசெய்தும் சிலநாளில் அவள் இறந்துவிட்டாள். பின்பு அவள் காதலன் தன் மனைவியையே தஞ்சமாக அடைந்து, தான் செய்த தவறை மறந்து ஏற்குமாறு வேண்டினான். அவள் தன் புருஷனின் செயலைக் கண்டு பரவசப்பட்டாலும், வெளியே அதிக கோபமுள்ளவள்போல் காட்டிப் பின்வருமாறு தன் திக்குவாயால் புருஷனைப் பார்த்துக் கேட்டாள்.

“ளி ளி மகள் தி தி தி
மி மி, மி ம், செத்தாள் ;
டா டா புருசா !
நீ கொடுத்த மீன் சா ?—சா ?”

அவள் தன் புருஷனைப் பார்த்துக் கேட்டது இவ்வளவுதான். அதற்கு அவன் என்ன பதில் சொன்னான் என்பதை யான் அறியேன். அறியவேண்டிய அவசியமும் இல்லை. ஆனால், எனது நண்பர்களுக்கு அவன் கேட்ட கேள்வி இன்னதென யான் வரைந்துள்ளது தெரியாவிட்டால் பின் வருபவை அதனுள் அடங்கியிருக்கிறதா என்பதை மட்டும் கண்டு மகிழுங்கள்.

“இருளி மகள் முத்தி
இருமி இருமி செத்தாள் ;
இருடா புருசா,
நீ கொடுத்த மீன் சிறு சா? பெரு சா?”

K. M. முத்துவீரம ரெட்டியார்.

---

மனிதர்களின் எண்ணங்கள் பலவாறு யிருப்பதற் கேற்ப செய்கையும் பலவாறாகி, ஒருவருக்கு ஒரு பொருளைத் தர நினைத்த அடுத்த நிமிஷமே—“ஏன் தர”—என்று மனம் மாறிவிடுகிறது. பிறகு என்றும் தருவதேயில்லை.

நயமான விலைக்கு ஒரு புஸ்தகம் வந்திருக்கிற தென்று கூறினால் அதைச் செவியில் போட்டுக்கொள்வதில்லை. அதை எவரிடமாவது இலவசத்தில் பெற்று, நக்கி, ருசி பார்த்துவிட்டு ஒதுங்க இவர்கள் எண்ணம் போலும்!




மதுவிலக்குச் சங்கத்தார் :—ஐயா! தங்களிடம் நாங்கள் எவ்வளவோ வேண்டிக்கொண்டும், கடைசியாகத் தாங்கள் கவர்ன்மெண்டு பக்கம் ஓட்டுக்கொடுத்து விட்டீர்கள். உங்களைப் போன்றவர்களின் ஓட்டு பலத்தாலல்லவோ மதுவிலக்குத் தீர்மானம் தோற்று விட்டது?

எம். எல். ஏ :—ஓய்! சரிதாங்கணும்!! குடிப்பதினல் கெடுதலென்ன?

ம. வி. ச :—ஒருவன் குடிக்க ஆரம்பித்தால் அவன் சுய அறிவை யிழந்து அதோகதியாகிவிடுகின்ருன். குடியைக் கெடுக்கும் குடியைப் பெருக்கக் கவர்ன்மெண்டாரைத் தூண்டிவிட்டு நீங்கள் உதவியாக இருப்பது அநியாயத்திலும் அநியாயமாகும்.

எம். எல். ஏ :—சரிதான்! குடி வருமானம் குறைந்துவிட்டால் நீங்கள் கொடுக்கும் வருமானம் எந்த மூலைக்காகும்?

ம. வி. ச :—வருமானத்தை மட்டும்பார்த்தால் பொதுஜன நன்மையைக் கவனிக்க வேண்டாமா? இப்போது இப்படிப் பேசும் நீங்கள் தேர்தல் காலத்தில் மதுவிலக்குக்கு வேண்டியவரை உழைப்பதாக நீளச் சொன்னீர்களே?




எம். எல். ஏ :—எல்லாம் சரிதான்! தனக்கு மிஞ்சியல்லவோ தானதர்மம். எவன் குடித்து எக்கேடு கெட்டால் நமக்கென்ன?

[இத்தருணத்தில் டெலிபோனில் சப்தமுண்டாக, "எம். எல். ஏ." அதைக் கவனிக்கிருர்.]

டெலிபோன் :—ஸார்! தங்கள் குமாரன் மிதமிஞ்சிய குடிவெறியினல் தன்னறிவு இழந்து திடீரென மாடியிலிருந்து கீழே விழுந்து மடிந்தார். உடனே வருக.

எம். எல். ஏ :—ஐயையோ! நாசமாய் போகிற கள் சாராயம் நம்ம தேசத்தை விட்டு என்றுதான் ஒழியுமோ? குடியினல் இன்று என் குடி முழுகிவிட்டதே,........

மாந்தை-சா. கிருஷ்ணய்யர்.

ஃ



கணவன் :—வீடுநிறைய உன்னவர்களைக் கொண்டுவந்து நிறைத்துக்கொண்டால் செலவுக்கு என்ன செய்கிறது? எவ்வளவுக்குதான் கடன்படுகிறது? எத்தனை தடவை சொல்வது? உன் முட்டாள்தனத்திற்கு இந்தா இந்த உதையைப் பெற்றுக்கொள்.

மனைவி :—(உதைத்த காலைப் பிடித்துக்கொண்டு) உதைக்கிற அவ்வளவுக்கு மீறிவிட்டதா? உதைத்த காலை இதோ கடித்துத் துண்டாக்குகிறேன்.

கணவன்:—அடி யடி பாவி! காலை விடடி! வீட்டில் யாருமில்லை யென்று உனக்கு இவ்வளவு திமிரா? ஐயோ ஐயோ! பாவி கடிக்கிறாளே!!

∴



மனைவி :—அப்பாடா! ஒரு மாதம் உழைத்த உழைப்புக்கு சம்பளம் வந்தது போலிருக்கிறது. இந்தத் தடவையாவது என் கழுத்துக்கு இரக்கப்பட்டு ஏதாவது ஒரு நகை செய்யப் பாருங்கள்.

புருஷன் :—என் கண்ணே! உனக்கு நகை செய்து போட எவ்வளவோ ஆசைதான். ஆனால், இந்த ஊரில் இருக்கிறவரை விருந்துகள் வந்தபடியே இருக்கும். சம்பாதிக்கும் பணமும் அதற்கே போய்விடும். என்ன செய்கிறது?

மனைவி :—அதோ வண்டியிலிருந்து ஒரு கூட்டம் இறங்கி உள்ளே வருகிறதே. நேற்றுத்தானே ஒரு பெரிய கூட்டம் போய்த் தொலைந்தது.

புருஷன் :—சரி, வந்த பணத்திற்குச் செலவு வைக்கப் புறப்பட்டார்களாக்கும். இந்த அவதியில் நான் உனக்கு நகை எங்கே செய்யப்போகிறேன்?

∴



தபாற்சேவகன்:—நல்ல பத்திரிகைதான். ஆனால் அதை வாங்குவதற்கு என்னிடம் பணம் இல்லையே.

பத்திரிகாபிமானி :—காய்கறி வாங்கப் பணம் இருக்கிறதா? அரிசி வாங்கப் பணம் இருக்கிறதா? அது வயிற்றுச் சோற்றுக்கானால் பத்திரிகையோ உன் அறிவுக்கு உணவாகும். வயிற்றுக்குள்போவது பிறகு மாயமாய்விடும். பத்திரிகைக்குப் போடும் பணம் எந்த நாளிலும் வீணாகாமல் உபயோகந்தரும். நீ புசிப்பதில் தினந்தோறும் மிச்சம் பிடித்து வயிற்றைக் கட்டிப் பத்திரிகை வாங்கு. ஒரு தட்டில் பக்ஷணமும் பத்திரிகையும் வைத்தால் புத்திசாலி பத்திரிகையையே முதலில் எடுப்பான். இங்கிலீஷ்காரர்கள் பக்ஷணத்தைப் பாராமல் பத்திரிகையையே ஆவலோடும் எடுத்துக் கவனிப்பர். பத்திரிகையின் ருசி ஒரு தனி ருசியல்லவா?

**அவர் :**—நீர் வடகலையை ஆதரிப்பவரா? தென்கலையை ஆதரிப்பவரா?

**இவர் :**—நான் இருகலைகளையும் ஆதரிப்பவனல்ல; நான் சந்தனப் பொட்டு இடுபவன். ஆனால் சக்கரைப் பொங்—கலை மட்டுமே ஆதரிப்பவன்.

ஃ

**ராமன் :**—இந்த ஏழு குழந்தைகளும் உன்னுடையது தானே? நீ ஆதியிலேயே கர்ப்பத்தடைக் கருவியை உபயோகித்திருந்தால் இவர்களின் கூச்சல் தொல்லை யில்லாமல் ஹாயியாக என்னைப்போல் இருக்கலாமே.

**சோமன் :**—இவைகள் என் குழந்தைகளா யிருந்தால் எவ்வளவோ சந்தோஷிப்பேன். விவாகம் நடந்து எட்டு வருஷங்களாகியும் இன்னும் புத்திரப்பேறில்லை. நீ சொன்ன கருவியை நான் கண்டதுமில்லை; அது எனக்கு வேண்டாம். குழந்தைகளை யுண்டாக்க ஏதேனும் நூதன கருவி வருமா?

ஃ

**மாகதம் :**—அதோ நிற்கிறானே அந்தப் பையன் உன் தம்பியா?

**பொன்னு :**—அதென்ன அப்படிக் கேட்கிறாய்? அவர் என் வீட்டுக்காரரல்லவோ? உன் வீட்டுக்காரரைப்போல் தென்னை உயரம் இருக்கவேணுமா?

**மாகதம் :**—அப்படியா! இந்த மூன்று குழந்தைகளுக்கும் அவர்தான் அப்பாவோ! நன்றாகப் பார்த்துக் கண்ணாலம் பண்ணினாங்களே!

ஃ

**குப்பன் :**—புதிதாக ஒரு பத்திரிகை ஏற்படப்போகிறதாம். அது வெகு நன்றாக இருக்குமாம். அதன் அமைப்பே புதுவிதமாம்!

**சுப்பன் :**—மிக்க சந்தோஷம். அதை இலவசமாகப் பெறுவதற்கு வழி எப்படி? மாதிரி காபி யனுப்பும்படி ஒரு அரையணா செலவில் எழுதிவிடலாமா?

ஃ

**தங்கை :**—அண்ணா! நில்லு நில்லு. வெகு அவசரமாக நுழைய வருகிறாயே. அம்மா ஸ்நானம் செய்கிறார். உள்ளே போகக்கூடாது.

**தமயன் :**—அப்பா ஸ்நானம் செய்கிறார், நீ உள்ளே போகக்கூடாது என்று உனக்கு ஒரு நாளைக்குச் சொல்லி உன்னை வெளியில் நிற்கவைக்கிறேன்.

**தங்கை :**—அப்பா ஸ்நானம் செய்தால் அவருக்கு முதுகு தேய்க்க அம்மா வரவேண்டுமே. அம்மாவுக்குப் பின் நானும் சேர்ந்து வருகிறேன். வரக்கூடாதென்று நீ தடுக்க முடியாது.

ஃ

**விருந்தாளி :**—புசிக்க எதுவும் என் நாவுக்கு நன்றாயில்லை. சாதமும் நெய் அதிகம் ஊற்றிவிட்டதில் அதுவும் சுகமில்லை. வயிறும் சரியில்லை. எல்லாம் அப்படியே வைத்துவிட்டுத்தான் எழுந்திருக்கவேண்டும்.

**விருந்திட்டவன் :**—(தன் மனதுக்குள்) ஐயோ! உங்களுக்காக வீட்டார் எவ்வளவு பாடுபட்டு ஒவ்வொன்றும் செய்தார்கள்? எவ்வளவோ செலவாயிற்றே! எங்கள் கஷ்டம் தெரியவில்லையே! நாய் தின்னவா செய்தது?

---

சிலருக்குப் பெரிய தலைவர்களென்று பெயரே தவிர, சுயநலமும் தூர்க்குணமு ;் அகங்காரமும் தொலையக்காணோம்! பேர் மட்டும் மஹா தடபுடல்!

**மனைவி :**—கொஞ்சமாகச் செய்தால் அவ்வளவு கொஞ்சமாகச் செய்தாயே, ஒருவீசை உருளைக்கிழங்கு வாங்கினேனே, தாராளமாகச் செய்கிறது தானே என்கிறீர்கள். அதிகமாகச் செய்தால் இவ்வளவு என்னத்திற்கு? யார் இவ்வளவும் புசிக்கப்போகிறார்கள்?—என்று கையை விரித்துப் பழித்துக் காட்டுகிறீர்கள். அப்பப்பா! உங்களுடன் சமாளித்து முடியாது.

**புருஷன் :**—வாயைத் திறந்தால் உடனே குற்றம் என்கிறாயே. சரி நான் இனி எதுவும் பேசவில்லை. வெடுவெடென்று பழி போடுகிறாயே பாவி.

## கடமைகள் எவை எவை?

1. தமது விஷயத்தில் தாம் செய்யவேண்டிய கடமை. 2. தாய் தந்தைகள் விஷயத்தில் தாம் செய்யவேண்டிய கடமை. 3. மனைவி விஷயமாய்ச் செய்யவேண்டிய கடமை. குழந்தைகள் விஷயமாய்ச் செய்யவேண்டிய கடமை. 4. அக்கம்பக்கத்தார் விஷயமாய்ச் செய்யவேண்டிய கடமை. 5. சுற்றத்தார் விஷயமாய்ச் செய்யவேண்டிய கடமை. 6. செல்வவான்கள் விஷயமாய்ச் செய்யவேண்டிய கடமை. 7. ஏழைகள் — வறுமையிலுள்ளோர் — ஆதரவற்றவர்கள் முதலிய இவர்கள் விஷயமாய்ச் செய்யவேண்டிய கடமை. 8. ஸ்வதேசத்திற்குச் செய்யவேண்டிய கடமை. 9. அரசாங்கத்தார் விஷயமாய்ச் செய்யவேண்டிய கடமை. 10. சாமானியர்களின் விஷயமாய்ச் செய்யவேண்டிய கடமை. 11. தமது மதத்தினரது விஷயமாய்ச் செய்யவேண்டிய கடமை. 12. கடவுள் விஷயமாய்ச் செய்யவேண்டிய கடமை. ஆகிய இவை யனைத்தையும் குறைவறச் செய்து முடித்தலுக்குப் பெயர் **கடமை**—அல்லது தருமம் எனப்படும். நீங்கள் செய்து வருகிறீர்களா?

ஒரு கடிதத்தின் விஷயங்கள் சுருக்கமாயும், அதிகமாய் யோசிக்க முடியுமாறும், சாதாரணமாய்ப் பிறர் அறிய முடியாதவற்றை அடக்கிக்கொண்டதாயும், அதைப் பெறுகிறவருக்குமட்டும் விளங்கக்கூடியதாயுமிருக்கவேண்டும்.

பிறர் மீதுள்ள குறைகளை எஜமானனிடம் எடுத்துக்கூறி நல்லவனாவதிலும், அந்தப் பிறரது நற்குணங்களை மட்டும் உரைத்து இருபக்கத்திற்கும் நல்லவனாவது நலம். தயவுசெய்து இந்த நல்ல குணத்தைக் கொள்ளுங்கள்.

மனதிலுள்ளதை வெளியிட்டுச் சொல்லாவிட்டால் அது தைரியமான செய்கையாகாது.—மகாத்மா.

# பிரபஞ்சதரிசனம்



## அக்பர் சமஸ்தானத்தின் உன்னதம்.

## VII

அபுல் பேஜல் இஸ்லாம் சமயத்தில் பாதுஷாவுக்கு உண்டான நம்பிக்கையையும் அபிமானத்தையும் கெடுக்கிறானென்று ஜிஹாங்கீர் என்னும் ராஜகுமாரன் கோபித்து மற்றொருவரைக் கொண்டு கொலை செய்துவிட்டான். பாதுஷாவுக்கு இதனால் மிகுந்த துக்கமுண்டாயிற்று. இரண்டு நாள் இரவும் பகலும் அவருக்கு ஊணுறக்கமில்லை. தம்முடைய குமாரனால் நடந்ததென்று அவருக்குத் தெரியாது. எப்படியெனில், துக்க சமயத்திலும் தாம் முன்பு உதாசினம் செய்த குமாரனுக்கு மறுபடியும் பிரியத்தைக் காட்டினார்.

°°

அவர் தேக வியோகம் அடைவதற்கு நான்கு வருஷத்திற்கு முன்பு இங்கிலாந்து தேசத்தை யாண்ட எலிஜபெத் என்னும் இராணியார் இந்து தேசத்துக்குத் தம்முடைய உத்தியோகஸ்தரை அனுப்பிப் பாதுஷாவினிடத்தில் கண்டு பேசி வர்த்தகம் செய்ய உத்திரவு கேட்கும்படிக் கட்டளையிட்டார். அதற்கு முன்னரே இந்து தேசத்தில் ஒருவித கிறிஸ்துவ வகுப்பார் வியாபாரம் செய்து கொண்டிருந்தார்கள். வேறு ஐரோப்பியர்கள் வருவது அவர்களுக்கு விருப்பமில்லை. ஆதலால் அவர்கள் முயற்சி செய்துவந்த உத்தியோகஸ்தரை யாதொரு பயனுமின்றித் திரும்பிப் போகும்படி செய்துவிட்டார்கள். ஆயினும், ஆங்கிலேயர் சில வருஷங்கட்குப் பின்னிட்டு இந்து அரசருடைய அபிமானம் பெற்றுக் கருநாடகத்தில் வந்து வியாபாரம் செய்யத் தொடங்கினார்கள். 1653-ம் வருஷம் கொஞ்சம் நிலம் சம்பாதித்து சென்னபட்டணத்துக் கோட்டையைக் கட்டினார்கள்.

°°

எந்த ராஜ்யத்தில் கலகமின்றிக் குடிகள் சௌக்கியமாக வாழ்கிறார்களோ, அந்த ராஜ்யத்தைப் பற்றிச் சரித்திரத்தில் அதிகமாகச் சொல்ல சங்கதி இராது. பாதுஷாவின் அரசாக்ஷியும் இவ்வாறே நடந்தது. அதற்கு முன்னில்லாத க்ஷேமம் உண்டாயிற்று. செல்வம் அதிகரித்தது. கலகம் அடங்கிற்று. பாதுஷாவும் சண்டையை விட்டுத் தொலைத்துக்

---

இலவசமாகவே புஸ்தகங்களைப் பெற்றவன், அவற்றை இழந்து, பிறகு விலை கொடுத்துப் பெறும்பொழுது அவற்றின் அருமையை யுணர்கிறான்.

குடிகளுடைய சமாதானத்தைத் தேடினர். தமது மாளிகையிலிருந்து கொண்டும், தம்முடைய பிதாவினல் உண்டாக்கப்பட்ட சிங்கார வனத்தில் மரங்களின் நிழலில் உலாவிக்கொண்டும் ராஜாங்க நிர்வாகத்தைப் பற்றிய சட்டதிட்டங்களை ஏற்படுத்தினர். திரவியம் விருத்தியாகும்பொருட்டும், ஹிந்துக்கள் செழித்தோங்கும் பொருட்டும் பாடுபட்டார். ஐம்பது வருஷ காலம் இவ்வாறு பாடுபட்ட அக்பர் பாதுஷாவினல் குடிகளுக்கு உண்டான நன்மையை யாவரும் யோசித்துத்தெரிந்துகொள்ளலாம். நாளது வரைக்கும் அக்பர் பாதுஷாவை ராஜ சிரோமணியென்றும், தேவ அவதாரமென்றும் ஜனங்கள் புகழ்ந்து கொண்டாடுவது ஆச்சரியமா!

ஃ

பிறந்தவர் யாவராயிருந்த போதிலும் அவரும் இறக்கவேண்டிய காலம் ஒன்றிருக்கும். உலகத்துக்கு உபகாரியாயினும் சரி, அபகாரியாயினும் சரி, இருவரும் இறந்துபோவதில் சந்தேகமில்லை. பாதுஷாவிற்கு வயது முதிர்ந்துவிட்டது. ஆதலால் புண்ணிய கிரியைகளிலேயே காலத்தைச் செலுத்தி வந்தார். ஜிஹாங்கிர் என்னும் குமாரனை அழைத்துப் பிரபுக்கள் எல்லாரையும் வரவழைக்கும்படி உத்திரவு செய்தார். தம்முடைய குமாரனுக்கும் தாம் பழகிய பிரபுக்களுக்கும், சிநேகம் உண்டாக்கி மனஸ்தாப மிருந்தால் அதைப் போக்கும்படியாக மேற் சொன்ன உபாயம் செய்தார். அவர்களெல்லோரும் தம் முன்னிலையில் வந்து சேர்ந்த பின்பு தாம் செய்த குற்றங்களையெல்லாம் மறந்து மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

ஃ

பின்பு குமாரனை அருகில் அழைத்துக் கட்டித் தழுவி:—"என் பிரியமான பிள்ளையே, இப்போது கடைசியாக உத்திரவு பெற்றுக்கொள்ளுகிறேன்; இனி இவ்வுலகத்தில் சேர்ந்திருக்கமாட்டோம். அந்தப்புறத்திலிருக்கிறவர்களைக் காப்பாற்றுமல் கை நெகிழவிடாதே; நான் அவர்களுக்குக் கொடுத்துவந்த செலவே நீயும் கொடுத்துவா. நான் இறந்து போன பின்பு நீ துக்கசாகரத்தில் முழுகிப் போகும் சமயத்திலும் என் சொல்லை மறவாதே. நாமிருவரும் செய்த நம்பிக்கைகள் அநேகம், நீ எனக்குச் செய்து கொடுத்த உறுதியைக் கைவிடாதே; அதை மறக்க வேண்டாம். ஞாபகத்தி லிருக்கட்டும். உன்னிடத்தில் எனக்கு அநேகம் பாத்தியம் உண்டு; அந்தப் பாத்தியம் பெரிதாயினும் சிறிதாயினும் அதை மறவாதே. நான் பெற்ற ஜெயத்தை ஞாபகத்தில் வை. குடிகளுக்கு நன்மை விளைவித்த என் செய்கைகளையும் மறவாதே. என் வேலையாட்களையும், என்னை நம்பினவர்களையும் நான் இறந்துபோன பிற்பாடு மறவாதே. கஷ்ட திசையில் இருப்பவர்களையும் மறவாதே. நான் சொன்னதெல்லாம் ஒவ்வொரு சொல்லாய் யோசித்துப் பார். யாவற்றையும் மனதில் வைத்துக்கொண்டு என்னையும் மறவாதிரு—" என்றார்.

ஃ

இவ்வாறு வேண்டிய புத்திமதிகளைச் சொல்லிவிட்டு, அக்பர் பாதுஷா

---

"ஆசை கொண்டு நீங்கள் வைர மூக்குத்தி வாங்கினல், அதே ஆசையைக்கொண்டு நான் ஒரு புஸ்தகம் வாங்குகிறேன். உங்களுடையது மட்டும் சரியான செலவு—என்னுடையது மட்டும் வீண் செலவா?"

வானவர்—1605ளு அக்டோபர்மீ 10-ம்தேதி இரவில் பரகதியடைந்தார். அவர் உலகத்துக்கு ஒப்பற்ற ஆபரணம் போன்றவர். ஜனங்களை அவர் தாயைப்போல் பாதுகாத்தவர். ராஜாதி ராஜன். மகா பெரியவர். மிக்க அதிர்ஷ்டம் உடையவர். ஜெயம் பெற்றவர். கௌரவமே அவருடைய பிருது. அவருடைய பெயர் ஒரு காலத்திலும் மறந்துபோகாது.

°°

பாதுஷாவினுடைய சரம கிரியைகள் அவருடைய பெருமைக்குத் தக்கபடி நடந்தன. ஜிஹாங்கிரும் அவருடைய குமாரர் மூன்று பேரும் சவப்பெட்டியை அரமனையிலிருந்து வெளியே தூக்கிவந்தார்கள். வெளியேவந்தபின்பு ஜிஹாங்கிர் தோளை வாங்கிக்கொண்டார். அவருக்குப் பதிலாகப் பிரபுக்கள் தோள் கொடுத்தார்கள். ஆக்கிரா பட்டணத்துக்கு நான்கு மைல் தூரத்தில் யமுனா நதி தீரத்தில் இருக்கிற சிகந்தா பட்டணத்துக்குக் கொண்டு போனார்கள். அங்கே மன்னர் பிரானை அடக்கம் செய்து அதன் மீது கோடியே எண்பது லக்ஷம் ரூபாய் செலவுசெய்து கோரியொன்று கட்டினார்கள். அதை நாளைக்கும் பார்க்கலாம்.

(மற்றதில் முடிவு.)

வேசியும் தாசியும் நம்மனோது சிவாலய விஷ்ணுவாலயங்களில் சுவாமி காரியார்த்தமாய்ப் பிரயோசனப்படத்தக்கவள் என்று கொள்வதும் அவசியமேயோ? வேசையின் தாசத்வம் எம்பெருமான் அடையப்பெறுராயின், அவர் திருவுலாவரத் திருவுள்ளங் கொள்ளாரோ? வேத வித்துக்கள் சாமகீதம்பாடிப் பின்றொடரும் எங்கோவைப் பொது மகளோ வழிக்காட்டி அழைத்துச் செல்வது? பேரின்ப ஞானம் புகட்டுமிடத்தில் சிற்றின்பச் சேரு?

## பத்திரிகைப் பித்தே உயர்வாம்.

பெண்பித்தும் பொன்பித்தும் பேச்சாம் பெரும்பித்தும்
மண்பித்து முண்டிவகைப் பித்து—மெண்பித்தீ
தேத்தனையோ வுள்ள தெனினு "மமிர்தகுணப்
பத்திரிகை"ப் பித்தே யுயர்வாம்.

V. சிவசுப்பிரமணியன்.

(முதல் இரண்டு வரிகளும் "அறநெறி வெண்பா" ஆகும்.)

அதிர்ஷ்டம் என்ற தேவதை எங்கள் கண்ணுக்கு எதிர்ப்பட்டு வாய்க்காவிடினும், காதிலாவது எதேனும் ஒரு சத்தத்தை விழச்செய்ய வொண்ணாதா?

# ழகர—ளகர பேதங்கள்.

(முன்பக்கம் 563-லிருந்து.)

25. துழம்பு—கஞ்சி, குழம்பு என்பது, சேறு.
துளம்பு—விலங்குகளின் இரட்டையாகவும், ஒற்றையாகவும் இருக்குங் காலடி.

26. துழவி—இளமை.
துளவி—ஓர்வண்டு.

27. துழி—பள்ளம்.
துளி—குளிப்பு

28. துழியம்—திரட்சி.
துளியம்—உண்டை

29. கோழி—உரையூர், கோழி.
கோளி—அத்தி, ஆல், கொளிஞ்சி மரம்.

30. சுழித்தல்—சுழிக்குதல்.
சுளித்தல்-கோபம், சினக்குறிப்பு.

31. சூழி—உச்சி, உச்சிக்கொண்டை.
சூளி—ஆண்மயிர்.

32. சோழம்-ஓர்தேயம். (சோழன்—சூரியன் ஓர் அரசன்.)

33. சோளம்—ஓர்பயிர்.

34. தழை—இலை. மயிற்றோகை.
தளை—கால் விலங்கு, காற்சிலம்பு.

35. தழைதல்— தளிர்த்தல்.
தளைதல்-பிணித்தல்

36. தாழி—குடம், சாடி
தாளி—அனுடநாள், ஓர் கொடி, பனைமரம்

37. தாழ்—சுவர்ப்புறத்து நீண்ட உத்திரம், தாழ்க்கோல்
தாள்—ஆதி, கதவுறுதாள், கால், முயற்சி

38. தெழித்தல்—அதட்டல், கோபம், துவைத்தல்.
தெளித்தல்—ஒலித்தல், தூவல், விதைத்தல்.

39. தோழி—பாங்கி
தோளி—ஒருவகைச் சிவிகை, நீவி

40. நாழி—அளக்கும் நாழி. பூரட்டாதி.
நாளி—கள், நாய்

41. நீழல்—ஒளி, நிழல், நோய்
நீளல்—ஒடல், தூரம்

42. நுழை—நுண்மை, நுழையென்னேவல், நுழைவாயில், பலகணி
நுளை—ஈனம்

43. பாழி—அகலம், உரை, ஊர், குகை.
பாளி—அடையாளம், பாசறை

44. பூழை—கோபுர வாயிற் கதவிலிட்டுப் புகும் வழி
பூளை—இலவம்பஞ்சு ஓர் செடி

45. முழவு—பறைப்பொது.
முளவு—முட்பன்றி

46. முழை—துடுப்பு, மலையினுட்குகை.
முளை—மூங்கில், முளை

47. முழைத்தல்—எழுத்திலா வோசை
முளைத்தல்--முளைக்குதல்

48. மூழை—துடுப்பு, மத்து முகவை.
மூளை—தலை முதலியவற்றின் மூளை.

(தொடரும்.)

---

ஒரு பெண்ணுக்குத் தன் புருஷன் இறந்தவுடன் உணர்ச்சிகளெல்லாம் போய்விடுகின்றனவா? போய்விட்டதாகவே கருதிக்கொள்ளும்படி உலகம் ஒரு குருட்டு நம்பிக்கையைக் கொள்ளும்படி நிர்ப்பந்தித்துப் போதிக்கிறது.

# இன்பமும் துன்பமும்.

இன்பம் இன்பம் எங்கு எங்கு
துன்பம் எங்கோ தொடரு மங்கு
துன்பம் எங்கு துன்பம் எங்கு
இன்பம் பொங்க இருக்கு மங்கு
இன்பம் உண்டேனில் துன்பம் உண்டு
துன்பம் உண்டேனில் இன்பம் உண்டு
புரண்டுதிக் கும்முடல் புனிதம் பெறவிவ்
விரண்டும் உலகில் இறைவன் அமைப்பு
சோதனை யாலே சுகநிலை காட்டி
வாதனை யொழிக்கும் வழியிவை யாகும்
இன்பம் துன்பம் இரண்டுங் காட்டி
மன்பதை யுலகில் வெறுப்பை யூட்டி
நீண்ட நலம்பெற நெறிதனைக் காட்டும்
ஆண்டவன் அருளை அறையப் போமோ ?

T. S. குழந்தைவேல் முதலியார்.

## தர்மங்கள் எவை எவை ?

1. பசியுள்ளவருக்குப் போஜனமும், 2. தாகம் கொண்டவருக்குத் தண்ணீரும், 3. உடையற்றவர்களுக்கு உடைகளும், 4. வியாதியஸ்தர்களுக்கு மருந்தும், போஷிப்பும், 5. வீடற்றவருக்கு வீடும், 6. துக்கங்கொண்டவருக்குத் தைரியமும், 7. விருத்தர்—விதவை—பெற்றோரற்ற பிள்ளைகள் — முதலானவர்களுடைய சங்கடங்களை நீக்கிச் சந்தோஷத்தையும், 8. படிக்க விரும்பும் பேதைகளுக்குப் புஸ்தகங்களும், பொருளும், 9. படிப்போருக்குப் பாடசாலைகளும், 10. வியாதியஸ்தருக்கு வைத்திய சாலைகளும், 11. தேவ பக்தியுள்ளவர்களுக்குத் தேவாலயமும், பின்னும் இத்தியாதி தர்மங்களே முக்கியமானவைகள். இத்தருமங்களை இல்லறத்தார் ஹிருதய பூர்வமாகச் செய்ய சித்தமா யிருக்கவேண்டும். நீங்கள் செய்தது எவ்வளவு ?

தன்னிடம் வலியவந்து கெஞ்சுவானெனச் சிலர் நினைத்துத் தூர விலகுகின்றனர். கடவுளோ அந்த விலகியவர்களுக்குப் பதிலாகத் தக்கவராக வேறொருவரைச் சேர்த்துக் கண் கலங்காதிருக்க வைத்துவிடுகிறார்.






இன்று கூடிய நமது கடையில் பச்சடி ராயர் ஏமாறாதவனென்று ஒருவனைப்பற்றித் தெரிந்துகொள்ளும்போது நடக்கும் தினுசைக் குறித்து விவரித்தார். "ஒரு தேங்காயின் விலை ஒரு அணாவுக்கு மேல் பெறக்கூடியதா யிருந்தும் இரண்டு தேங்காய்களை ஒன்றே காலணாவுக்குப் பக்ஷணக்கடையில் ஒருவன் விற்றுவிட்டுக் காலணாவடை யொன்றை இனாமாகக் கேட்டான். பக்ஷணக்கடைக்காரன் கண்டிதமாய்த் தரமுடியாதென்றான். எவ்வளவு கெஞ்சியும் பயனில்லை. உடனே தான் விற்ற தேங்காய் இரண்டையும் எடுத்துக்கொண்டு ஒன்றேகாலணாவைப் பக்ஷணக் கடைக்காரன் முகத்தில் வீசி யெறிந்து, இரண்டணா தந்தால்தான் தேங்காயைத் தரமுடியுமென்றான். தேங்காய்க்கு அப்பொழுது மிகவும் கிராக்கி. அந்த இரு தேங்காயும் மூன்றணாகூடப் பெறக்கூடும். கடைக்காரன் வேறு விதியின்றி இரண்டணாவைக் கொடுத்து அவ்விரு தேங்காய்களையும் வாங்கிக்கொண்டு, வடை—பக்ஷணங்கள் ஏதாவது விலைக்கு வேண்டுமா என்றான். "நான் காலணா வடையைக் கெஞ்சிக் கேட்டபொழுது நீ மீறினாய்; உடனே எனக்கு விழிப்பு தோன்றி என் திறனைக் காட்டிவிடவே நீ இப்பொழுது கெஞ்சுகிறாய்; வேறு கடையில் என் கைக்காசைத் தந்து வாங்கிக்கொள்ள எனக்குத் தெரியும்" என்று அவன் சென்றான். கால்காசு பெறும் காலணா வடையைத் தர மறுத்தவன் பிறகு முக்காலணா ரொக்கமாகத் தந்தது என்? ஆள் ஏமாறியவனல்ல வென்பதைத் தெரிந்துகொண்டதால்தான். எவரும்விழித்துக்கொள்ளும்பொழுது மற்றவர்கள் தலைவணங்கிப் போய் விடுகிறார்கள்" என்று கூறினார்.

ஃ

எழுதிப் பார்ப்பதற்கும், எழுத நினைத்துக்கொண்டிருப்பதற்குமுள்ள பேதத்தைப்பற்றி ஆமவடைப் பண்டாரம் விளக்கினார். "எழுதலாமே யென்று யோசிப்பதில் எழுதுதற்கு வேண்டிய முக்கியமான தாய்ச் சரக்கு மட்டும் கிடைக்கலாமே தவிர, மற்றொன்றும் அகப்படாது. அந்தத் தாய்ச் சரக்கை வைத்துக்கொண்டு எழுதிப் பார்ப்போமென்று முயலும்போதுதான் எதிர்பாராத புது நினைவுகளும் புதுச் சரக்குகளும் பெருகிச் சென்றுகொண்டுபோய், ஆதியில் நினைத்த யோசனையையும் சிறிது சீர்திருத்தி மாற்றி நூதனப்படுத்தி அழகாய்ப் பூர்த்திசெய்ய முடிகிறது. இந்த சக்தி எழுதுவதற்குமுன் உண்டாவதில்லை. எழுதுங்காலையில் தான் அது முறையே தொடர்ந்து அமைந்து வியக்கும்வாறு முடிவுறுகின்றது" என்றார்.

ஃ

---

உத்தமர்கள் பிறரது தீயசுபாவமும் இழிதன்மையும் கண்டுணர்ந்த பின்னர் மீண்டும் எக்காலத்தும் அவர்களை நாடுவதில்லை. இவ்வளவுக்கு அந்த அதமரிடம் அவமானப்பட்டது போதுமென்று வெறுத்து ஒதுங்கி விடுகின்றனர்.

அல்லாபிச்சை, மாமி மருகியைப் பற்றி ஒரு குறிப்பு உரைத்தார். மருகியை ஒரு விளக்குக்குச் சமமாகச் சொல்லலாம். அந்த விளக்கு சில சமயங்களில் மாமியைச் சுட்டுவிடுகிறது. ஆயினும், அந்த விளக்கு இன்றி வீட்டுக்குப் பிரகாசம் உண்டாகாதாதலால் சுட்டுவிட்ட விளக்கென்று உதறிவிடாமல் அதற்கு மீண்டும் எண்ணெய் ஊற்றித் தீபமேற்ற வேண்டிவருகிறது. இவ்விதம் பொறுத்து மன்னித்துச் செல்வதே தனக்கும் விளக்குக்கும் க்ஷேமமாகும். அவ்விதமின்றி விளக்கினிடத்துக் கொதிப்பு மிகுந்து எண்ணெயிடத் தவறின், இருளடைவது தன் வீடேதான் என்பதை நல்ல அறிவுடன் ஒவ்வொரு மாமியும் நீள யோசித்துப் பார்க்கவேண்டுமென்று பேசினர்.

ஃ

"ஒரு அன்னிய மனிதனைக் குறிப்பிட்டு, அவன் ஒரு ஸ்திரீலோலனென்றும் இன்னும் பலவிதமாயும் ஆத்திரத்தில் ஒருவர் கூற வரும்பொழுது, அதைக் காதில் போட்டுக் கொள்ளாது அவ்விடத்தை விட்டு நடந்துவிடுவதே அந்த சண்டையில் தான் சம்பந்தப்படாதிருக்க வழி" யென்று தொந்திராயர் செப்பினர்.

ஃ

"உலகில் ஸகோதர ஸகோதரிகள் ஆபத்து ஸம்பத்து சமயங்களில் ஒத்தாசையாகவும் ஒரு துணையாகவும் கூடஇருந்து திரவிய ஒத்தாசையில்லாவிட்டாலும், சரீரப் பிரயாசையாலானவைகளையாவது செய்து உதவவேண்டியது அவசியம். அது கடவுளுக்கும் பிரீதியாயிருக்கும். இவ்விதம் ஒருவருக்கொருவர் உதவியாயிருக்க வேண்டிய சகோதர சகோதரிகள் தனித்தனிக் குடும்பமாகப் பிரிந்திருப்பதின் காரணமென்ன? கடவுள் அதிக வருமானத்தையோ நில பலங்களையோ அவர்களுக்கு இன்னும் கொடுக்காததுதான். அதனல் தங்களுக்குக் கிடைக்கிற சொற்ப வருமானத்திற்குள் மானமாய்க் கை மூடிய வாழ்வில் அந்தந்த ஸகோதர ஸகோதரிகளும் ஜீவிக்கவேண்டியவர்களாயிருக்கிறர்கள். அதனல் மனமொத்தவர்கள் கூடத் தனித்தனிக் குடும்பமாகப் பிரியும்படி ஏற்படுகிறது.

ஃ

ஒரு சகோதரனின் வருமான நிலைமை அவனுடைய சொந்த குடும்பச் செலவுகளுக்குமட்டுமேகட்டிவரக் கூடியதா யிருப்பதால், ஒரு ஸகோதரன் மற்றொரு ஸகோதரனின் வீட்டில் சிலநாளைக்குமட்டுமே தங்கியிருக்கக்கூடியதாயும், பலநாள் தங்கமுடியாததாகவும் இருக்கிறது. இப்படி அதிக தினம் தாமதிக்க முடியாததாய் இருக்கிறவகையில், அந்த ஸகோதரனைக் கோபிப்பதும், குற்றமாக நினைப்பதும் சரியாகாது. அவன் படும் கஷ்டமும், வருமானக் குறைவும், தரித்திரமும் தெரிந்து அதற்குத் தக்கபடி சிலநாள் இருந்து அவ்வளவுடன் திரும்பிவிடுவதும், மறுபடியும் பலநாள் பொறுத்து வந்து சிலநாள் இருந்து திரும்புவதுமாக—இப்படி வரவும் போகவும் இருப்பதே உத்தமம். ஏனெனில் அதிக நாள் தங்குவது அவனுக்கு ஆநந்தமேயாயினும், அதற்குத் தகுந்தபடி அந்த ஸகோதரனுக்கு வரும்படி அதிகமில்லை. இவ்விதமான உள் ரகசியம் தெரிந்து அன்பாகவே இருந்து

---

இவள் பாடப்பாட இரவும் மகிழ்ந்து புன்னகை செய்கின்றதே! அதோ மாரன்கணை தென்படுகின்றதே! இதோ மனோகரமான நிலவும் புறப்பட்டுவிட்டதே.

ஸகோதர அன்னியோன்னியத்துடன் அவனுக்கு அதிகப் பிரயாசை வைக்காமல் வரப்போக இருப்பதே தர்ம நியாயமாகும்.

ஃ

அவன் தன் வருமானக் குறைவைச் சொல்லி, அதிக நாள் தங்கும்படி கூறத் தனக்கு சக்தியில்லாததைத் தெரிவிக்கும்போது, அதை ஏற்றுக்கொண்டு அவனைக் கௌரவிக்காமல் தூற்றுவதும் ஒதுக்குவதும் பழிப்பதும் சரியல்ல. ஒருவன் தன் மனதைத் திறந்து தன் ஏழ்மையைச் சொல்லும்போது அவனைக் கேவலப்படுத்துவது புத்திசாலித்தனமாகாது. இதை மனதில் ஒரு காரமாக வைத்துக்கொண்டு அவனுக்கு உதவவேண்டிய சமயங்களில் விலகித் தூரப்போவதும் ஒழுங்காகாது. அவரவர்கள் படும்பாடுகளைத் தனது காலக்ஷேப கஷ்டங்களைக்கொண்டு தன் மனதில் வைத்து நீள நினைத்துப் பார்த்துத் தெரிந்துகொண்டு—அவனும் வாழ—தானும் வாழ—அன்னியோன்னியமாய் நடப்பதே ஸகோதர அன்பாகும். பழிக்கிற புத்தி கூடாது. அது கிரகிக்கக்கூடாத அவசரத் தன்மையாலும் அவிவேகத்தாலும் ஏற்படுவதாகும். இது பொதுவிலும் சரி, சொந்தத்திலும் சரி. இருக்கவேண்டிய அன்பை ஒரு காசு செலவின்றி மனத்தால் காட்டலாம். அந்த அன்பு இருபக்கமும் குறையாதவாறு நடந்துகொள்ள வேண்டும். அது கடவுளுக்குப் பிரீதி; உத்தம செய்கையுமாகும். அதுவே உண்மையான ஸகோதரத்துவம்" என்றார் தாண்டவக்கோன். இத்துடன் நமது கடையும் முடிவு பெற்றது.

"பகதூர்" பொன்வண்டு செட்டியார்.

## மாறுகிற பச்சோந்தி.

முதலில் ஒருவிதமாக வாக்குறுதி யளித்து விட்டுக் கிரியாம்சையில் வேறு விதமாக நடந்துகொள்ளுகிற மனிதனின் வார்த்தைகள் ஒருபோதும் நம்பிக்கையை உண்டுபண்ணுவதாகாது. அவனுடைய கபடமான குணத்தை இதிலிருந்து தெரிந்துகொண்டபிறகு இனி எந்தக் காலத்துக்குமே அவனிடம் எவ்வித பழக்கமுமில்லாமல் தூர விலகிவிடுவதே உத்தமமாகும்.

"கூடியமட்டில் மற்றவருக்குத் தொந்தரவு செய்யாமல் எங்கேயாவது சம்பாதித்துப் புசித்து நாளைக்கடத்திவிட என் எண்ணம். பின் நிகழ்வு எப்படியோ?"

சாப்பிடுவதும் செலவுதான், உயிரோடிருப்பதும் செலவுதான். பணச் செலவைப் பார்த்தால் முடியுமா? செலவிடாதாரின் சுகம் செத்துப்போகும்.

ஒரு தஸ்தாவேஜியின் கருத்தும், அதிற் கண்டுள்ள உறுதிகளும் நடத்திக்காட்டப்படாவிட்டால் அதன் வாசகத்தால் மாத்திரம் ஒன்றும் பிரயோஜனமில்லை.

# நமது சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்.



அடுத்த ஸஞ்சிகையுடன் நமது "அமிர்த குணபோதினி"க்கு நான்கு வருடங்கள் ஸம்பூர்ணமாகின்றன. தமிழ் நாட்டிலும், பிறதேயங்களிலும் "அமிர்த குணபோதினி" எங்கெங்கும் சென்று உலாவி, ஏககாலத்தில் **31000**-நண்பர்களைச்சந்தித்துப் பரவசம் கொள்ள வைத்து உத்ஸாக மூட்டுகின்றது.

## "அமிர்த குணபோதினி"யின் உயர் நலங்கள்.

"அமிர்த குணபோதினி"க்கென்றே ஒரு புதிய நடையில் அது வரையப்படுகின்றது. பொறுக்கி எடுத்த பண்டிதமணிகள் அதற்கு விஷயதானம் செய்து வருகின்றனர். அதன் ஆசிரியர் ஒவ்வொரு விஷயத்தையும் நன்கு ஆராய்ந்து வெளியிடுகின்றார். அவரே பத்திரிகையின் பெரும்பான்மைக்கும் எழுதுவோராயிருக்கின்றார். ஒரு பத்திரிகைக்கு முக்கியமான சிலாக்கியம் யாதெனில், அப்பத்திரிகையின் ஆசிரியரது உழைப்பும்—மேற்பார்வையும்—அவரது வியாசங்களுமே அப்பத்திரிகையிற் பெரும்பான்மையாகவும், எஞ்சிய சிறு இடங்கள் மட்டுமே விஷயதானம் செய்யும் கண்ணியர்களுக்கென விடப்பட்டதாகவும் இருப்பதேயாம். நன்கு உழைக்கும் ஒரு ஆசிரியர் செல்லும் உத்தம வழி இதுவே. உயிருள்ள பத்திரிகையொன்றின் அமைப்பு இவ்விதம்தான். அப்பொழுது அப்பத்திரிகைக்கு ஒரு தனிச் சிறப்பும் ஏற்படும். வெகு காலத்திற்கு முன்னிருந்த பிரஸித்திபெற்ற ஆசிரியர்கள் இவ்விதம் தாங்களே பத்திரிகையின் பெரும்பகுதிக்கும் உழைத்து, அப்பத்திரிகையை உன்னதமான நிலைக்குக் கொண்டுவந்தனர். "அமிர்த குணபோதினி" ஆசிரியரும் அந்தப் பழங்காலத்தைச் சேர்ந்தவர்களுள் ஒருவராதலால், தமக்கு முன்னிருந்து பிரக்யாதியுடன் வாழ்ந்து சென்ற ஸகோதர ஆசிரியர்களின் வழியையே பின்பற்றித் தாமே பத்திரிகையின் பெரும்பகுதிக்கும் உழைத்து "அமிர்த குணபோதினி"யை அதிசிரேஷ்டதரமான முறையில் நடத்திக்கொண்டு வருகின்றார்.

## "அமிர்த குணபோதினி"யின் அதிதீவிர விர்த்தி.

"அமிர்த குணபோதினி"யில் ஒவ்வொரு விஷயமும் சாரசங்கிரகமாகவே வரையப்படுகின்றது. "வீண் விரிவு" என்ற குற்றம் என்றுமே கிடையாது. "சுருங்கச் சொல்லல்—விளங்க வைத்தல்" என்பதைத் தழுவி, விசேஷித்த கருத்துகள் அமைந்ததாய் நிலவுமாறு ஒவ்வொரு வியாசத்திலும் கவனம் செலுத்தப்படுகின்றது. ஆதியிலிருந்த "அமிர்த குணபோதினி"யையும், இப்பொழுது நடைபெறும் "அமிர்தகுணபோதினி"யையும் கவனிக்கில் அதன் அதிதீவிர

---

முகத்தைப் பார்த்த அளவிலேயே அவரிடம் மரியாதையான பேச்சுப் பேசி வணங்கிச் சொல்லவேண்டுமென்று தன் மனமே தன்னைத் தூண்டிவிடுகிறது. சிலரது கம்பீரவதனம் இப்படி இயற்கையழகுடன் ஒளிர்கின்றது.

விருத்தி நன்கு விளங்கும். விஷயங்களில் மாத்திரமன்று, பக்கங்களிலும் இது விர்த்திகொண்டு 48—56—ஆகி, இப்பொழுது 64-பக்கங்களாக உயர்ந்திருப்பதும் அதன் வளர்ச்சியை நன்கு புலப்படுத்தும். அதன் ஆசிரியரது உழைப்பைப் போலவே, அதன் அதிபரது பிரயாசையும் ஊக்கமும் பதின்மடங்காகப் பெருகித் தற்காலமுள்ள மகோன்னதமான நிலைக்கு "அமிர்த குணபோதினி"யை உயர்த்தியிருக்கின்றது.

## அநுபவ ஞானத்தின் மாக்ஷிமை.

அநுபவச் சார்பில் நமது தமிழ் நாட்டில் இரண்டு மூன்று பத்திரிகைகளே முன்பு நடைபெற்றிருக்கின்றன. அவற்றிலெல்லாம் தலைமை வகித்து நின்றது ஒரேயொரு பத்திரிகை தான். அப்பத்திரிகைக்குப் பின்பு நமது "அமிர்த குணபோதினி"யே அந்த ஸ்தானத்தில் முதல்தரமான பத்திரிகையாக ஜ்வலித்து வருகின்றது. அநுபவ பூர்வமாக ஒவ்வொன்றையும் விவரித்தெழுதுவதென்பது சாமான்யமன்று. கடவுளின் ஸங்கல்பத்தால்தான் அது நிறைவேற வேண்டிய பாகம். அதற்குறிய அறிவையும் அநுபவ ஆற்றலையும் பெறுமுன்னர் எவ்வளவோ தத்தளித்துப்போக நேர்கின்றது. உலக வாழ்வில் ஒவ்வொரு தினத்திற்கும் ஒவ்வொரு புது அநுபவம் படிகின்றது; ஒரு புதுக்குறிப்பு தெரிகின்றது; இதுகாறும் கண்டிராத ஒரு நூதன உண்மை புலனுகின்றது; ஒரு புதுத்தோற்றம் எதிர்படுகின்றது; ஒறு புது அறிவு உதயம் கொள்கின்றது. இவ்விதம் அவ்வப்போது கிடைக்கும் அறிவுகளையும், தோற்றங்களையும், ஞான ஒளிகளையும், அநுபவங்களையும், முன் கண்டறிந்ததும்—கேள்வியுற்றதுமான அம்ஸங்களையும் ஒன்று சேர்த்து, அவ்வவற்றிற்கேற்ப ஒழுங்குபாடுகள் செய்து நவீன ஆராய்ச்சியின் வழியே புதினவகையில் கருத்துகளை விவரிக்கும் முறை அபாரமான உழைப்பினுல்தான் சாத்தியமாக வேண்டும். இத்துணைச் சிரமங்களையும் மனங்குளிர்ந்து ஏற்பது நமது பத்திரிகாபிமானிகளுக்கு இனிமை யூட்டவும், அன்னோரைப் பரவசப் படுத்தவுமேயாம். "அமிர்த குணபோதி"னியின் ஒவ்வொரு தலைப் பெயரும் ஒவ்வொரு புதுச்சுவையுடன் கூடியதென்பது யாவரும் ஒப்ப முடிந்த உண்மை.

## ஐந்தாம் வருடம்

நமது "அமிர்தகுணபோதினி"யை ஐந்தாம் வருட முதற்கொண்டு இன்னும் பல விசேஷித்த அபிவிர்த்திகளுடனும் நடத்திவரத் தீர்மானித்திருக்கின்றோம். சித்திரப் படங்களை அதிகமாய்ச் சேர்க்கவும், சிலாக்கியமான முறைகளைக்கொண்டு உன்னதப்படுத்தவும் மனப்பூர்வமாய் முயலுவோம். நம்மால் சாத்தியமான நவீன அம்ஸங்களை யெல்லாம் ஏற்றுச் செய்யவும் சித்தமா யிருக்கின்றோம். நமது அன்பர்கள் செலுத்தும் ஒரு ரூபாய் சந்தாவில் தபாற்செலவு மூன்றணுவை நீக்கினுல் நமக்குக் கிடைப்பது பதின்மூன்று அணு தான். இந்த சொற்ப தொகையைக்கொண்டு அபாரமான ஒரு பெரிய நிர்வாகத்தை நடத்துதற்கு, நமது அன்பர்களின் உதவியும் ஆதரவும் இப்பொழுது இருப்பதை விட இன்னும் அதிகமாக இருந்தால் தான் சாத்தியமாகும். அதற்காக நமது கையொப்பநேயர்களிடமிருந்து

---

பார்லிமெண்டில் லார்ட் சபையில் 700-அங்கத்தினர்கள் உள்ளார். தந்தைக்குப் பிறகு தனயன் அங்கத்தினராவதற்கான பாம்பரை உரிமையுடன் இது தொடர்கிறது.

இருவகையான உதவிகளை இத்தருணம் எதிர்பார்க்கின்றோம்.

## இருவகை உதவிகளில் முதல் உதவி.

(1) நமது சந்தாதார்கள் இந்த மாசிமாத ஸஞ்சிகையைப் பெற்றதும், ஐந்தாம் வருடத்திய புது சந்தாவை நமக்கு அனுப்பி உபகரிக்கும்படி வேண்டுகின்றோம். இது புது வருடத்திற்குத் தேவையானவற்றை மொத்தமாய் வாங்குவதற்கும், அவசியமான முன்னேற்பாடுகளைச் செய்வதற்கும் நமக்கு மிக்க சகாயமாக இருக்கும். காலணு புளி வாங்குவதற்கும் மூட்டைக் கணக்கில் வாங்குவதற்கும் உள்ள விலை பேதம் யாவருக்கும் தெரிந்ததே. வருஷாரம்பத்திற்கு ஏராளமான இருப்பை முன்னதாகச் சேர்த்துக்கொண்டால் பிறகு சௌகரியப்படும். அதற்கு நமது அன்பர்களான சந்தாதார்கள் இந்த மாசி மாதமே புது வருட சந்தாவை அனுப்பிக்கொடுப்பது மிக்க உபகாரமாக இருக்கும். இரட்டிப்புச் சந்தாவைச் செலுத்தியதுபோலுமாகும்.

## மற்றொரு உதவி.

(2) ஒவ்வொரு அன்பரும் தங்களின் புதிய சந்தாவுடன், ஒரு புதிய கையொப்ப நேயரையும் சேர்த்துக் கொடுப்பதென்று சபதம் செய்து கொள்வார்களாகின், பலதுளி பெரு வெள்ளமாகி ஏராளமான சந்தாதார்கள் கூடிவிடுவர். அமிர்த குணபோதினியை ஒருமுறை பார்த்த அளவில் எவரும் சந்தாதாரர்களாவதற்கு விருப்பங்கொள்வார்களென்பது உண்மை. நமது அன்பர்கள் சற்று சிரமமெடுத்துக்கொண்டாலே போதுமானது. இங்ஙனம் புது சந்தாதார்களைச் சேர்ப்பித்துக் கொடுப்பது நமது நிர்வாக சிரமங்களுக்கு எவ்வளவோ உதவியாக இருக்கும். தற்காலத்தில் ஒரு ரூபாய் ஒரு அணுவுக்குச் சமமாகி ஒரு நிமிஷத்திற்குள் செலவாய்விடுகின்றது. ஒரு விருந்தின்போது பல ரூபாய்களும் போதாமற் போகின்றது. காய்கறி கடைக்குச் சென்று திரும்புவதற்குள் முக்கால் ரூபாய் பறந்து விடுகின்றது! எஞ்சிய நான்கணுவுக்கும் ஏதோ ஒரு செலவு வந்துவிடுகின்றது. இவ்வாறு சிறகு கொண்டு பறக்கும் ஒரு ரூபாயை—302, தங்கசாலைத் தெரு, சென்னை என்ற விலாஸத்திற்கு அனுப்பிவிட்டால், வருடமுழுமைக்கும் "அமிர்த குணபோதினி" எனும் உன்னதமான ஸஞ்சிகை வீடு தேடி வருவதுடன், முன்னதாக சந்தாவை யனுப்பிய மகோபகாரிகளாகவும், புதிய சந்தாதாரரைச் சேர்த்துக்கொடுத்த தேசோபகாரிகளாகவும் ஆகலாம்.

☞ இந்த இருவகை உதவிகளையும் நமது அன்பிற்கினிய கையொப்ப நேயர்களிடமிருந்தும் ஆவலுடன் இதுசமயம் எதிர்பார்க்கின்றோம்.

## சில தவறுதல்கள்.

மனிதனே தவறுதலின் உருவம். நம்மையும் அறியாமலேநேர்ந்துவிட்ட தவறுதல்களுக்கு வருந்துகின்றோமாயினும், இத்தவறுதலினின்றே நாம் புதிய படிப்பினையும் பெற்றுக் கொள்வதால், இனி எச்சரிக்கையுடன் இருப்போம். தவறுகள் நிகழாவாறும் மனப்பூர்வமாக முயல்வோம். ஆதலின், நமது அன்பர்கள் அனைவரும் நம்மையும் நமது "அமிர்த குணபோதினி"யையும் என்ஞான்றும் ஆதரித்துவருமாறு வேண்டுகின்றோம்.

---

ஒவ்வொருவருடைய சுதந்திரமும் விலைமதிப்பேறப் பெற்ற மாணிக்கம்.

## சந்தாவை அனுப்புகையில் இரண்டு குறிப்புகள்.

புது வருட சந்தாவை அனுப்புகையில் மணியாடர் கூப்பனில் தங்களின் சந்தா நெம்பரையும், முழு விலாசத்தையும் தெரிவித்துப் பழய சந்தாதார் என்று குறிப்பிடவேண்டும். புதிதாகச் சேர்த்தனுப்பும் சந்தாதார்களைப் புதிய சந்தாதார் என்று தெரிவிக்கவேண்டும். இதை அன்பர்கள் மறவாதிருக்க வேண்டுகிறோம்.

## வெளிநாடுகளிலுள்ள சந்தாதார்

வெளிநாட்டிலுள்ள அன்பர்கள் இதுகண்டதும் ஐந்தாம் வருட சந்தாவை யனுப்பிப் புது சந்தாதார்களையும் சேர்த்துக்கொடுக்க வேண்டுகிறோம். இப்பொழுதே சந்தாவை அவர்கள் அனுப்பினால்தான் நமக்குக் உரிய காலத்தில் கிடைக்கும்.

## இருகையும் தட்டினால்தான் ஓசையுண்டாகும்

"அமிர்த குணபோதினி"யின் அபிவிர்த்திக்கு எங்களால் இயன்றமட்டும் உழைக்கச் சித்தமாயுள்ளோம். எங்களின் ஜீவியகாலத்தை முற்றிலும் "அமிர்த குணபோதினி"க்கே செலவிடவும் நிச்சயித்திருக்கிறோம். இவ்விதமே அதன் கையொப்ப நேயர்களாகிய நீங்களும் உங்களின் வாழ்நாள் முற்றிலும் "அமிர்த குணபோதினி"யை ஆதரிக்கத் தீர்மானம் செய்துகொண்டு எல்லா வகைகளிலும் நமக்கு உதவிபுரிந்து புதிய ஊக்கம் ஊட்டுமாறு பிரார்த்திக்கின்றோம். இரு கையும் தட்டினால்தான் ஓசையுண்டாகும். ஆதலின் ஐந்தாம் வருட சந்தாவை உடனே அனுப்ப வேண்டுகிறோம். உங்களின் அன்புக்கு எதிர்பார்க்கின்றோம். பத்திராசிரியர்.

## முதலில் எஜமானன்—பிறகு தினமும் அலைந்து திரும்பும் கூலியாள்!

வேலையை ஒருவனிடம் கொடுக்கும்பொழுது நாம் எஜமானனாகவும், வேலையைப் பெறுவோன் மிக்க விசுவாசத்துடன் நடக்கிற கூலியாளாகவும் இருக்கிறான். பிறகோ—கூலிக்காரன் எஜமானனாகி விட, அவனிடம் தந்த வேலையை முடித்துப் பெறுவதற்குப் பலமுறை அலைகிற கூலிக்காரனாக நாம் ஆகிறோம்!

வியாதியே இல்லாத மனிதன் கிடையாது. தனித் துன்பமே கொண்ட மனிதனும் உலகத்தில் கிடையாது. வியாதியும் சுகமும், துன்பமும் இன்பமும் கலந்ததே ஞாலத்து வாழ்க்கை.

---

அதிகம் பழகுவதில் ஒரு சமயம் நெருங்கி நட்பாதலும் உண்டு. மீறிய பகையில் கைக் குத்திலும் சண்டையிலும் முடிவதுமுண்டு. அல்லது ஒருவரது குணங்கள் முழுதும் அறிய சந்தர்ப்பங்கள் கிடைத்து விடுவதுமுண்டு.

# பழமொழிக் குறிப்புகள்

## 2—அற்ப குணம்

(முன்பக்கம் 575-லிருந்து.)

### 168. "எறும்புக்குக் கோட்டாங்கச்சித் தண்ணீர் சமுத்திரம்."

அற்பனுடைய ஜீவியம் அப்படி. அவனுடைய புத்தியும் அப்படி. ஒரு அல்ப சம்பளத்தில் அவன் திருப்திபட்டு அதை ஒரு பெரிய சமுத்திரமாக எண்ணிவிடுவான். நம்மிடம் ஒருவன் யாசிக்கிறான். அவனிடம் ஒரு அணாவோ அரையணாவோ கொடுக்கிறோம். அதை யவன் ஒரு ஸமுத்திரமாக நினைத்து கும்பிடு ஒன்றும் போட்டுவிட்டுப் போய்விடுகிறான். அதைச் சிறு அளவினதாக அல்பமாக நினைக்க அவனுக்குப் பெரிய புத்தியில்லை. இவ்விதமே ஒரு சிறிய ஆபத்து நேர்ந்துகொண்ட காலத்தும், அதையும் ஒரு பெரிய சமுத்திரமாக நினைத்துப் பதறுகிறான். தனது விவேகக் குறைவால் அந்த சிறு ஆபத்தை விலக்கிக்கொள்ள வழி தெரிவதில்லை- அல்ப உள்ளத்திற்குப் பெரிய சிந்தனையும் சமாளிப்பும் உண்டாவது துர்லபம். ஒரு சிறு வஸ்து கீழே விழுந்து உடைந்தாலும், ஒரு சிறு செலவு அதிகமாய் விட்டாலும் அதையும் ஒரு பெரிய ஸமுத்திரமாய் எண்ணிச் சண்டையையும் கலகத்தையும் உண்டாக்குவது அல்பனுடைய ஸ்வபாவம்.

### 169. "கோஞ்சத்திலிருக்கிறதா—குரங்கு மிளகுநீர் குடிக்கிறது?"

இதற்கு ஒரு கதையுண்டு. ஒரு பிச்சைக்காரன் குரங்கு ஒன்றை வெகு பிரியமாய் வளர்த்துவந்தான். அவன் ஜீவனத்திற்கு அது ஒரு உதவியாயிருந்தது. அதன் வயிற்றில் ஏதோ ஜீரணக் கோளாறு கண்டு நாளுக்கு நாள் இளைத்துப் போயிற்று. அதற்கு மிளகுநீர் கஷாயம் கொடுத்தால் குணமாகுமென்று சொல்ல, பிச்சைக்காரனும் அவ்விதமே மிளகு கஷாயத்தைக் குரங்கின் வாய்க்குள் ஊற்றப் பார்த்தான். அது முடியவேயில்லை. பிறகு சிலரைத் துணைக்கு வைத்துக்கொண்டு குரங்கை அழுத்திப் பிடித்து வாய்க்குள் கட்டையை வைத்து அதன் சந்தில் மிளகு கஷாயத்தை ஒவ்வொரு சங்காக ஊற்றுவதற்குள் வெகு பாடான பாடாய்விட்டது. கொஞ்சம் கஷாயம் கீழே கொட்டுண்டும் போனது. இதுபோலவே, அற்பர்களுக்கு நற்புத்தி புகட்டுவது வெகு கஷ்டமாயிருப்பதுடன், அவர்களும் அதை ஏற்றுக்கொள்வதில்லை. அவர்களின் துஷ்ட புத்தியும் போவதில்லை. விருத்தியுமில்லை.

---

இளமையில் ஏதோ தெரியாமல் ஓர் தவறுதல் செய்துவிட, அதை மற்றவர்கள் வெகு காலத்திற்குப் பிறகும் மறக்காமல் கிளறிக் கிளறிக் காட்டி நோக வைத்து, அதை ஒரு பெருமையாய் நினைத்துக்கொள்கிறார்கள்.

170. "கடல் நீர் நிறைந்து ஆவதென்ன,
காஞ்சிரை பழுத்தாவதென்ன?"

இவற்றால் மற்றவர்களுக்கு எத்தகைய பயனும் விளையமாட்டா. அற்பர்கள் புதிய செல்வம் கூடித் தனவந்தர்களானபோதிலும், பெரிய மனை மெத்தை உப்பரிக்கையில் வாழ்ந்தபோதிலும், அதனால் மற்றவர்களுக்கு எவ்வித உபகாரமு மில்லை. பழைய பந்துக்களை அவர்கள் எட்டிப் பாரார். தமது புது செல்வத்தின் புது கௌரதையில் புகுந்துகொண்ட உயரிய புது இடத்துச் சம்பந்தங்களோடு மட்டுமே யொட்டி நிற்பார். அவர்களால் ஏனையோருக்கு எவ்வித சௌக்கியமுமில்லை; உதவியுமில்லை; துணையுமில்லை; ஏதுமில்லை.

5821

171. "கடற்கரை தாழங்காய் கீழ்தோங்கி என்ன,
மேல்தோங்கி என்ன?"

அதை நாம் எவ்விதம் அடையமுடியும்? அதைப் பெறச் சென்றால் நமக்கு விளைவது ஆபத்துதான். அது எப்படித் தொங்கினாலும் அதனால் நமக்கு ஒரு பயனும் இல்லை. அவ்விதமே அற்பரது கையிலுள்ள பொருளாலும் நமக்கு நன்மையில்லை. நமது தேவைகட்கு அது உதவவுமாட்டாது.

172. "ஏறச்சொன்னால் எருதுககுக் கோபம்,
இறங்கச்சொன்னால் முடவனுக்குக் கோபம்."

இவ்விதம் இரண்டு வழியிலும் திண்டாடி எதைச் செய்வது, எதைச் செய்யாது விடுவதென்று திகைக்க நேருகிற சமயங்களும் உண்டு. இது அல்ப சகவாசத்தில் உண்டாகிற கஷ்டங்கள். அல்ப சகவாசத்திற்கு நாம் எத்தனையோ அஞ்சியும் உள்ளம் நடுங்கியும் தூரப்போய் விலகிக்கொண்டும் இருந்தபோதிலும் காலபேதத்தின் இயல்பால் அந்த அற்பர்களிடம் இரக்கப்பட்டோ, கற்கண்டுக் கட்டிபோல் அப்போது தித்திக்கிற அவர்களின் பேச்சால் மயங்கியோ எவ்விதமோ ஒரு சங்கதியில் அற்பர்களிடம் அகப்பட்டுக் கொள்ளும்படியாகிறது. அப்படி அகப்பட்டுக்கொள்ளும் பொழுது—அவர்களுடன் சேர்ந்தாலும் பகை வருகிறது, சேராது விலகிவிடினும் விரோதம் தொடங்கிப் பகையாகிறது. இவ்விதம் எவ்வழி போனாலும் அற்பர்களுடைய பகையும் எதிர்ப்பும் உண்டாகிக்கொள்ளுகிறது. நாம் மோசம்போய் அவர்களிடம் ஏமாறிச் சிக்கியபிறகு சிந்தித்தாவதென்ன? நம்மால் ஆனவரையும் சாந்தமாகவே விலகி அவர்களுடைய கோபத்துக்கு ஆளாகாமல் ஒதுங்கிச் சொள்வதையே முக்கியமாகப் பார்க்கவேண்டும். ஏனென்றால், அல்ப சகவாசம் அவ்வளவு கெட்டதா யிருக்கிறது. ஒரு சுமை வண்டிக்காரன் நொண்டி நொண்டி நடந்து செல்லும் ஒருவனைக் கண்டான். வண்டிக்காரன் மூன்று மைல் தூரம் வரையில் போகவேண்டும். இரண்டாவது மைலில் ஓர் இடத்தில் இரண்டு மூட்டைகளை ஏற்றிக்கொள்ளவேண்டும். அதுவரையில் அந்த

---

ஒரு பத்திரிகையின் உதவி ஆசிரியர்கள் எழுதும் விஷயங்களை யெல்லாம் பத்திராசிரியரே சுயமாய் வரைவதுபோல் வெளிக்குக் காட்டி மயக்குவிக்கப்படுகிறது. உதவி ஆசிரியர் திரைக்குள்ளிருப்பவர் போலும்! பாவம்!!

நொண்டியை வண்டியில் ஏற்றிப்போக எண்ணி எவ்வளவு தூரம் போக வேண்டுமென்று அவனைக் கேட்க, அந்த நொண்டி மூன்று மைல் போக வேண்டுமென்றான். அதற்கு வண்டிக்காரன் பாவம் நொண்டி நொண்டி நடக்கிறாய். 2-வது மைலில் இறங்கிவிடுவதானால் உன்னைப் பிரியத்தோடும் ஏற்றிச் செல்கிறேனென்ன, அதற்கு அவனும் சம்மதித்தான். அவன் ஏறுவதைப் பார்த்து சுமை அதிகமாகிறதென்று எருது கோபித்து முறட்டுத்தனம் செய்தது. பிறகு இரண்டாவது மைல் வந்ததும் வண்டிக்காரன் மூட்டைகளை ஏற்றுவதற்காக நொண்டியை இறங்கும்படிக் கூற, அதற்கு நொண்டி இவ்வளவு தூரம் ஏற்றிவந்த நீ இன்னும் ஒரு மைல் ஏற்றிப்போகக்கூடாதா என்று ஏசிப்பேசினான். இவ்வளவு தூரம் வரையில் புண்ணியத்துக்கு ஏற்றி வந்தானே யென்கிற நன்றியறிவைக் காணோம். இதை வண்டிக்காரன் பார்த்து "ஏறச்சொன்னால் எருதுக்குக் கோபம், இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம்" நான் என்ன செய்யட்டும் என்று வருந்தினான். ஆகவே, அற்பர்களுக்கு என்ன நன்மை செய்தாலும் பயனில்லை. அது விரோதத்திலேயே முடியுமாதலின் அற்ப சகவாசமே கூடாது. (தொடரும்.)

# சென்றமாதம்

**கனம் படேலின் வாதம்.**

"நிஜத்தைச் சொல்லி நெடுந்தூரம் போகலாம்" என்று இந்திய சட்ட சபைத் தலைவரான கனம் படேல் மடமடவென்று இறங்கிவிட்டார். இந்திய சட்டசபை மண்டபத்திற்குள் போலீஸார் வரக்கூடாதென்பதும், சட்டசபைச் சிப்பந்திகளே காவல் இருக்கவேண்டுமென்பதும் அவர் கக்ஷி. அங்கே போலீஸார் பாதுகாப்பு அவசியம் வேண்டுமென்பது ஸர்க்காரின் கக்ஷி. கனம் படேல் இந்தியராயில்லாமல் ஆங்கிலேயராயிருந்தால் ஒருசமயம் அவர் ஜெயிக்கலாம். அதுவும் நிச்சயிக்க முடியவில்லை. இப்படி ஒரு பெரிய விவாதம் 1905-ம் வருஷத்தில் வந்தது. இராஜப் பிரதிநிதியான லார்ட் கர்ஸன் ராணுவச் செலவை அதிகப்படுத்த மறுத்தார். இந்திய சேனாதிபதியான லார்ட் கிச்சனர் அந்தச் செலவை அதிகப்படுத்தவேண்டுமென்றார். விவாதம் பலப்பட்டுத் தங்கள் அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்ளாவிடில் வேலையை ராஜிநாமா செய்வதாய் இருவரும் இந்தியா மந்திரிக்குத் தெரிவிக்க, அவர் லார்ட் கிச்சனரை ஆதரிக்கவே, லார்ட் கர்ஸன் தமது பதவியை ராஜிநாமா செய்ய நேர்ந்து தோல்வியுற்றார். இதுபோலவே, கனம் படேல் மகா திடநெஞ்சினராயினும் எப்படி முடிகிறதோ?

---

சொல்லியதுபோல் நட என்பர். நடந்தும், நடத்தியும் காட்டிய விஷயங்களே அனுபவ உருவாய் "அமிர்த குணபோதினி"யை அலங்கரிக்கின்றன.

"மிஞ்சிய கருமம் அஞ்சச் செய்யும்" என்பதுபோல, பொதுவாகவே இப்பொழுது காங்கிரஸ் சபையின் கொள்கைகளைப்பற்றி ஜனங்கள் அஞ்சியே நிற்கிறார்கள். இராஜப் பிரதிநிதியும் குடியேற்ற நாட்டந்தஸ்தை இந்தியா விரும்புவதைத் தெரிவித்துக் கொள்ள ஒரு சந்தர்ப்பத்தையே சர்வ கட்சி மகாநாடு உண்டாக்குமன்றி குடியேற்ற நாட்டந்தஸ்தை இப்போதே கொடுப்பதென்பதாய்ப் பொருளல்லவென்று தெரிவித்துவிட்டார். ஒரு லட்சியத்தை வெளியிட்டதிலிருந்து உடனே அதை அடைந்துவிடப் போகிறதாக ஏற்பட்டுவிடாதென்றும், சட்டமறுப்பு என்பது சட்டத்தை மீறிய செய்கையேயென்றும், சட்டத்தையும் அமைதியையும் காக்கத் தமக்குள்ள முழுப்பொறுப்பையும் வகித்துவிடப்போவதாகவும் இராஜப்பிரதிநிதி கூறியிருக்கிறார். இவ்வருஷக் காங்கிரஸ் நடத்த இடம் கிடைக்குமாவென்றுகூடக் கவலைப்படவேண்டியிருக்கிறது. அடக்குமுறையின் அறிகுறியாக சுபாஷ்பாபு முதலிய காங்கிரஸ் பிரமுகர்களும் சிறைசென்றுவிட்டனர். ஒரு வருஷ கடின சிக்ஷை.

**காங்கிரஸ் வகையினருக்குச் சோதனை காலம்**

ஃ

"மின்னுக்கெல்லாம் பின்னுக்குமழை" யென்று பூரண சுயேச்சா தினத்தை ஜனவரிமாதம் 26-ம் தேதி இந்தியா முற்றிலும் கொண்டாடினர். அந்த சமயம் எந்தப் பிரஸங்கமும் செய்யக்கூடாதென்று ஏற்பாடு செய்திருந்ததால் கலவரமின்றி நடந்தேறிற்று. இது கொண்டுவிட்டபிறகு மணமகன்-மணமகளுடைய குலம்பேசுகிற சங்கதி. கொண்டைக்குத் தக்க பூதான் சரி.

**பூரண சுயேச்சா தினம்.**

ஃ

"வெற்றிலைக்குத் தண்ணீரும், வேசைக்கு மஞ்சளும் போல" ஆண்மையற்றவர்களுக்குக் குரங்கின் பீஜம் துணையாக்கும்! அதின் பீஜத்தை வைத்துத் தைத்துவிடில் இழந்த வாலிபம் திரும்பிவிடுமென்று சொல்லப்படுகிறது. பம்பாயில் 24-வயதுள்ள இந்திய வக்கீலை ஒரு மேஜையிலும், குளோபாம் கொடுத்த ஆண் குரங்கை மற்றொரு மேஜையிலும் படுக்கவைத்து குரங்கின் பீஜத்தை எடுத்து வக்கீலின் சரீரத்தில் வைத்துத் தைக்கப்பட்டது. இதைக் காண 200-வைத்தியர்கள் வந்திருந்தனர். இந்த சிகிச்சையை நடத்த டாக்டர் சர்ஜ் வொரனப் அந்த குரங்கைப் பாரீஸிலிருந்தும் கொண்டுவந்திருந்தார். சிகிச்சை மிக்க அபூர்வமானாலும், இதுவெல்லாம் பணப்பையினுடைய ஒரு மகிமையல்லவா? இந்தியாவில் இதுதான் முதல் சிகிச்சையாம்—சொத்துள்ளவரது சிகிச்சையாம்! சொத்தில்லாத ஏழைகளுக்கு இந்த சிகிச்சை கிடைக்குமா? தர்ம வைத்திய சாலைகளில் கூட வைத்தியரது தலைப்பாகை பெரிதேதவிர, ஏழைகட்குத்தக்க மருந்து காணோமே தேவா!

**குரங்கு சாக— மனிதன் வாலிப மாக.**

---

நீ எதிர்ப்பதற்கு மேற்பட்டிருக்கிற சக்தியுள்ளவனை உன் வீட்டுக்குள் நுழையவிட்டுக்கொள்ளாதே. பிறகு அவனை வெளியேற்றுவது வெகு கஷ்டமாய்விடும். ஆனால் எதற்கும் கடவுள் குறிப்பிட்ட ஒரு முடிவு காலம் உண்டு.



# நமது கதாப் பிரஸங்கி.

## “ஹா ! எனது பெட்டி !”

அவ்வருடமும் நான் ஏமாறிப் போய் பி. ஏ. பரீட்சையில் தோல்வி அடைந்தேன். இரண்டாவது வருடமும் நான் தவறியதால் என் தந்தையின் கோபம் பன்மடங்கு அதிகரித்தது. அன்று அவர் பொழிந்த பிரசங்கமாரிக்கு எல்லையேயில்லை. முதலாவது வகுப்பு முதல் ‘ஸ்கூல் பைனல்’ வரையில் ஒரு பரீட்சையிலாயினும் தவறாது தேறிக் கொண்டுவந்த நான் ஆசாபங்கப்பட்டு வருந்தினேன்.

‘ரிஸல்ட்’ வெளியான தினம் இரவு நான் தனியாய் அறையில் படுத்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது மணி பதினொன்று இருக்கும். வீட்டிலுள்ளவர்கள் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தபடியால், எங்கும் அமைதி நிறைந்திருந்தது. எனக்கு மாத்திரம் தூக்கம் வரவில்லை. பகலில் என் தந்தை தொடுத்த கூரிய வேலாயுதங்களாகிய சொற்களும், தோழர்களோடு அலைந்து நடந்து விநோத வேடிக்கைகளில் ஈடுபட்டு வீணே போக்கிய அரிய நாட்களும், பரீட்சையில் என்னுடன் சென்று தேறிய தோழர்களின் சந்தோஷ ஆரவாரமும், என் வாழ்நாளின் குன்றி மங்கிய இனிய நோக்கங்களும், கடலின் அலைபோல் ஒன்றின்பின் ஒன்றாக துயர் நிறைந்த என் மனதில் தோன்றித் தோன்றி மறைந்துகொண்டிருந்தன. சூறைக் காற்றில் ஆலிலை போல் தத்தளிக்கும் என் மனதை அடக்க இயலாது சாளரத்தின் வழியாய் நோக்கியபோது, நீல நிறவானத்தில் விண்மீன்களினிடையே மிக்க ரமணீயமாய் திகழ்ந்துகொண்டிருந்த அழகிய முழுமதியமும் பரிகாச சூசகமாய் என்னைக் கூர்ந்து நோக்குவது போல் எனக்குத் தோன்றியது. இவ்வாறு புண்பட்ட மனத்தினனாய் படுக்கையில் படுத்துப் புரண்டுகொண்டிருக்கும்போது வாசற்கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. உடனே எழுந்து சென்று கதவைத் திறந்தேன். ஆங்கு கையில் பிடித்த தந்தியுடன் ஒரு தபாற்காரன் நின்றுகொண்டிருந்தான். நான் வெகு ஆவலோடு தந்தியை வாங்கிப் பிரித்துப் பார்த்தேன். அதில் பின்வருமாறு வரையப்பட்டிருந்தது :—

“நீ பரீட்சையில தவறியதைப் பற்றி அறிந்து விசனிக்கிறேன். நீ இங்கு வந்தால் ‘இஞ்சினீயரிங்’ காலேஜில் படிக்கலாம். புறப்படு.”

கல்கத்தாவில் வசிக்கும் என் நண்பனிடமிருந்து வந்த இத்தந்தியைப் படித்ததும் நான் அளவற்ற மகிழ்ச்சி

---

“கதிரவன் மறைந்தனனே-காரிருள் பரந்ததுவே ;—பறவை பாட் டடங்கினவே—பகற்செய்வான் அடங்கினனே”. இருளில் என் செய்வதோ !

யடைந்தேன். மறுநாள் என் தந்தையிடத்தில் தந்தியைக் காட்டிக் கல்கத்தாவிற்குச் செல்ல அனுமதி கேட்டேன். அவர் முதலில் என் வேண்டுகோளுக் கிணங்கவில்லை யாயினும், நாளடைவில் அவர் மனதைத் திடப்படுத்திக்கொண்டு எனக்குப் போக விடை கொடுத்தார். நான் அன்றே புறப்பட நினைத்து பிரயாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளனைத்தும் செய்தேன். முதலில் நான் புறப்பட்டு விட்டதாக என் நண்பனுக்கு தந்தி அடித்துவிட்டு முக்கியமாய் வேண்டிய சாமான்களை யெல்லாம் என் கைப் பெட்டியில் வைத்தேன். எல்லாம் சித்தமாக்கியபின் "போய் வருகிறேன்" என்று என் பெற்றோர்களிடம் சொல்லிக்கொண்டு என் பெட்டியோடு வண்டி யேறினேன். அப்பொழுது என் மனதில் குடிகொண்டிருந்த ஸந்தோஷம் விஸனமாக மாறியது. பெற்றோரை விட்டுப் பிரிகிறோமே யென்று ஏங்கினேன். "பிரியும்போது உண்டாகும் துயரத்தைப்போல் ஸகித்துக்கொள்ள முடியாத துயரம் வேறே யில்லை." யென்ற நெல்ஸனின் அமுதவாக்கு என் நினைவுக்கு வந்தது. அது நன்றாகப்பொருந்திய உண்மையை உடையதென்பதை அப்பொழுதே உணர்ந்தேன். நான் க்ஷேமமாய் இருக்க வேண்டுமென்று என் தாய், ஊரிலுள்ள தெய்வங்களை யெல்லாம் பிரார்த்தித்துக் கொண்டாள். அடிக்கடி கடிதம் போடும்படி என்னைப் பல தடவை கேட்டுக்கொண்டாள். அவள் கண்களிலிருந்து நீர் வடிந்தது. நான் துயரம் நிறைந்த தாய்முகம் கண்டு கலங்கினேன்.

" நீ கவலையுறாதே ; அவன் கல்கத்தாவுக்கு செல்வது மிகவும் நல்லது; அதனால் அநேக நல்ல விஷயங்களில் பழக்கமுண்டாகும். அவன் சென்று சீக்கிரமே வந்துவிடுவான்" என்று ஆறுதல் கூறித் தாயாரைத் தேற்றினார் என் தந்தை. ஆனால் அவர் இதயத்திலும் பெருங் கவலை குடிகொண்டிருந்ததென்பது அவரது முகத் தோற்றத்தினால் நன்கு விளங்கியது.

ஒரே மகன் ; பெரும் ஆஸ்திக்குப் பாத்தியஸ்தன் ; உலக நாயகனின் பாத பத்மங்களைக் கழுவிய கண்ணீரின் பலனாய்ப் பிறந்தவன் இவற்றை யெல்லாம் நினைத்தால் ஈசா! அவர்கள் எங்ஙனம் சகிப்பர்?

மீண்டியும் வீட்டை விட்டுப் புறப்பட்டு வேகமாகச் சென்று ரயில்வே ஸ்டேஷனை அடைந்தது. கல்கத்தாவிற்குச் செல்லும் வண்டித் தொடர் புறப்பட இன்னும் அரை மணிநேரமிருந்தது. தந்தையிடமிருந்து கிடைத்த மூன்று - நூறு ரூபாய் நோட்டுகளையும் பத்திரமாய் நான் பெட்டிக்குள் வைத்தேன். அப்பால் வண்டியோட்டிக்குக் கூலி கொடுத்து விட்டு டிக்கெட் வாங்குவதற்கு ஓடினேன்.

டிக்கட் கொடுக்கும் ஜன்னலின் அருகில் ஜனங்கள் மோதிக்கொண்டும் முட்டிக்கொண்டு மிருந்தார்கள். முன்னொரு நாள் கூட்டத்தில் சிக்கிக் கொண்டு பட்ட நரக வாதனை என் நினைவுக்கு வரவே, ஜன்னலருகே செல்ல எனக்குத் துணிவு ஏற்படவில்லை. ஆனால் டிக்கட் வாங்க வேண்மே? டிக்கட்டு இல்லாமய் பிரயாணம் செய்ய முடியுமா? உடனே அருகிலிருந்த போர்ட்டரை அன்புடன் அழைத்து அவனுக்குத் தொலைக்க வேண்டியதை மகிழ்வுடன் அழுது விட்டு, ஒரு டிக்கட் எடுக்கச் சொல்

எங்கு போனாலும் தன்னலமும் விஷமமுமே தான்.

லிக் காசையும் கொடுத்தேன். அவன் தனது அதிகாரத்தைப் பிரயோகித்து க்கூட்டத்தைப் பலமாய் இடித்துத் தள்ளிக் கீழே விழுந்த மனிதரை மிதித்துக்கொண்டு உள் நுழைந்து டிக்கெட் வாங்கி வந்து என்னிடம் கொடுத்தான். நான் தக்ஷணமே என் கைப்பெட்டியைத் தூக்கிக்கொண்டு அவசரமாக வண்டியேற முயன்ற போது, உள்ளே இருந்தவர்கள் "இங்கே இடமில்லே; வேறு வண்டிக்குப் போங்கள்" என்று என் நெஞ்சில் கைகளை வைத்தழுத்தித் தள்ள, அதே சமயத்தில் பின்னுலிருந்து பிரயாணிகள் "உள்ளே போயென்யா! குட்டிச் சுவர் மாதிரி குறுக்கே நிற்கிருயே!" என்று 'வசைபாடி' முன்னே தள்ள, நான் 'இருதலைக் கொள்ளியினிடை யகப்பட்ட எறும்புபோல் தயங்கி மூச்சு முட்டித் திக்குமுக்காடி நிற்க, அதே நிமிடம் பிரயாணிகள் இன்னும் பலமாய் இடித்துத் தள்ள, நான் அப்படியே அந்தரத்தில் கிளம்பி வண்டியின் உட்புறம் குப்புற விழுந்தேன். என் கைப்பெட்டி வழியிலேயே என்னிடம் விடை பெற்றுக்கொண்டு நெஞ்சிரக்கமற்ற கொடியர் கூட்டத்தில் திடீரென்று பாய, ஒருவர் தலை உடைந்து இரத்தம் ஆருய்ப் பெருகியது. இவ்வாறு ஹிம்சைக் கடலை ஒருவாறு நீந்திக் கரையேறின நான் சற்று சமாளித்துக்கொண்டு எழுந்து மிகவும் சிரமப்பட்டுப் பெட்டியைக் கண்டுபிடித்துத் தகுதியான இடத்தில் உட்கார்ந்து நிதானமாகப் பார்க்கையில், வண்டியில் இன்னும் மூன்றுபேருக்கு இருக்க இடமிருந்தது. அப்போது பிரயாணி யொருவர், இடுப்பில் குழந்தையுடனும், கையில் மூட்டையுடனும் அவசரமாக ஓடிவந்து வண்டியிலேற முயல, புனிதமான கதர்ஆடை அணிந்துகொண்டு ஒற்றுமையா யிருக்கவேண்டுமெனப் பொதுமன்றங்களில் பிரசங்கமாரி பொழிந்தும், பத்திரிகையில் எழுதியும் கொண்டிருப்பவரான புண்ணிய சீலர்கள் இருவர் உடனே பாய்ந்து, "என்ன ஓய்! பக்கத்து வண்டியைப் பார்க்காமல் துரு (Through) வாய்ப் போகும் எங்களிடம் வந்து தொந்தரவு கொடுக்கிறீரே!" என்று அவரை ஒரே தள்ளாய்த் தள்ள, அந்த சாது பிரயாணி "ஐயோ! என் குழந்தை!" என்று பரிதாபமாக அலறிக்கொண்டு தரையில் விழ, குழந்தையும் கதற வண்டியும் நகர ஆரம்பித்துவிட்டது.

இவ்வாறு பிரயாணிகள் சகிப்புத் தன்மையின்றி ஒருவர்க்கொருவர் இன்னும் எத்தனையோ எண்ணத் தொலையாத நெருக்கடிகளைச் செய்து இடுக்கணுறுவதையும் பார்த்தேன். அவற்றை அனுபவத்தால் ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ளலாம். முடிவில் இறங்கவேண்டிய ஸ்டேஷன் வந்ததும் நான் கைப்பெட்டியைத் தூக்கிக்கொண்டு படாத பாடு பட்டு வண்டியினின் றிறங்கினேன். அச்சமயம், "சுந்தரம்! ஊரில் எல்லோரும் சௌக்கியமா?" என்ற அன்பு ததும்பிய தொனி கேட்டதும் பிளாட்பாரத்திலிருந்து என் நண்பன் ஓடி வந்து என்னைக் கட்டிக்கொண்டான். அவன் ஆவலோடு கேட்ட கேள்விகளுக்கு நான் முறையே பதிலளித்தேன். பிறகு அவன் என்னை அழைத்துக்கொண்டு வீடுபோய்ச்சேர்ந்தான்.

மாலை ஐந்துமணி சமயம். நான் என் நண்பன் வீட்டின் அருகாமையிலுள்ள ஓர் அழகிய நந்தவனத்தின் மத்தியில், விரிந்து பரந்து அடர்ந்து

---

காணும் ஒவ்வொரு உருவினிடத்தும் ஒவ்வொரு சுவை கண்டிடக் கருதிடுமாங் காமுகர்தம் நோக்கு.

படர்ந்த மரஞ்செடி கொடிகளினடியில் அழகுற அமைந்த அரிய ஆசனமொன்றில் அமர்ந்து, என்னைச் சுற்றிலும் இருந்த கண்ணுக்கினிய இயற்கைக் காட்சியின் அழகில் ஈடுபட்டு பரவசமெய்தியவனு யிருக்கையில், "எனக்கு என்னென்ன வாங்கி வந்தாய்?" என்று புன்னகையுடன் வினவிக்கொண்டே எனது இன்னுயிர் நண்பன் என்னருகே அமர்ந்தான்.

"அனுபவ ஞான கதாசிரியர் ஒருவர் கனிவுடனியற்றிய 'ஆனந்த கதா கல்பகம், விசித்திரத் துப்பறியுங் கண், பன்னிரு மரகதங்களின் மர்மம்' என்னும் அரிய அபூர்வ புஸ்தகங்களை உனக்காக வாங்கிவந்துள்ளேன்". என்று கூறி விரைந்தோடி வீட்டிற்குள் சென்று என் கைப்பெட்டியைத் திறக்க முயன்றேன். பெட்டி திறக்கவில்லை. பெட்டி மாறிவிட்டதென்பதை அப்பொழுதே உணர்ந்தேன். உடனே ஆற்ற முடியாத துயரத்தோடு "ஹா! எனது பெட்டி!" என்று பலமாய்க் கூவினேன். அதே நிமிடம், "சுந்தரம்! சுந்தரம்! எழுந்திரு" என்ற சொற்களைக் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தேன். என் படுக்கையருகில் நின்றுகொண்டிருந்த என் தந்தை "ஹா! எனது பெட்டி என்று சத்தமிட்டாயே என்ன?" என்று வினவினர்.

"நான் ஒரு கனவு கண்டேன்" என்று கூறி, அவரிடம் கனவில்கண்ட விஷயங்களைத் தெரிவித்தேன். அது கேட்டு அவர் உடல் குலுங்க நகைத்தார். நமது வாழ்வின் ஸஞ்சலங்களும், கண்ணீர்களும், ஏமாற்றங்களும், பிரிவினைகளும் இந்தக் கனவுபோல் மாறி மறையக்கூடாதா?

த. சு. சங்கரலிங்கம்.

## மௌனமே மேல்.

தன்னால் கூடவில்லை என்று தெரிவிப்பினும் தப்பிதம். சமயபேதம்—ஆதலின் முடியாது என்று வரைவதும் குற்றச் சொல்லாகிவிடும். உள்ள கஷ்டம் உரைப்பினும் நம்புவது அருமை. நாம் எழுதும் கடிதத்தைத் தமக்கு ஒரு கௌரவக் குறைவாக மற்றவர் நினைப்பரென்று தோன்றுகையில், நமது எழுத்து—பேச்சு—இவற்றைவிட மௌனமே மேல். "எழுதியதற்குப் பதில் வரவில்லையே, என்ன அசந்தர்ப்பமோ" என்று மட்டுமே நினைத்துக்கொள்ள அந்த நமது மௌனம் செய்துவிடும். தபாலுக்குக் காசைத் தந்துத் திருப்தியற்ற கடிதம் எழுதி வீணே கெட்டவனுவதிலும் மௌனம் ஸர்வோத்தமம். அதுவே குற்றமில்லாதிருக்கவழி.

வேதாந்த தத்வவிசாரம் எவ்வளவு மனோகரமானது! அதை யுணர்வதற்கு இதுகாறும் நாம் பக்குவ அறிவு பெருமற் போனதென்னவோ?




(517-ம் பக்கத் தொடர்ச்சி.)

## Letter XXIII.

### The Answer.

*Dear Jack,*

I received your very kind letter, but I don't know what to say in answer. Although I would be glad to marry, yet you men are so deceiving, that there is no such thing as trusting you. There is Tom Timber, the carpenter, and Jack Hammer, the smith, who have not been married above six months, and every night come home drunk, and beat their wives. What a miserable life is that, Jack, and how do I know but you may be as bad to me? How do I know but you like them, may get drunk every night; and beat me black and blue before morning? I do assure you, Jack, if I thought that would be the case, I would scrub floops and scour sancepans as long as I live. But possibly you may

## 23-வது கடிதம்.

### அதற்கு உத்தரம்.

அன்புள்ள ஜாக்,

நீர் மிகுந்த அன்போடு எழுதிய கடிதம் வந்து சேர்ந்ததாலும், அதற்கு உத்தரம் சொல்லும் வகை எனக்குத் தெரியவில்லை. கல்யாணம் செய்து கொள்ளுதல் எனக்கு இஷ்டமாயிருந்தபோதிலும், புருஷராகிய நீங்கள் மிகவும் மோசக்காரராதலால் உங்களை நம்பப்போகாது. தச்சனாகிய டோம் டிம்பர் என்பவனும், கருமானாகிய ஜாக்கு ஆமர் என்பவனும் கலியாணம் செய்து இன்னும் ஆறு மாதம் ஆகாதிருக்க இரவுதோறும் குடித்துவிட்டு வீட்டுக்கு வந்து தங்கள் மனையரை அடிக்கிறார்கள், இதென்ன நிர்ப்பாக்கியப் பிழைப்பு? நீரும் அப்படி எனக்குத் துஷ்டனாயிரீர் என்று எனக்கு எப்படித் தெரியும்? நீரும் அவர்களைப்போலப் பிரதி ராத்திரிகளிலும் குடித்துவிட்டுப் பொழுது விடியா முன்னமே கண்ணி கறுக்கும்படியடிக்கிறீரென்று எனக்கு எப்படித் தெரியும்? அப்படி நடக்குமென்று நினைப்பேனாகில், உயிரோடிருக்குமளவும் தரையைப் பெருக்கிக் கறிச்சட்டி கழுவிப் பிழைப்பேனென்று உமக்கு நிச்சயமாகச் சொல்லுகிறேன். ஒரு வேளை நீர் அத்தனை துஷ்டனாயிராமலும் இருக்கலாம். அது எப்

---

"நான் கீழே விழுந்த ஒரு ரோஜாப்புஷ்பத்தின்மீது காலடி வைக்கக் கூடப் பயப்படுவேன்" அத்துணைத் தூய்மையுடனுள்ளது என் ஹிருதயம்.

not be so bad, for there is Will Copper, the brazier, and Jack Trotter, the ass-man, who are both very happy with their wives; they are both home bringing husbands, and have every day a hot joint of meat, and a pot of beer. I know not yet what I should do; but as a like a walk to Hornsey. I will meet you at the Shepherd and Shepherdess on Sunday after dinner, and then we will talk more of the matter.

I am dear Jack,

Your most humble servant

*Sally.*

படியென்றால் கன்னானாகிய உயில் காப்பர் என்பவனும், கழுதைக்காரனாகிய ஜாக்டிராட்டர் என்பவனும் தங்கள் மனைவிமாரோடு மெத்த சுகமாக வாழ்கிறார்கள். அவர்கள் இருவரும் பிரதிதினமும் ஒரு சுட்ட இறைச்சித் துண்டும் ஒரு மொந்தை பீரும், வீட்டுக்குக் கொண்டுவரும் புருஷரா யிருக்கிறார்கள். நான் செய்யவேண்டும் வகை இன்னும் எனக்குத் தெரியவில்லை. ஆனால், ஆரன்சி என்கிற இடத்துக்கு உலாத்தப்போக எனக்கு இஷ்டமாயிருக்கிறபடியால் ஆதிவார மத்தியான போஜனத்திற்குப் பின்பு இடையனிடைச்சி என்கிற இடத்தில் வந்து உம்மைக் காண்பேன். அப்போது நாம் இது காரியத்தைக் குறித்து இன்னும் பேசிக்கொள்ளலாம்.

இங்ஙனம்

அன்புள்ள ஜாக்! உமக்கு மிகுந்த வணக்கமுள்ள சேவகியாகிய சாலி.

ஆங்கிலக் காதலின் லக்ஷணங்களை யறிந்தீர்களா?

---

# பிரஜாநுகூலன்

எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு பத்திராசிரியர்.

இது நாவல்கள் நிறைந்த அநுபவக் களஞ்சியமான சிறந்த மாதப் பத்திரிகை. 1904-ம் வருஷ முதல் 26-வருஷங்களாக நடைபெற்று வருகின்றது. வெகு ருசிகரமான அநுபவங்களுடன் அதி சிலாக்கியமாயிருக்கும். பகங்கள் 32.—"அமிர்த குண போதினி" நேயர்கள் அதன் ஆசிரியர் நடத்தும் பழமையான இப் பத்திரிகையையும் ஆதரிப்பது அவசியம். வருஷ சந்தா ரூபாய் 1.

மாதிரி ஒரு அணா. "பிரஜாநுகூலன்" ஆபீஸ், ஸ்ரீரங்கம்.

---

அன்னியதேச சாமான்களை விற்க இந்தியா ஒரு பெரிய கடைத்தெருவாகி விட்டது! இந்த இழிந்த நிலையினின்றும் விழிப்பெய்தும் நாள் என்றேயோ?

# சிறுமணித்திரள்

எண்ணங்கள் பரவ வெகு காலமானாலும், அவை இறுதியில் சந்தேகமறப் பரவிவிடுகின்றன.

—மலிக் பார்க்கந்தலி.

“கெட்ட நடத்தையுள்ளவர்கள் அநேகமாக நல்ல புத்திசாலிகளாக இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய சாமர்த்தியத்தினால் சில காரியங்களைச் சரியாக நிர்வகிக்கக் கூடும். —மஹாத்மா.

நமது சொந்த நடவடிக்கைகளிலாகட்டும், பொது நடவடிக்கைகளிலாகட்டும், ஸன்மார்க்கத்திற்கு முக்கிய ஸ்தானம் கொடுக்கவேண்டுமென்பதே நமது நாகரீகத்தின் முக்கிய லக்ஷணம்”. —மஹாத்மா.

நாம் இப்பொழுது பயத்தால் பீடிக்கப்பட்டு நமது சொத்துக்களையும் மானத்தையும் பாதுகாக்கக் கூலிக்காரர்களை வைத்துக்கொண்டிருக்கிறோம். —மஹாத்மா.

உயிரைக் கொடுக்கத் துணிவு ஏற்படவேண்டும். ஒருவன் உயிரைக் கொடுக்கத் தயாராகிவிடின் பலாத்காரமான காரியத்தைச் செய்ய அவன் விரும்பமாட்டான். —மஹாத்மா.

தைரியத்துடன் உயிர்கொடுத்தவர்களால் அவர்களுடைய எதிரிகளின் மனமும் மாறுதலடைந்திருக்கிறதென்பதற்கு சரித்திரத்தில் உதாரணம் இருக்கிறது. —மஹாத்மா.

ஸமூகத்தில் ஒவ்வொருவரும் தொழில் செய்வோராக இருக்கவேண்டும். எவரும் சோம்பேரியாகவோ, அல்லது பிறரது உழைப்பால் உண்பவராகவோ இருக்கக்கூடாது.

—பண்டித ஜவஹர்லால்.

முதலாளி வர்க்கத்தினரால் நடத்தப்படும் கைத்தொழிலானது பெரிய பூதம்போலிருக்கிறது. அதற்கு இடைவிடாமல் குடிக்கத் தொழிலாளரது ரத்தம் சப்ளை செய்யப்படுகிறது.

—பண்டித ஜவஹர்லால்.

சீர்திருத்தக்காரர்களின் முதலாவது தலைமுறையை அலக்ஷியம் செய்யலாம். இரண்டாவது தலைமுறையினரைத் துன்புறுத்தலாம். ஆனால், மூன்றாவது தலைமுறையைச் சேர்ந்தவர்கள் உலகத்தையே நடுங்கச் செய்துவிடுவார்கள். —மலிக் பர்க்கத்தலி.

தன் மதிப்புள்ளவர்கள்தான் பிறர் மதிப்புக்குப் பாத்தியமுள்ளவர்களாகிறார்கள்.

ஏதேனும் ஒரு வழியிலாவது சந்தோஷமடைய முடியுமாவென்று பார்க்கப் புகும்போதே அங்கு ஒரு தடங்கல் தென்படுகிறது.

ராஜீயத்துறையிலும், பொது வாழ்விலும் ஒரு கட்சிக்குத் துரோகம் செய்துவிட்டு இன்னொரு கட்சிக்குள் நுழைவோரை ஒருநாளும் ஆதரியாதே.

---

கணவனுக்கு விரோதியை மனைவியும் தனது விரோதியென நினைத்தானானால், பிறர் அந்த வீட்டில் மற்றவரை வசம் செய்து வஞ்சிக்க இடம் இராது. பிரிவு படுவதால் தான் மூன்றாவது மனிதன் உள் நுழைகிறான்.

# புண்யாத்மாவான கழுதை!

ஆபிரிக்கா கண்டத்துள்ள அபிசினியா நாட்டின் வழியாய் ஓர் வியாபாரி தான் அருமையாய் நேசித்து வந்த ஒரு கழுதைமேல் ஏறி யாத்திரை போய்வந்தான். ஒருநாள் அக்கிழவனும் கூட்டு வியாபாரிகளும் ஆங்குவந்து இராத் தங்கி யிருக்கையில் கிழடாகிக் கேவல தசையிலிருந்த அந்தக் கழுதை மாண்டது. கிழ வியாபாரியின் ஒன்பது யாத்திரைக்கு உதவி, அவனுக்கு உயிர்த்துணைபோலிருந்த கழுதையை நாய் நரிகள் தின்னப் போட்டுப்போக மனம் வராமல் அதைப் புதைத்து நல்லடக்கம் செய்யும் விஷயத்தில் உற்ற உதவி புரியத் தன் கூட்டாளிகளைக் கெஞ்சி அடுத்திருந்த மலையடிவாரத்தில் ஒரு குழி வெட்டினார்கள். மயான ஸ்தலம் கற்கள் அடர்ந்த பூமியாதலால் குழியில் எதிர்ப்பட்ட கற்களை உடைக்கவே பாறைக்குள்ளிருந்து ஓர் நீரூற்று சுரந்து வந்தது. கிழவனும் மற்றோருமாய்க் கழுதையை அதில் புதைத்து அதின்மேல் கற்களைக் குவித்துவிட்டு தங்கள் வழியே சென்றார்கள்.

ஃ

இடையில் ஒரு வருஷம் சென்றது. ஓர் நாள் ஆட்டுமந்தையுடன் அவ்விடம் சென்ற இடையர்கள் கற்குவியலையும் உள்ளிருந்து சுரந்து வந்த இனிமையாகிய நீரூற்றையுங் கண்டு சங்கதியை அடுத்த ஊருக்கு அறிவித்தார்கள். எங்கு பிழைப்பு கிடைக்குமோ, எங்கு கடவுளின் பெயரைக்கூறித் தங்களின் வயிற்றைக் கழுவ முடியுமோ, எங்கு புண்ணிய பாவத்தின் பெயரைப் புகன்று பணம் திரட்ட முடியுமோவென்று அதையே ஒரு தொழிலாய், ஒரு ஜீவனமாய்க் கொண்டிருந்த அவ்வூர்ப் பூசாரிகள் உடனே அந்த ஸ்தலம் ஏகி தேவலோகத்துப் புண்யவான்களிலொருவர் மரித்ததாகவும், அவரது அஸ்தியைத் தேவதூதர் ஆங்கு அடக்கம் பண்ணியதாகவும் அனுமானக்கதை நடித்துப் பரப்பினார்கள். ஒரு புலவரும் இக் கருத்தையொட்டிப் பாடல்கள் பாடி அந்த ஸ்தல மகாத்மியத்தை விளக்கிப் பத்து அத்தியாயங்களாக ஒரு புண்ய நூலும் செய்வித்தார்.

ஃ

சீக்கிரத்தில் சுற்றிலுமுள்ள ஜனங்கள் திரள் திரளாகக் கூடிவந்து சமாதியைத் தரிசித்து வணங்கி நீரூற்றைப் பருகினர். நம்பிக்கையின் காரணமாகச் சிலருக்கு இருந்த சில வியாதிகளும் அது தீருநாள் வந்து தீர்ந்தன. சில நீரூற்றுகளுக்குச் சில வியாதிகளைக் குணமசெய்யும் தன்மையுமுண்டென்பது வைத்திய நூற்றுணிபு. விரைவில் ஆங்கு ஓர் கோயில் எழுப்பி நீரூற்றைத் தீர்த்த ஸ்தலமாக்ஞர்கள். வாடிக்கிடந்த பூசாரிகளின் தொந்தியும் உப்பிப் பல மடிப்புகள் விழலாயின! தேசமெங்கும் செய்தி எட்டவும் சப்பாணிகள், குருடர், முடவர் ஆதிய பல நோயாளிகள் அங்கு சென்று தீர்த்தமாடத் தொடங்கினார்கள். அந்நீரூற்றுக்கு ஆரோக்கியம் அளிக்கும் தெய்வீக தத்துவம்

---

வெளிக்கு வெகு ராங்கியே தவிர உள்ளுக்கு வீட்டில் காலணா காய்கறியில்தான் குழம்பு தயாராகிறது. புதிய பணம் காசுக்கும் வழியில்லை!

# வியாபார ரகசியங்கள்.

**1. நெல் உமியில் பற்போடி :—**

**செய்யும் முறை:**—நெல்லி லிருந்து நீக்கப்படும் உமியைச் சட்டி யிலிட்டு வறுத்துக் கருக்கிப் பொடி யாக்கி மெல்லிய துணியால் வஸ்திர காயம் செய்து சுத்தப்படுத்தி இரண்டு ராத்தல் அதாவது 80-தோலா பொடியை எடுத்துக்கொண்டு அதில் சிறிது ரோஸ் அத்தர் தெளித்து, இரண்டுநாட்கள்வரையில் ஒரு பாத்தி ரத்திலிட்டுக் காற்று புகாமல் மூடி வைக்கவும். இந்த இரண்டு நாட்க ளுக்கு இடையில் தைமால் (Thymol) ஒரு அவுன்ஸும், கடையில் விற்கும் சாதாரணக் கட்டி கற்பூரம் ஒரு அவுன்ஸும் தனித்தனியேபொடித்து ஒரு சிறு 4-அவுன்ஸ் சீசாவில் முத லில் தையாலைப் போட்டு, பிறகு கற்பூரத்தைப் போட்டு காற்று புகாத படி கார்க் போட்டு இரண்டு நாள் வைத்தால் முழுதும் திராவகமாய் விடும்.

அத்தர் தெளித்து வாசனை ஏற்றி மூடிவைத்துள்ள மேலே கண்ட உமிப்பொடியில் 3-ம் நாள் மேற்கண்ட படி தயாரித்திருக்கும் திராவகத்தில் $\frac{1}{4}$ அவுன்ஸுக்கு மேல் $\frac{1}{2}$ அவுன்ஸு அளவுக்குக் குறைவாக சிறிது சிறி தாகத் தெளித்துக் கலந்து வாயிலிட் டுப் பார்த்துப் போதுமான காரம் வந்தவுடன் திராவகம் தெளிப்பதை நிறுத்திக்கொள்ளவும்.

இவ்வாறு பக்குவப்பட்டவுடன் சிறு சீசாக்களிலோ தகரடப்பிக ளிலோ நிறைத்து லேபில் வகையரு ஒட்டி விற்பனைக்குத் தயாராக்கிக் கொள்ளலாம். இப் பற்பொடியால் பல் நோய், பல்லறணை, பற்புழு, ஈறு கரைதல், ஈறு வீங்குதல், வாய் நாற் றம், தொண்டைப் புண் முதலியவை களும் நிவர்த்தியாகும். (Thymol) என்பது ஓம உப்பு. சீனு கற்கண்டுக் கட்டிபோலிருக்கும். ஆங்கில மருந் துக் கடைகளில் கிடைக்கும்.

**2. சர்வ படை சங்காரி :—**

**செய்யும் முறை:**—இம்மருந்து கீழ்காணும் முறைப்படி செய்து உப யோகிப்பதால் படை சொரி, அறைக் கடுவன், வண்டு கடி முதலியவைகள் சீக்கிரம் சௌக்கியமாகும்.

$1\frac{1}{2}$ அவுன்ஸ் நல்ல நெய்யில் $\frac{1}{2}$ அவுன்ஸ் பைகார்பனேட் சோடாவும், (Bicarbonate of Soda) ஒரு அவுன்ஸ் பொடித்த சுத்திகரித்த (Purified Sulpher) கெந்தகமும் போட்டு கொஞ்சநேரம் சிறுதீயில் எரித்து நெய்யுருகி மருந்துகள் நன் ருய்க் கலந்தபின் இறக்கிக் காற்றுப் புகாதபடி சீசா அல்லது டப்பிகளில் அடக்கம் செய்து வைத்துக்கொண்டு தினசரி மூன்று நான்கு முறைகள் தோலைப்பற்றிய நோய்களுக்கு மேற் பூச்சாகப் பூச ஆச்சரியப்படத்தக்க விதமாய்ச் சுகம் கிடைக்கும்.

B. வேணுகோபாலசாமி நாயுடு.

---

தன் மனைவி எவரிடத்து அன்பாயிருக்கிருளோ அவளிடத்துக் கணவ னும் அன்பாவான். பிறகு அவள் வெறுத்தால் இவனும் வெறுத்து விலகி விடுவான். எல்லா சங்கதியும் பெண்ணின் கையிலேயே தான்.

---

"அமிர்த குணபோதினி" பிரஸ், 302, தங்கசாலைத்தெரு, சென்னை.—1930.